சுதேசமித்திரன் வாரப்பதிப்பு

பொருளடக்கம்

		பக்கம்
பாக்கியசாலி	எஸ் டி ஸ்ரீநிவாஸன்	7
மழை பெய்யப்போகுது	ராம பெரிய கருப்பன்	11
நறுவிசு	விந்தியா	12
கலாமண்டபம்		15
வாழ்க்கைச்சுழல் (தொடர்கதை)	இந்து	19
உங்கள் காலபலன்	பி வி ராவ்	23
ஹிந்திப் பாடங்கள்	பண்டித்ஜீ	28
தேர்த்தட்டு வார்த்தை	வாரன்	35
உறையிட்ட கடிதம்	ஸ்ரீமதி பத்மா நாராயணன்	37
சிறுவர் பகுதி	எஸ். ரங்கராஜன்	39
அக்பர்கேட்ட கதை	எம். எஸ் சுப்ரமண்ய ஐயர்	43
ஸங்கீத பாரிஜாதம்	பண்டித கிருஷ்ணமாச்சார்யா	45
கண்ணாமூசி	பீ. வீ.	53

“மித்திரன்” வாரப்பதிப்பில் தோன்றும் பெயர்கள், சம்பவங்கள் முதலியன அனைத்தும் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.

கலா மண்டபம்

"கம் பாக் லிட்டில் ஷீபா"

.சன்ற முதல் தேதியிலிருந்து ன்னே ஓடியன் தியேட்டரில் ஓடிக் ரண்டிருக்கும் "கம் பாக் லிட்டில் பா" ஒரு அசாதாரணக் கதை. ில் கதாநாயகியாக நடித்திருக்கும் லி பூத்துக்கு அமெரிக்க அகாடமிப் கிடைத்திருக்கிறது.

ரிசுக்குக் காரணம் என்ன? கதா கி அழகியல்ல, கெட்டிக்காரியு ். இப்படிப்பட்ட ஒரு அசாதார கதாநாயகியின் வேஷத்தை ஒரு ஏற்பதே சுலபமல்ல. ஏற்று நன் நடிப்பது கண்டிப்பாய் கஷ்டம். நடிப்பில், அவலக்ஷண ரூபத்தில் புத்தியில் பார்ப்பவர் மனத்தை க்வைத்துக் கவர்வது எல்லாவற்றை ரிடப் பரம கஷ்டம். அப்பேர்ப் ட கஷ்டமான கலைப் பணியைச் ய்ததற்காக அமெரிக்க அகாடமி லி பூத்துக்குப் பரிசளித்தது.

டாக் டிலானே என்ற வாலிபன் தன்னையும் மீறிய சந்தர்ப்பங்களின் கட்டாயத்தால் லோலா என்பவளை மணக்கிருன். லோலாவுக்கு வெளி அழகு குறைந்தாலும் உள்ளழகு நிரம்ப இருந்தது. கணவனைப் பூர்ண மாகக் காதலித்தாள். ஆனல் அவளைப் பார்த்த போதெல்லாம் டிலானே தன் மண வாழ்க்கைப் பாழடைந்து விட்டதாக நினைக்கிருன். வாழ்க்கையில் சலிப்படைந்து குடிக்கவும் முற்படுகிருன். அவன் செய்த அட்டகாசங்களனைத்தையும் பொறுத்து அவனுக்கு ஷர்லி பூத் சேவை செய்கிருள். பல இன்னல்களை அனுபவித்த பின்பு இறுதியில் அவள் கணவனும் அவள் உண்மைக் காதலை உணர்ந்து அவளுடன் நல்வாழ்க்கை நடத்துகிருன்.

இந்தப் படம் அமெரிக்காவில் பிரமாத வெற்றியடைந்திருக்கிறது. இதிலிருந்து ஒரு ஆச்சரியமான உண்மை வெளியாகிறது. தமிழ்நாட்டின் தவ எழுத்தாளர்கள் 'விபசார மன்னிப்பு'க் கதைகளை எழுத ஆரம்பித்திருக்கும் காலத்தில் பதி சேவையை லக்ஷியமாக வைத்து அமெரிக்கர் படங்களைப் பிடிப்பதும், அப்படங்கள் வெற்றியடைவதும் ஆச்சரியமான, விரும்பத்தக்க,உண்மையல்லவா? இம்மாதிரி உயரிய லக்ஷியங்கள் உள்ள படங்கள் அமெரிக்காவிலிருந்து மேலும் மேலும் வர ஆரம்பிக்குமானல் நம் படங்களின் கதியைப் பற்றி சொல்லத் தேவையே இல்லை என்று நினைக்கிருேம்.

இந்த உயரிய படம் பாரமவுண்ட் தயாரிப்பு.

பாரமவுண்ட் தயாரிப்பான 'கம் பாக் லிட்டில் ஷீபா'வில் ஷர்லிபூத்தின் ஆட்டத்துக்குத் தாளம் போடுகிருர் பர்ட் லங்காஸ்டர்



பம்பாய்ச் செய்திகள்

★

இந்தியத் தாய்

'ஆன்' என்னும் டெக்னி கலர் படத்தைத் தயார் செய்த டைரக்டர் ஸ்ரீ மெஹ்பூப், 'மதர் இந்தியா' (இந்தியத் தாய்) என்னும் படத்தை மூன்று பரிமாணங்களில் எடுக்க உத்தேசித்திருக்கிறார். மூன்று பரிமாணமுள்ள படங்களைத் தயாரிக்க கலர் படங்களுக்குச் செலவழியும் பணத்தைக் காட்டிலும், இரண்டு மூன்று மடங்கு அதிகமாக செலவழியும்.

"காட்" முகூர்த்த விழா

ஸ்ரீ ராஜ்கபூரின் 'ஆ' என்னும் படம் அடுத்த வாரம் வெளிவரும். இப்படத்தின் தமிழ்ப்பிரதியின் பெயர் "அவன்" இந்தத் தமிழ்ப் படம் தென்னிந்தியாவில் இன்னும் இரண்டு மாதங்களில் வெளி வரும். ஸ்ரீ ராஜ்கபூர் இப்பொழுது 'பூட் பாலிஷ்' என்று ஒரு படத்தை எடுத்து வருகிறார். இப்படத்தில் சிறுவர்கள்தான் பிரதானமாகத் தோன்றுவார்கள். இதுவரையில் ஸ்ரீ ராஜ்கபூரும், ஸ்ரீமதி நர்கிஸும் இதில் நடிப்பார்களா வென்று தீர்மானிக்கப்படவில்லை. ஸ்ரீ ராஜ்கபூர் 'காட்' என்னும் அவருடைய அடுத்த படத்தின் முகூர்த்த விழாவை சென்ற வாரம் கொண்டாடினர். இதில் ஸ்ரீ பிரிதிவி ராஜும், ஸ்ரீமதி நர்கிஸும் நடிப்பார்கள்.

—தி. மா. ராமச்சந்திரன்.

ஏ. வி. எம். தயாரிப்பான "பெற்ற தாயி"ல் தாயார் வேஷத்தை ஏற்று நடிக்கிறார் ஜி வரலக்ஷ்மி. அவர் மூக்குக்கண்ணாடியையும் வயோதிகத்தை அறிவுறுத்தும் தலையும் அவருக்கு சிறப்பான தோற்றத்தை அளிக்கின்றன

அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்(அனுப்பப்பட்ட சினிமாப்பட வாடகை தொகை

1951—ல் சினிமாப் படங்களின் வா கைகளுக்காக, அமெரிக்காவுக்கு 38. லட்ச ரூபாயும், பிரிட்டனுக்கு ½. லட்ச ரூபாயும் அனுப்பப்பட்டுள்ள 1952—ல் இந்த வகையில் முறையே 3. லட்ச ரூபாயும் 29,000 ரூபாயும் அனு பப்பட்டது.

★

உலக பிலிம் விழாவில் இந்தியா கலந்துகொள்ளும்

பிரெஞ்சு சர்க்காரின் அழை கிணங்க 6—வது உலக பிலிம் விழா இந்தியா கலந்து கொள்ள உத்தே துள்ளதாக உதவி மந்திரி ஸ்ரீ எஸ். புராகொஹைன் மக்கள் சபையில் க னர்.



அம்மாள் கையால் வைத்தியம் நடக்கிறது. பூர்ணிமாவின் சிகிச்சைக்கு 'ஷாகூபா'வில் உள்ளாகும் கதாநாயகன் பிரேம்நாத்

ஒரே சிட்டிக்கை
REGISTERED TRADE MARK
காலையில் எழுந்தவுடன் சுறுசுறுப்புடனிருக்க
ஒரு சிட்டிக்கை
உடல் சுத்தி செய்து உண்டி அருந்தி உறுதியுடன் உழைப்பிலிறங்க
ஒரு சிட்டிக்கை
பகல் போஜனத்திற்குப்பின் பரவசமடைய
ஒரு சிட்டிக்கை
மனோகரமான மாலை வேளையில் மனநிம்மதியுடனிருக்க
ஒரு சிட்டிக்கை
பெண்டு பிள்ளைகளுடன் உண்டுகளித்து உறங்கப் போகுமுன்
ஒரு சிட்டிக்கை
T.A.S. ரத்தினம் ...பவுன் நிறமுள்ள..... பட்டணம் பொடி
T.A.S. ரத்தினம் பிரதர்ஸ், தபால் பெட்டி 1151, வண்ணாரப் பேட்டை, மதராஸ்.

வாழிய செந்தமிழ்

சுதேசமித்திரன்
வாரப்பதிப்பு

வாழ்க நற்றமிழர்

Vol XXI] விக்ருதி௵ வைகாசிமீ 1௳ ★ 1950-௵ மேமீ 14௳ No. 15

தகராறு தீர்ந்ததா?

சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சிக்குள் மூண்ட தகராறு தற்போதைக்குத் தீர்ந்தது. உத்தரப் பிரதேசத்தைத் தொடர்ந்து சென்னைக் கட்சியும் பிளவு பட்டிருந்தால், அது எவ்வளவு கோரமாயிருக்கும் என்று சொல்லத் தேவையில்லை. அந்த துர்ப்பாக்கியம் தற்காலிகமாக வேனும் தவிர்க்கப்பட்டது திருப்திகரமான தாகும். ஆனாலும் அதை தீர்ந்ததான ஒரு தகராறாக மதிப்பதே பொருத்தம். காங்கிரஸ் காரியக் கமிட்டியின் தீர்மானத்தை தெளிவாக்கக்கூடிய விவரங்கள் கிடைக்காத நிலையில் வேறுவிதமாக எதையும் கொள்வதற்கில்லை.

அத்தீர்மானம் கூறுவதெல்லாம் இதுதான்: ‘பண்டித நேரு, சர்தார் படேல் இவர்களது ஆலோசனைப்படி நடக்க ஸ்ரீ பிரகாசம் ஒப்புக்கொண்டிருப்பதால், அவர் மீதும், அவரது கோஷ்டியின் மீதும் பிறப்பித்த ஒழுங்கு நடவடிக்கை நோட்டீஸை வாபஸ் செய்துவிடலாம்’ அவ்விரு தலைவர்களும ஸ்ரீ பிரகாசத்துக்குக் கூறியுள்ள ஆலோசனை என்னவென்று தெரியவில்லை. சென்னை மந்திரிகள் மீது தாம் தொடுத்த குற்றச்சாட்டுகளை முறைப்படி விசாரிக்க இதுவரை தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படவில்லையென்பதே ஸ்ரீ பிரகாசத்தின் முக்கியமான புகார். ஆனால் இதுபற்றி ஏற்கெனவே பண்டித நேரு, சர்தார் படேல், பாபு ராஜேந்திரப் பிரசாத் ஆகிய மூவரும் தீர்ப்புக் கூறிவிட்டது அனைவருக்கும தெரியும். இப்போது அத்தீர்ப்பைப் புனராலோசனை செய்ய பண்டித ஜவாஹரும், சர்தார் படேலும் இணங்கியிருப்பரா? அல்லது ஸ்ரீ பிரகாசம் தமது புகாரை அடியோடு கைவிட்டு விடவேண்டுமென்பது தான் அவ்விரு தலைவர்களும் அவருக்குக் கூறியுள்ள ஆலோசனையா? விளக்கம் பெறவேண்டிய விஷயங்கள்.

தமது புகாரைக் கைவிடவும், சென்னை அஸெம்பிளியில் காங்கிரஸ் கட்சியுடன் தொடர்பின்றி தனி ஸ்தானம் வேண்டுமென்ற கோரிக்கையை வாபஸ் பெறவும் ஸ்ரீ பிரகாசம் ஒப்புக்கொண்டுவிட்டதாக ஒரு செய்தி வெளியாயிற்று. அதை அவர் கண்டிப்பாக மறுத்தார். பின்னர் இத்தகராறு தீர்ந்த வகைதான் என்ன? காரியக்கமிட்டியின் தீர்மானத்துக்கு முன்னதாக திரை மறைவில் நடந்த பேச்சுகளை அறியாத யாரும் இக்கேள்விக்குத் திட்டமான பதில் கூறுவதற்கில்லை. இந்நிலையில் பிரகாசம் விவகாரம் ஒருவிதமாக சமாப்தியாகிவிட்டதா, அல்லது அது மீண்டும் தலை தூக்குமா என்பதில் சந்தேகமிருந்துவரலாம். ஆயினும் காங்கிரஸ் கட்சியில் ஒற்றுமை மிகவும் அத்தியாவசியமாயுள்ள இந்நிலையில், மற்றொரு பிளவு இப்போதைக்கேனும் தவிர்க்கப்பட்டது அனைவருக்கும் ஆறுதல் அளிக்கக்கூடியதாகும். ஸ்ரீ பிரகாசம் பத்திரிகைக்காரர்களுக்குச் சொல்லிவரும் பதில்களிலிருந்து தகராறு பற்றிய திட்டமான முடிவு இனிமேல்தான் வெளியாக வேண்டுமென்று காண்கிறது.

மலான்
தென்னாப்பிரிக்க சுதேசிகள்
தென்னாப்பிரிக்க இந்தியர்

பாக்கியசாலி

எஸ்.டி. ஸ்ரீநிவாஸன்

'வாஸு! உன் முடிவைச் சொல்லாமலேயே நீ கிளம்பிண்டிருக்கேயே! நீ வரத்துக்கு இன்னும் ஒரு வாரம் ஆகும். அவா திங்கட்கிழமை அன்னிக்கு ஊருக்குப் புறப்பட்டுப் போறா...நிச்சயமாக உன் முடிவு அவாளுக்குத் தெரிஞ்சாத்தானே, அவா வேறு ஏதாவது ஏற்பாடு பண்ணலாம்...'

'நான் சொல்றத்துக்கு என்னம்மா இருக்கு? இந்த நாட்டுப் புறத்தைக் கட்டிண்டு என் ஆயுசு பூரா அழச் சொல்றேயா?... படிப்புத்தான் இல்லே, அழகாவது இருக்கா? அதுவும் இல்லே. எனக்குப் பிடிக்காத பெண்ணை பண்ணிக்கோன்னு ஏன் தொந்தரவு படுத்றே?...'

சமையல் அறையில் நின்றுகொண்டிருந்த ராஜத்தின் காதுகளில் இந்த வார்த்தைகள் விழுந்ததும் அவள் நெஞ்சை ஏதோ ஒன்று அழுத்துவது போன்ற பிரமை தட்டியது. சுமார் பத்து வருஷ காலம், ஒவ்வொரு லீவுக்கும் தவறாமல் தன் கிராமத்துக்கு வந்து, தன்னுடன் உல்லாசமாகப் பொழுதைப் போக்கிய தன் அத்தானா தன்னைப்பற்றி இப்படியெல்லாம் சொல்கிறான் என்று அவளால் நம்பவே முடியவில்லை. ஆனால் தன்னை அவன் மணந்துகொள்ள இஷ்டப்படாதன் காரணம் அவளுக்குச் சென்னைக்கு வந்த பிறகு 'அரசல் புரசலாக'த் தெரியும். ஆயினும் அவள் அடியோடு நம்பிக்கையை இழந்துவிடவும் இல்லை.

மேலும் ஏதோ வார்த்தைகள் கேட்கவே ராஜம் உற்றுக் கவனித்தாள்.

'இப்போன்னமோ அவா ஏழையாக போய்விட்டா. அந்தக் காலத்திலே நமக்கு எங்க அண்ணா செய்ஞ்ச உதவி கணக்கு வழக்கில்லை. நாம் இந்த நிலையிலே இருக்கிறதே அவனாலேதான். அவன் செத்துப்போகும் போது என்னைக் கிட்டே கூப்பிட்டு வச்சிண்டு எப்படியும் ராஜத்தை உனக்கே கல்யாணம் பண்ணி வச்சிடும்படி அழமாட்டாத குறையாக கேட்டுண்டான். செத்துப் போய்விட்ட அவன் ஆத்மாவை திருப்தி பண்ணவேண்டிய கடமை ஒண்ணு இருக்கு எனக்கு. இப்போ நாம் வேண்டாம்னு சொல்லிவிட்டா அவள் யாருக்கேனும் இளையாளாக வாழ்க்கைப்பட்டு அவஸ்தைபட வேண்டியதுதான். ராஜத்துக்கு என்ன குறைச்சல்? சித்தே மாநிறமானாலும் மூஞ்சி களையாக இருக்கு. லக்ஷ்மீகரம் தாண்டவமாடறது. படிப்பிலேயும் குடும்பத்துக்குத் தேவையான படிப்பு இருக்கு. எட்டாவது பாஸ் பண்ணியிருக்கா. இதைக் காட்டிலும் என்ன வேணும்... நீயே யோசனை பண்ணி பார்...'

இதற்குள் இடைமறித்தான் வாஸு.

'அம்மா! ராஜத்தை எனக்குப் பிடிக்கலை அப்புறம் உன் இஷ்டம்! எப்படி வேணுமானா செய்ஞ்சுக்கோ!'

தெருவில் மோட்டார் 'பூம் பூம்' என்று ஹாரன் கொடுக்கவே, "ரயிலுக்கு நாழி ஆச்சு! நான் போய் விட்டு வரேன் அம்மா!" என்று சொல்லிக்கொண்டே தன் ஸூட்கேஸைத் தூக்கிக்கொண்டு புறப்பட்டான் வாஸு.

எப்படியும் ராஜத்தையும் அவனையும் பிணைத்துவிடலாம் என்று எண்ணியிருந்த சாரதாவுக்கு அவன் பதில் பெரிதும் ஏமாற்றத்தை அளித்தது. கார் புறப்படும்வரை தெருவையே பார்த்துக்கொண்டிருந்த அவள், அது கிளம்பிச் சென்றதும், தான் அடைந்த ஏமாற்றத்தால் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டே சமையற் கட்டுக்கு வந்தாள். ராஜத்தின் விஷயத்தில் என்ன தீர்மானம் செய்வது என்பதுபற்றியே சிந்தித்துக்கொண்டிருந்தது அவள் மனம்.

2

நாகராஜன் ஒரு காலத்தில் பணக்காரனாகத்தான் வாழ்ந்தான். காவேரி பாய்ச்சலில் பத்துவேலி நிலம் இருந்தது. தன் தாயும் தந்தையும் இறந்த பிறகு தன் தங்கை சாரதாவைக் காப்பாற்றி அவளை நல்ல இடத்தில் மணம் செய்து கொடுத்தான். சாரதாவின் கணவன் ஒரு சாதாரண குமாஸ்தாவாக இருந்தார். மணமான இரண்டு வருஷங்களுக்கெல்லாம் அவர்களுக்கு வாஸு பிறந்தான். சாரதாவின் கணவனுக்கு வரும்படி போதவில்லையாதலால் அவர் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். ஆகவே நாகராஜன் நாலாயிரம் ரூபாய் முதல்பணம் போட்டு, சென்னையில் ஒரு சின்ன சைகிள் கம்பெனியை ஆரம்பித்து அதைத் தன் தங்கை கணவரிடம் ஒப்படைத்தான். சிறுகச் சிறுக லாபம் பெருகி கம்பெனி நல்ல நிலைக்கு வந்துவிட்டது. பிற்காலத்தில் முதல்பணமாக நாகராஜன் போட்ட நாலாயிரம் ரூபாயை சாரதாவின் கணவர் திருப்பிக் கொடுக்கப் போனபோது நாகராஜன் அதை வாங்க மறுத்துவிட்டான்.

வெகுநாட்களுக்குப்பிறகு நாகராஜனுக்கு ராஜம் பிறந்தாள்.

வாஸு லீவு நாட்களெல்லாம் அநேகமாக சென்னையில் தங்கமாட்டான். மாமா ஊரான சிறு மங்கலத்துக்குப் போய்விடுவான். அவனும் ராஜமும் ஆற்றங்கரையை அடுத்தத் தோப்பிலும், வயல் வெளிகளிலும் உல்லாசமாகக் கழித்த நாட்கள் பல. இவர்கள் இருவரையும் ஜோடியாகக் கண்ட ஊரார் இவர்கள் 'சரியான ஜோடி' என்றே கருதினர்.

நான்கு வருஷங்களுக்கு முன் திடீரென்று நாகராஜன் நோயில் படுத்துவிட்டான். வரவர அவனுடை

நிலைமை மோசமாகிக்கொண்டே வந்தது. சமயம் பார்த்து அவனுடைய தாயாதிகளில் சிலர் ஒரு சிவில் வழக்கை அழகாக ஜோடித்து, அவனுக்குச் சொந்தமாக இருந்த நிலத்தை அவர்கள் ஸ்வீகரித்துக்கொண்டுவிட்டனர் வியாதியால் ஏற்கெனவே பீடிக்கப்பட்டிருந்த நாகராஜனின் மனம் அடியோடு உடைந்துவிட்டது.

படுத்த ஆறு மாதங்களுக்கெல்லாம் அவன் கண்ணை மூடிவிட்டான் அவன் இறக்கும் தறுவாயில் தன் தங்கையைப் பக்கத்தில் அழைத்து வைத்துக் கொண்டு தன் பெண் ராஜத்தை எப்படியும் வாஸுவுக்கே மணம்முடித்து வைத்துவிடும்படி கேட்டுக்கொண்டான்.

அவன் இறந்த பிறகு அவனுடைய மனைவியும், ராஜமும் சிறு மங்கலத்திலேயே தங்கிவிட்டனர் மாதா மாதம் சாரதாவின் கணவர் அவர்களுக்குப் பணம் அனுப்பிவந்தார்.

இதன் மத்தியில் சாரதாவின் கணவர் ராஜத்தின் சார்பில், நாகராஜன் இழந்துவிட்ட நிலத்திற்காக ஹைக்கோர்ட்டில் அப்பீல் தாக்கல் செய்தார் வழக்கு நடந்துகொண்டிருந்தது. ராஜமும் அவளுடைய தாயாரும் அடிக்கடி சென்னைக்கு வந்து போய்க்கொண்டிருந்தனர்.

வாஸு ஹைஸ்கூல் படிப்பை முடித்துக்கொண்டு காலேஜில் சேர்ந்தபோது அங்கே அவனுக்கு வத்ஸலா பரிச்சயமானாள். வத்ஸலா நல்ல அழகி; புத்திசாலி. பணக்காரி அவளை கண்டது முதல் வாஸு ராஜத்தைச் சிறிது சிறிதாக மறக்க ஆரம்பித்தான். அவன் மனத்தில் ராஜம் வகித்த ஸ்தானத்தை வத்ஸலா ஆக்ரமித்துக்கொண்டாள் வத்ஸலாவுடன் ராஜத்தை ஒத்திட்டு பார்க்கும்போது எல்லா அம்சங்களிலும் வத்ஸலா உயர்ந்தவள் என்ற முடிவுக்கே வரத் தோன்றியது அவனால். அவன் காலேஜில் படித்த நான்கு வருஷத்திற்குள் அவனுக்கும் வத்ஸலாவுக்கும் ஏற்பட்ட சிநேகம் முற்றிக் காதலாகப் பரிணமித்தது, படிப்பு முடிந்ததும் இருவரும் மணம் செய்துகொள்ளத் திட்டம் போட்டிருந்தனர்.

மெதுவாக இவ்விஷயத்தை அறிந்த சாரதா துணுக்குற்றாள் வாஸுவின் உள்ளத்தை மாற்றமுயன்றாள். ஆனால் வாஸு பிடிவாதமாகவே இருந்தான். இவ்விஷயத்தை அறிந்த ராஜத்துக்கும் மிகவும் வருத்தமாய் இருந்தது இத்தனை நாட்கள் தான் முழு மனத்துடன் நேசித்து வந்த தன் அத்தான் வேறு ஒருத்தியைக் காதலிக்கிறான் என்பதை நினைக்க நினைக்க அவள் உள்ளம் குமுறியது.

சென்ற வருஷம் வாஸு பி காம். பரீட்சையில் தேறினான். வத்ஸலாவும் பி ஏ பாஸ் செய்து விட்டாள் அதற்கு பின் ஒரு வருஷம் ஆகியும் சாரதா அசைந்து கொடுக்காததால் வாஸு-வத்ஸலா கல்யாணம் தடைப்பட்டுக் கொண்டே வந்தது,

ராஜத்துக்கும் வயசாகிக்கொண்டே வந்தது வாஸுவுக்காயினும் அல்லது அவன் இல்லை என்று ஏற்பட்டால் வேறு வரனுக்காயினும் அவளை மணம் செய்து கொடுக்கும் பொறுப்பு சாரதாவையும் வாஸுவின் தகப்பனாரையும் சார்ந்திருந்தது.

கேஸ் விஷயமாக ஒரு வாரத்திற்கு முன் ராஜமும் அவளுடைய தாயாரும் சென்னைக்கு வந்தனர். தான் திரும்பிப் போவதற்குள் கல்யாண விஷயத்தைப்பற்றி ஏதாவது ஒரு முடிவுக்கு வந்துவிட வேண்டும் என்று துடித்தாள் ராஜத்தின் தாயார்.

அன்று இரவு வாஸு கல்கத்தா மெயிலில் தங்கள் கம்பெனியின் விஜயவாடா பிராஞ்சின் கணக்குகளையெல்லாம் சோதிப்பதற்காக புறப்பட்டுக் கொண்டிருந்தான், திரும்பி வர ஒரு வாரமாகும் என்று அவன் சொன்னதால் அதற்குள் சிறு மங்கலத்துக்கு கிளம்பிப் போக திட்ட மிட்டுக்கொண்டிருந்த ராஜத்தின் தாயாருக்கு முடிவாக வாஸுவின் விஷயத்தைப்பற்றிச் சொல்லி விடுவதற்காக, சாரதா அவனைக் கேட்டாள். ஆனால் அவன் தன் எண்ணத்தை வெட்ட வெளிச்சமாக்கிவிட்டான்.

3

மறு நாள் காப்பி சாப்பிட்டுவிட்டுக் கையில் பேபரை எடுத்துப் புரட்டிய விஸ்வநாதய்யர்-சாரதாவின் கணவர்- ஐயய்யோ! தலையிலே கல்லைப் போட்டுட்டானே! நான் என்ன பண்ணுவேன்..." என்று அலறிக் கொண்டே எழுந்தார் அவர் கையில் இருந்த பத்திரிகை கீழே நழுவி விழுந்தது.

உள்ளே அடுக்களையில் அன்று காலை சமையலைப்பற்றி ஏதோ திட்டம் வகுத்துக் கொடுத்துக்கொண்டிருந்த சாரதா அலறிப் புடைத்துக் கொண்டு ஹாலுக்கு ஓடி வந்தாள். விஸ்வநாதய்யரின் முகத்தில் கவலை ரேகைகள் படர்ந்திருந்தன. அவர் தன் நிதானமிழந்து இங்கும் அங்கும் ஓடிக்கொண்டிருந்தார்

என்னா! ஏன் இப்படிக் கூச்சல் போட்டறீங்கோ?... என்று அவளும் சற்றுப் பரபரப்புடன் கேட்டாள்

உடனே விஸ்வநாதய்யர் தான் கீழே போட்ட பேப்பரை எடுத்து அதில் ஒரு பகுதியை அவளுக்குக் காட்டி 'இந்தா பார்! நேத்து ராத்திரி இங்கேயிருந்து புறப்பட்ட கல்கத்தா மெயில் சூளூர் பேட்டைக்குக் கிட்டே விழுந்து போச்சாம் ஏகசேதமாம் நம்ம வாஸு அதிலேதானே போயிருக்கான். ஐயோ அவன் கதி என்ன வாச்சோ?... இப்போ என்ன செய்யறதுன்னே புரியலையே... என்று அவர் சொல்லுபபோதே அவர் கண்கள் மளமளவென கண்ணீரைச் சொரிந்தன

சாரதாவின் தலை சுழன்றது.

'ஐயோ! கண்ணே! நீ என்ன பாடு படறேயோ! ஸ்வாமி! என் குழந்தையை நீதான் காப்பாத்தணும்...... ஈஸ்வரா! இப்படிப்பட்ட சோதனையா எங்களுக்கு...' என்று சொல்லிக்கொண்டே அவரும் 'ஓ வென்று கதறி அழ ஆரம்பித்துவிட்டாள்

இந்த அமர்க்களத்தைக் கண்டு அங்கேவந்த ராஜமும் அவள் தாயாரும் கண்கலங்கி நின்றனர்,

சிறிது நேரத்தில் விஸ்வநாதய்யர் தன்னை ஒருவிதமாகச் சமாளித்துக் கொண்டு காரை எடுத்துக்கொண்டு சூளூர்பேட்டைக்குப் புறப்பட்டார்.

* * *

அன்று ராஜத்தின் சார்பில் ஹைகோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு முடிவாகி விட்டது. அவளுடைய பங்காளிகள் ஆக்ரமித்துக்கொண்ட பத்துவேலி நிலமும் அவளைச் சேரவேண்டும் என்று தீர்ப்பில் கூறப்பட்டிருந்தது

மத்தியானம் மணிமூன்று இருக்கும். வாஸு தன் அறையில் கட்டிலில் படுத்திருந்தான் விபத்து நடந்து ஒரு மாசத்துக்கு மேலாகிவிட்டது விபத்தில் அவனுக்கு இடது கை துண்டித்துப் போய்விட்டது அதை நினைத்து நினைத்து அவன் பொருமிக் கொண்டிருந்தான். கையுடைந்த தன் அத்தானுக்கு சிசுருஷை செய்வதற்காக ராஜமும் சென்னையிலேயே தங்கிஇருந்தாள் அப்போது ராஜம் கையில் காபி டம்ளருடன் அவன் அறைக்குள் நுழைந்தாள் தன் அத்தானுக்கு கைபோய்விட்டதே என்ற வருத்தம் அவள் மனத்தை அரித்துக் கொண்டேதான் இருந்தது

அவள் மெதுவாக வாஸுமுன் வந்து நின்றாள். அப்பொழுதுதான் வாஸு ராஜத்தின் மற்[illegible]ரு

கையை நோக்கினுள் அதில் ஒரு கவர் இருந்தது அதன்மேல் அவனுடைய பெயரும் விலாசமும் எழுதப்பட்டிருந்தது வாஸு எழுந்து உட்கார்ந்தான்

அவன் கையில் காபியைக் கொடுத்தாள் ராஜம். அதை வாங்கிக் குடித்துவிட்டு டம்ளரைக் கீழே வைத்தான். பின் அவள்தான் கொண்டுவந்த கவரை அவன் கையில் கொடுத்துக்கொண்டே, 'இது மத்தியானம் போஸ்டிலே வந்தது. நீங்க தூங்கிண்டு இருந்ததனுலே உங்களைத் தொந்தரவு செய்ய இஷ்டமில்லை...' என்ருள் மெதுவாக அவள்.

வாஸு கவரைக் கையில் வாங்கினன் உள்ளிருந்த கடிதத்தை எடுத்தான். அது ஒரு கல்யாணப்பத்திரிகை அதில் அச்சடிக்கப்பட்டிருந்த எழுத்துக்களின் மேல் தன் கண்ணேட்டத்தைச் செலுத்தினுன் அவன்

'சௌ வத்ஸலாவுக்கும் சி ரங்கராஜனுக்கும்...' என்ற வரியைக் கண்டதும் அவன் தலை 'கிர்' என்று சுழன்றது அவன் இதயத்திலிருந்து ஒரு பெரு மூச்சு வெளிப்பட்டது.

அவன் மெதுவாகப் படுக்கையின் மேல் சாய்ந்தான்

'ஹும்! ஆமாம்! என்னை இனிமேல் மணக்க அவளுக்கு எப்படி இஷ்டம் இருக்கும்? ஏன், இந்த உலகத்தில் இனிமேல் ஒருத்தருமே என்னைக் கல்யாணம் செய்துகொள்ள இஷ்டப்பட மாட்டார்கள்... என்று மெதுவாக முணு முணுத்தது அவன் வாய்.

ஆனல் அருகே நின்றிருந்த ராஜத்தின் முகம் ஏனே பளிச்சிட்டது.

அத்தான்! தங்களுக்கு என்னைப் பிடித்திருந்தால், நான் தங்களை மணந்துகொள்ள மனப்பூர்வமாகச் சம்மதிக்கிறேன்...'இதை மெதுவாகச் சொன்னுள் ராஜம்.

வாஸு ஆச்சரியத்தால் திகைத்துவிட்டான்

'ராஜம்! வாஸ்தவமாகச் சொல்லுகிருயா? இந்த நொண்டியை மணந்துகொள்ள உன் மனம் ஒப்புகிறதா? அதோடு முன்பு நீ ஏழை இப்போது உனக்கு நிறைய சொத்தும் வந்திருக்கிறது...எத்தனையோ அழகான பணக்காரர் உன்னை மணக்க இப்போது போட்டி...'

'அத்தான்! எனக்குத் தங்களிடத்தில் உள்ள ஆசை என்றைக்கும் குறையவில்லை தங்களுடைய மனம் தான் மத்தியில் ஏதோ சற்றுத் தடுமாறியது...தங்கள் கை உடைந்துவிட்டதால் என் மனம் உடைந்துவிடவில்லை.

'ராஜம்! அப்படியானல் நான் வாஸ்தவத்திலேயே பாக்கியசாலி! வெளி வேஷத்தைக் கண்டு ஏங்கி சிறிது காலம், உண்மையாக என்னை நேசித்து வந்த உன் மனசை நோகும்படி செய்துவிட்டேன் ஆனல் அதற்குக் கடவுள் சரியான தண்டனை விதித்துவிட்டார்... ராஜம்! ராஜம்! அதற்காக என்னை மன்னித்துவிடு...'

உணர்ச்சிப் பெருக்கால் அவன் கண்கள் நீரைப் பெருக்கின

'அத்தான்! இதென்ன அசட்டுத்தனமாக ஏதேதோ சொல்கிறீர்கள். நான் தங்களை மன்னிப்பதற்குத் தாங்கள் என்ன குற்றம் செய்துவிட்டீர்கள்?...வீணுக அலட்டிக் கொள்ளாதீர்கள்... என்ருள் அவள்.

வாஸு மெதுவாக அவள் கரங்களைப் பற்றித் தன் மார்பின் மீது வைத்துக்கொண்டான்

அதே சமயத்தில் அவர்கள் மனம் இரண்டும் ஒன்றிவிட்டதை ஆமோதிப்பதுபோல் சுவரில் மாட்டப்பட்டிருந்த கடியாரம் நான்கு முறை அடித்தது.

என் குழந்தைகளின் ஆடையணிகள் நீடித்துழைக்கின்றன

-இப்போது நான் இவ்வற்புதமான ஸோப்பை உபயோகிக்கிறேன்.

இதோ உங்களுக்கு உண்மையான சிக்கனம்! 501 ஸோப்பு அதிக சிரமம் கொடுக்காமல் ஆடைகளை சுத்தமாக சலவை செய்கிறது. துணிகளை நாசமாக்குவதுமில்லை அதன் செழுமையான நுரை துணிகளுக்குள் ஊடுருவிச் சென்று. எல்லா அழுக்கையும் மாயமாய் அகற்றுகிறது 501 ஸோப்பு இரண்டு விதத்தில் சிக்கனமுடையது—அதிக நாள் வருகிறது அத்துடன் அமூல்யமான துணியையும் காப்பாற்றுகிறது !

1½ பவுண்ட் பார்களாகவும், மற்றும்
ஸோப்புச் சீவலகள், ஸ்பெஷல் ஆகவும் கிடைக்கும்,

501 ஸோப்புகள்

இப்போது 501 ஸோப்புகளின்
விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்.

F. S. 1922.

டில்லியில் சென்றவாரம் (4-ந் தேதி) கூடிய அகில இந்திய பத்திரிகாசிரியர்கள்-பாகிஸ்தான் பத்திரிகாசிரியர்களின் மகாநாட்டில் பண்டித நேரு பேசிக்கொண்டிருக்கிறார்.



சென்ற வாரம் இந்தியா-பாகிஸ்தான் பத்திரிகாசிரியர்கள் கூட்டு மகாநாட்டுக்கு வந்துள்ள பாக் பத்திரிகாசிரியர்கள் தூதுகோஷ்டி. இடது புறமிருந்து 3-வதாக நிற்பவர்தான் ஜனுப் அலிமுகமது ரஷீதி பாக் தூது கோஷ்டித் தலைவர். அவருக்கடுத்தபடி அ இ ப. ஆ: மகாநாட்டுத் தலைவரும் "மித்திரன்" ஆசிரியருமான ஸ்ரீமான் ஸி. ஆர் ஸ்ரீநிவாசன் நிற்கிறார். முக மூடியுடன் காணப்படுகிறவர்தான் பீகம் ஷபி. இவர் ஒருவர்தான் தூது கோஷ்டியில் வந்துள்ள ஒரே பெண் ஆசிரியர்.

மழை பெய்யப் போகுது

ராம. பெரிய கருப்பன்.

★

1.

இலைதழை எல் லாம்தலை ஆட்டுதம்மா—காற்று
எங்கிருந் தோவந்து பாயுதம்மா.
நிலை தளர்ந்தா டுது இயற்கை யெலாம்—குளிர்
நீட்டி நெருக்குது பூமியெல்லாம்.

2.

வானத்தில் வில்லொன்று வளைந்ததம்மா—அது
வண்ணத்தின் வேடிக்கை காட்டுதம்மா,
மோனத்தின உச்சியை எட்டுதம்மா—எங்கும்
மூளும்பெ ரும்போரைக் காட்டுதம்மா

3.

பறவைகள் கூட்டுக்குள் பறக்குதம்மா—காட்டுப்
பாதை, நடைவழி, தெருக்களெலலாம்
கறவைகள் வீட்டுக்கு நடக்குதம்மா—தங்கள்
கன்றை நினைந்தவை கதறுதம்மா.

4.

கானமுடன், மலையும் வயல், மலர்ச்
சோலையெல்லாம் தலைதூக்கிடவே
வானம் கறுத்திருண்டு ஆடுதம்மா—தவளை
வாய்திறந் தேவா வேற்குதம்மா.

5.

இடியின் முழக்கம் திசைகளெல்லாம்
கிடுகிடு எனகுது, மரங்களெல்லாம்
ஒடிந்து விழுந்திடச் சாயுதங்கே—பாம்பு
ஓடிஒளிந்து நடுங்குதம்மா.

6.

சிறுசிறு மழைத்துளி சிதறுதெங்கும்—வானம்
சீறியே மினனிச் சிரிக்குதம்மா.
அரும்பிய முல்லையும் முகமலர்ந்தே—அதை
ஆவலுடன அணைந்து ஆடுதம்மா

7.

மழைபெய்யப் போகுதே என்று சிறுவர்
மகிழ்ச்சியினால் கூத்தாடித்துள்ளி
நுழைகின்றார் வீட்டினுள்திரும்பி வந்து
நோக்குறார் வானத்தை ஆர்க்கின்றாரே,

நறுவிசு

'வீந்தியா'

அப்பப்பா ! இப்படியும்தான் ஒரு சுத்தம் வேணுமா? ஒழுங்கு அவசியமா ? எதுவும் மிதமிஞ்சினுல் தொல்லேதானே ?

என்னுல் இந்தத் தொல்லே பொறுக்கவே முடியவில்லே இப்படியா நறுவிசு நறுவிசு என்று பிராணனே வாங்குவாள் ஒரு மனேவி! அவளுந்தான் தன்னுடைய பிராணனேயும் விட்டுக்கொள்ளுகிருளாம்; எனக்குச் சொல்லிச் சொல்லி மாளுகிருளாம்! அப்படித்தான் அவஸ்தைப் படுவானேன்! இதை அவளிடம் கேட்டால் "இதற்காகத்தானே வீட்டிலே ஒரு பெண் வேணும், குடும்பம் நறுவிசாக நடக்க!" என்று பதில் வருகிறது!

நறுவிசு, நறுவிசு என்று சொல்கிறுளே!

அழகு, வசதி என்ற வார்த்தைகளுக்கும், நறுவிசு என்னும் நாராச வார்த்தைக்கும் கொஞ்சமாவது சம்பந்தமோ, ஒற்றுமையோ தெரிகிறதா? நறுவிசு என்கிற வார்த்தைக்கும் நாராசம் என்னும் சொல்லுக்கும் தான் தோது இருக்கிறது!

சோப்புப் பெட்டியோ தீப்பெட்டியோ கொஞ்சம் இடம் மாறிவிட்டால் போதும்! "அதது இடத்திலே இருந்தால்தான் நறுவிசாயிருக்கும்... இல்லாட்டா..." என்று கூறிக்கொண்டே அவற்றை இடம் பார்த்து வைப்பாள்: அந்தச் சிறு மர ஸ்டாண்டு மேலே இருந்த சோப்புப் பெட்டி, அரை கஜம் தள்ளியிருக்கும் பிரையில் இருப்பதிலே தவறு என்னவோ? அவசரக் காரியமாகப் போகும் பொழுது கையிலிருக்கும் வேண்டாத காகிதத்துண்டைக் கசக்கி, கம்பத்தின் ஓரம் போட்டுவிட்டுப் படியிறங்கியிருப்பேன் ரொம்பக் காரியமாக அதை எடுத்துக்கொண்டு உள்ளே போய், காகிதக் கூடையில் போடுவாள்.

இவை கூடத் தேவலே; என் தவறு இதிலே உண்டு என்ருவது சமாதானம் தேடிக்கொள்ளலாம். அவள் என்னுடன் வாழ்க்கை நடத்த வந்த புத்தம் புது நாட்களில், அவளுடைய இந்த மாதிரிச் செயல்களிலே பெருமையே அடைந்திருந்தேன் என் பதையும் ஒப்புக்கொள்கிறேன். அவளுடைய பார்வை சதா சர்வதா என்னேத் தொடர்வதையே அந்தச் செய்கைகள் நிரூபிக்கின்றன என நான் மகிழ்ந்ததிலேயும் தவறு இல்லே ஆனுல், இந்த மாதிரி நிலேமை, நான் சந்தோஷித்த நிலேமை, முற்றுப் பெறும்படியாயிற்று ஏனென்ருல் அவளுடைய சுத்த-வெறி சுத்த மோசமாக முற்றிவிட்டது!

ஒரு செம்பு நீர் எடுத்து கைகால் அலம்பிக்கொண்டு இப்பால் வந்திருப்பேன்—உடனே உள்வராந்தாவில் விளக்குமாறு ஓசைகேட்கும் வராந்தாவிலே இரண்டு இடங்களில் சிமிண்டுத் தரை கொஞ்சம் அமுங்கியிருக்கும்; அங்கே ஓடித் தங்கிவிட்ட ஜலத்தை இவள் விளக்குமாறு போட்டுத் தள்ளிவிட்டுச் சுத்தம் செய்வாள் இதைக் கவனித்துவிட்டு நானும் நாலு நாள்வரை ஒன்றும் சொல்லாமல் இருந்தேன். அவளும் அப்படியே செய்து வந்தாள். கடைசியில் எனக்கே பரிதாபமாக இருந்தது "அது பாட்டுக்கு இருக்கட்டுமே! அரைமணியில் வெய்யல் அங்கு வந்ததும், அந்தக் கொஞ்ச ஜலம் வற்றிவிடுகிறது!" என்றேன் ஐந்தாறு நாட்கள் இப்படிச் சொன்னேன். அவளும் அந்தப் பேச்சைக் கேட்காமற் போகவே, ஒரு நாள் கோபித்தேன்; "அந்தத் துளி ஜலம் உன்னே என்ன பண்ணிவிடும்?" என்று கேட்டேன்.

"நீங்களாவது கொஞ்சம் தள்ளி நின்று வராந்தாவின் கீழே ஓரோர் காலாக நீட்டி ஜலம் விட்டு அலம்பிக் கொள்ளலாம்—அப்போ காலலம்பும் ஜலம் இங்கே ஓடாது!" என்ருள். "ஓஹோ!" என்று தோன்றியது.

ஆனுல், அவள் சொன்னமாதிரி புது முறையில் கால் அலர்பும் வழக்கம் எனக்கு வரவேயில்லே! கால் அலம்புவது என்ருல், பாதத்தின் மேல் பாதம் போட்டுத் தேய்த்து அலம்பினுல் தான் எனக்குத் திருப்தி! எனக்கும் இந்த வழக்கம் போகவேயில்லே. அவள் துடைப்பக்கட்டையுடன உடனே வராந்தாவில் நுழையும் வழக்கமும் போகவேயில்லே

நான் கண்ட மாறுதல் இதுதான்.

"ஐயோ பாவம் என்று இருந்தால் உங்களுக்காவது இந்த வழக்கம் வரணும்! அது முடியல்லேயே! நான்தான் பொம்மனுட்டி, நறுவிசாக இருக்கணுமே என்று இதுமாதிரி கவனிச்சிக்கணும்! கவனிச்சுக்கிறேன்!' முக்கால் வாசி நாளும் தினமும் மூன்று வேளேகளில் இரண்டு வேளேகள் சொல்லுவாள்! கடைசியில் நான் தான் குற்றம் செய்தவன்!

எண்ணெய் தேய்த்துக் கொள்ளும் பொழுது உட்காரும் தனிப்பலகை, எண்ணெயாக ஆகிவிட்டதே என்று அதைச் சீயக்காய் போட்டுத் தேய் தேய் என்று தேய்த்து வைப்பாள்! 'எண்ணெய் தேய்த்துகொள்ள' என்று தான் அதைத் தனியாக உபயோகிக்கிருேமே! சாப்பிட உட்காரத்தான் வேறு பலகைகள் இருக்கின்றனவே! இந்த எண்ணெய்ப் பலகையை நாலு வாரத்திற்கு ஒருமுறை சோடாபோட்டுத்தேய்த்தால் போதாதா? அதற்காக இப்படி உயிரை விடுவானேன் என்று கேட்டால், அதற்குத் தகுந்த பதில் வராது

'நீங்களாவது எண்ணெய் சிதருமல் ஜாக்கிரதையாகத் தேய்த்துக்கொள்ளணும்! எண்ணெய்த் தலேயில் தட்டுத் தட்டு என்று தட்டித் தேய்த்துக் கொண்டால்தான் உடம்பிலும் தலேயி

லும் எண்ணெய் இறங்கும் என்று என் தாத்தா கற்றுக்கொடுத்தபடி எண்ணெய்க் குளி குளிக்கும் வழக்கம் எனக்குச் சிறுவயதுமுதலே. எப்படி இந்தப் பழக்கம் போகும்?

என் மேஜையருகும் விஜயம் செய்தது அவள் சுத்தம்! மேஜையைத் தினமும் துடைக்கவருவாள். அதன் பலன் தினமும் ஏதாவது ஒரு கடிதமோ, குறிப்போ, ரசிதோ காணமற் போய்விடும்!

மேஜைமேலே எனகது வேண்டிய பைல், பேனு காகிதம், ரூல்கட்டை, டயரி, கடிதங்கள், வைத்திருப்பேன்

'அலமாரியிலே இந்தத் தட்டிலே வைத்துக்கொள்ளுங்களேன்! எவ்வளவு விசாலமாயிருக்கு அலமாரித் தட்டு. அவற்றை இங்கே வைத்துக்கொண்டால் மேஜை எவ்வளவு நறுவிசாக இருக்கும்!' என்பாள் அவள்!

நாற்காலியும் மேஜையும்ஏதற்காக? வெறுமனே காட்சிக்கா? வேண்டியவற்றை மேஜைமேல் வைத்துக்கொள்ளவும், நாற்காலியில் கம்மென்று உட்கார்ந்ததும் ஜாம் என்று வேலை துவக்கவும்தானே இரண்டும் ஒருமிக்க வாங்கினேன்? மேஜைக்குச் சோபிதம், மேஜைக்குரிய வஸ்துக்களும் அவற்றின் முக்கியத்துவமுமேயன்ரூ?

இதைச்சொன்னல் 'நீட்'டாக இருக்கவேண்டாமா மேஜை? அதற்கு மேலே போட்டிருக்கிற விரிப்பும் அழகாகத் தெரியவேண்டாமா?' என்று பதில் பறக்கிறது!

கார்டுகள் கவர்கள், தபால் தலைகள் எல்லாம் ஒரு சிறுபெட்டியில்போட்டு, மேஜைமேல் வைத்திருப்பேன்

'இதோ இப்படி இருந்தால் எவ்வளவு சௌகரியம்? கார்டுகள் நிறைய எழுதுவோம்! அவை மேலாக இருக்கட்டும்! கவர்கள் அதிகம் எழுதமாட்டோம்! அவை அடுத்தாற்போல் இருக்கட்டும்! தபால் தலைகள் அவற்றுக்கும் அடியில் கிடக்கட்டும்! என்பாள்! அடுக்கி வைப்பாள்

ஐயோ! ஓரோர்தடவையும் இதை அடுக்கிவைத்து அழகுபார்க்கும் நேரத்தில், நமக்கு வேண்டிய கார்டோ, கவரோ, தபால் தலையோ அகப்பட்டுவிடாதா? எல்லாவற்றையும்தான் அடக்கமாக ஒரு பெட்டிக்குள் போட்டிருக்கிறேனே. இந்த ஒழுங்கு போதாதா? வசதி போதாதா? நேரம் வீணுக்குவதுதானே மூட்டாள்தனம்! பொழுதுதானே பொன்போன்றது?

மேஜையருகு அமர்ந்து, எழுதும் கடிதத்தை உடனே கவரினுள் போடலாம் என்றுகூட ஆசைப்பட முடியாதபடி, கவர், கார்டு அடங்கிய பெட்டி அலமாரியினுள் போய்விட்டதே அப்புறம்?—

மேஜை டிராயருக்குள் சிறு சிறு பண்டங்கள் போட்டிருக்கிறேன்; நூற்கண்டு, பொத்தான், கத்தரிக்கோல், கோந்துக் கட்டி, நாய்த்தோல்



இத்தியாதி...எல்லாம் கொலுவைத்தாற்போல இருக்கணுமாம்! அட கடவுளே! மேஜையோடு ஒட்டினற்போல மறைந்து, ஓர் இழுப்பறை எதற்கு இருக்கிறது? விசாலமாகத் தட்டுப்போல இருக்கும் அதை இழுத்ததும் பளிச்சென்று வேண்டிய பண்டம் கண்ணில் படுகிறதே!

அவளுக்குப் பீடித்திருந்த 'நறுவிசு' நோய் என்னை இந்தப் பாடுபடுத்தியதைத்தான் நான் பொறுக்கக் கூடவில்லை

'ரொம்ப சுத்தம் சுத்தம் என்று இப்படி அலட்டிக்கொண்டால், அப்புறம் உடம்பு கெட்டே போகும். தெரியுமா?' என்று பயமுறுத்தினேன்.

'என்ன, படிச்சவர் நீங்கள்கூட இப்படிப் பேசினுல் அழகுதான்!' என்று தாக்கினுள் அவள்.

'ஆமாம்! மிதமிஞ்சிப் போய்விட்டால் இப்படித்தான் சொல்லவேண்டியிருக்கு!' என்றேன்.

'உங்கள் வீட்டிலே அசட்டுப் பிசட்டு ஆசாரம்தானே? 'நீட்னெஸ்' 'நீட்னெஸ்' கிடையாதோ?' என்று கேட்டாள் அவள்.

'இதுவும் ஒரு அசட்டுப் பிசட்டுச் சுத்தம்தான்! 'நீட்னெஸ்' நான்ஸென்ஸாகி இருக்கு!' என்று மனசுக்குள் எண்ணிக் கொண்டேன்.

கடைசியிலே மூளையையெல்லாம் ஒன்றுகூட்டி யோசித்ததில் கொஞ்சம் சரக்கு எனக்கும் பேசக் கிடைத்தது. இல்லம், இல்லாள் எல்லாம் எனக்கு இருந்தும் என் எதுவுமே இல்லாதவன் போல நான் இருக்கிறேன்! இதை ஆராய்ந்து குமைந்ததிலே, அவளிடம் வீச ஒரு அஹிம்சா ஆயுதம் கிடைத்துவிட்டது!

'இதோ பார்! நமக்காக இந்த மேஜையா? மேஜைக்காக நாமா? இந்த வராந்தா நம் சௌகரியத்திற்கா அல்லது அதன் சௌகரியத்திற்காக நாமா? இந்த வீடு நமக்காகவா? வீட்டுக்காக நாமா? அந்த அலமாரி நமக்கு அடிமையா? அதற்கு அடிமை நாமா?' என்று கேட்டேன்.

அவள் விழிகளைக் கூர்மையாக்கிக் கொண்டு கொட்டக்கொட்ட விழித்தாள்

'வேறு ஏதாவது நினைத்துவிடப் போகிருளே, பாவம்' என்று தோன்றிற்று!

"என் சௌகரியத்துக்காகத்தான் நீ, உன் சௌகரியத்திற்காக நான் இல்லை என்று நான் சொல்லிவிடவில்லை, பயப்படாதே! நாமிருவரும் ஒருவருக்காக ஒருவர் இருக்கிருேம்! ஆனால், இந்தச் சாமான்கள் விஷயத்திலே நீ இப்படி நினைத்துவிடக் கூடாது! நமக்கு வசதிக்காகத்தான் அவை! நீ அவற்றுக்காக இப்படி அலட்டிக்கொண்டு உயிரை விட்டுக் கொண்டு வேலை செய்வதால் எனக்காகத்தான் நீ இந்த வீட்டை மேய்க்கிருப்போல் இருக்கிருய்! உனக்கும் கொஞ்சம் வெளியிடப் பழக்கம் வேண்டாமா? நசபிசவென்று வீட்டோடு கிடந்து உழலுவானேன்? கொஞ்சம் உன் சொந்த வேலைகள் சிலவும் பார்த்துக்கொள்ளேன்......... தையல், பாட்டு, படிப்பு..."

"ஆமான்னு! நிஜந்தான்!' என்று வியப்புமேலீட்டால் மலர விழித்தாள் அவள்.

அதற்குப் பிறகு அவளிடம் மாறுதல் கண்டேன் தன் வேலைகளில் மெல்ல மெல்ல நிதானம் அடைந்தாள் அவள்

ஆனால், ஆனால்...நான் எதிர்பார்த்தது வேறு. இன்றைய நிலைமையா அன்று நான் எதிர்பார்த்தேன்?

இன்றுநான் கேட்பது இந்தத் தினுசான வினு! 'கொடியிலே வேஷ்டியில்லையே! நேற்றுத் தோய்த்திருக்கக் கூடாதா?' என்று கேட்கிறேன்.

"இப்போதான் தோய்க்கப் போகிறேன்—நேற்று மத்தியான்னம்தான் ஒழிந்தது—வெய்யலில் தோய்க்காட்டால் என்ன மோசம்? கொடியிலே வேஷ்டியில்லாட்டா, உள்ளே பெட்டிக்குள்ளே இருக்கிறதை எடுத்துப் போடுங்களேன் நாலு! தினமும் வீட்டில் தோய்த்தால் துணி வீண்! நாலு வேஷ்டி வெளியிலே எடுத்துப் போட்டு அப்பப்போ வெறுமனே நனைச்சுக் கசக்கிக்கட்டினுல், அப்புறம் வண்ணுனுக்குப் போட்டால் ஆச்சு! நேற்று போட்ட வேஷ்டியைத்தான் இன்று கட்டணும்னென்று சாஸ்திரமா? நமக்காக வேஷ்டிகளா? வேஷ்டிகள் கோசரம் நாமா?'

இந்த ரீதியில் வருகிறது அவளது வினு! அவள் என்னைக் கிண்டல் செய்கிருளோ என நினைக்க வேண்டாம்! என்னைக் கிண்டல் செய்வது என் மனசேதான்!

'ஏதோ புதுக் குடித்தனக் குஷியிலே அவள் ஒரே நறுவிசு வெறி கொண்டிருக்கிருள்! நாளடைவிலே, புதுமைப் பிரமை அடங்கும்பொழுது, நிதானப்பட்டு விடுவாள்!' என்று அறியாமல், அவள் போக்கிலே அவளை விடாமல், நானே அவளை வெளியுலகமுடன் தொடர்பு கொள்ளத் தூண்டி விட்டேன். இன்று மாதர் சங்கமொன்றிலே மாதரசி அவள்.

'அத்தனை வெறியாகப் பிடித்திருந்த நறுவிசு வெறி இப்படி மாயமாய்ப் போகுமா?' என மலைப்பு வேண்டாம்!

நறுவிசு அவளுடனேயே ஒன்றி விட்டது! நான் ஏதாவது சொல்லப் போனுல், நறுக்கென பதில் சொல்லி விட்டு 'வசு'க்கென எழுந்து போய் விடுகிருளே!

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்துக்கு நல்ல உணவுஅவசியமானது போல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும் உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில் (ரிஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப்போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும். ஆயிரக்கணக்கானவர்கள் காமினியா ஆயில் உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர். இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள். எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது. எப்பொழுதும்உபயோகியுங்கள்

ஆடோ டில்பஹார் (ரிஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனை. நீடித்தநறுமணம். தபால் சார்ஜிற்கு 4 அணு ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் பெறுங்கள்.

Sole Agent: ANGLO INDIAN DRUG & CHEMICAL CO., 285, Jamma Musjid P. O. Box 2085, Bombay 2.

ஜாதகம்! ★ ஆரூடம்!!

இன்றே எழுதுங்கள் பிறந்த ஜில்லா, தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்

கட்டண விவரம்:- 1 முதல் 3 உமது எதிர்காலகேள்விகட்கு ரூ. 2 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூபா 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35. ஜாதகம் கணிக்க ரூபா 3. ஒரு தசாவிற்கு புக்தி வாரியாக எழுத ரூ. 12

குறிப்பு:—வெளிநாடுக்கு இரட்டிப்புக் கட்டணம்.

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:—தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது எனக்குத் திடீரென்று ரூ 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ 35,000 கிடைத்தது

★

மானேஜர்.

வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ,

தெப்பக்குளம், P. O. (தென் இந்தியா)

கலா மண்டபம்

பத்திரிகைக்காரர்களின் 'சாந்தி'

இந்த வருஷம் பத்திரிகைக்காரர்களுக்கு என்ன கிடைத்தது ...ன்று கேட்டால் 'சாந்தி' கிடைத்... என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்... கொள்ளலாம் 'சாந்தி' கிடைத்த...ன்ருல் பத்திரிகைக்காரர்களெல்லா...ம் ரிஷிகளாகிவிட்டார்கள் என்ருே ...னிமேல் பணம் கேட்கமாட்டார்கள் ...ன்ருே அர்த்தமில்லை 'சாந்தி' என்ற ...ாடகம் கிடைத்ததைப்பற்றியே குறிப்பிடுகிறேன் இந்த சாந்தியை உண்டாக்கி பத்திரிகைக்காரர்களின் முன்னிலையில் சமர்ப்பித்தவர்கள் 'ஹிந்து' பத்திரிகை உதவி ஆசிரியர் ஆர் ராமஸ்வாமியும், நிருபர் நீலகண்டனுந்தான்.

'ஜீவா'வின் உயிரோவியத்தைத் தழுவி 'சாந்தி' என்ற நாடகம் ...யாரிக்கப்பட்டது காதல் ...யலால் அல்லல்பட்ட ஒரு பெண்...ணுக்கு கடமை அளித்த சாந்தியைச் சி...த்தரிப்பதே இந்த நாடகம் நாடகத்தை நடித்தவர்கள் அத்தனைபேரும் பத்திரிகைத் தொழிலில் உதவியாசிரியர்களாகவோ அல்லது நிருபர்களாகவோ இருப்பவர்கள் இந்த நாடகத்தை நடித்ததிலிருந்து பத்திரிகைக்காரர்கள் கண்டனக்காரர்கள் மட்டுமல்ல கலைஞர்களுங்கூடத்தான் என்பதை நிரூபித்தார்கள்

ஏப்ரல் 24-ந்தேதி ராஜாஜி ஹாலில் இந்த நாடகம் நடந்தது நாடகத்தில் ...ர்வமுள்ள டி. கே எஸ் சகோதரர்...ள், ஸ்ரீ வி வி. ஸ்ரீனிவாஸ ஐயங்கார், ஏ எஸ் பி ஐயர் முதலிய பல ...ிரமுகர்கள் விஜயம் செய்திருந்தார்கள்

நாடகம் புது முறையில் தயாரிக்கப்பட்டிருந்ததை முக்கியமாகக் குறிப்பிடவேண்டும். சினிமாவில் கையாளப்படும் 'Flash back' முறையை இந்த நாடகத்தில் கையாண்டிருந்தார்கள். இடி. மின்னல் குமுறலுடன் மழை பெய்துகொண்டிருந்தாளில் கதாநாயகனுக்குத் தந்தி ஒன்று வருகிறது அதில் கற்பகம் உயிர்நீத்த செய்தி கிடைக்கிறது. கதாநாயகன் கற்பகத்தை நினைத்துக் கண்ணீர் விடுகிருன் அத்துடன் பக்கத்தில் நின்ற மனைவிக்கும் தன் வாழ்க்கையின் முக்கியமான ஒரு பகுதியை எடுத்துச் சொல்கிருன் அந்தப் பகுதிதான் அவனுக்கும் கற்பகத்துக்கும் ஏற்பட்ட காதல் கதை 'அதை அறிய உனக்கும் பாத்யதை உண்டு; சொல்கிறேன் வா' என்று மனைவியை அழைக்கிருன் கதாநாயகன். அத்துடன் விளக்கணைந்து திரை மாறுகிறது பழய கதை ஆரம்பமாகிறது

நாடகத்தைப் பழைய முறையிலேயே திருப்பித் திருப்பி ஆடவேண்டாம் புது முறைகளும் இருக்கின்றன என்பதை பத்திரிகைகாரர்கள் நாடகம் தெளிவாக்கியது. கதாநாயகன் ஆர் ராமஸ்வாமி. மனைவி சேஷாத்திரி, சேவகன் நீலகண்டன், காதலி கற்பகமாக நடித்த சுந்தரராஜன் மாப்பிள்ளை குருநாதன், சகோதரன் என் ஆர். ஸ்ரீநிவாசன், கற்பகத்தின் தகப்பனுர் ஈ கே ராமஸ்வாமி எல்லோருமே நன்ருக நடித்தார்கள். பாட்டியாக வந்த வாசுதேவன் இளங்குமரியாக வரவில்லையே என்பதில் பலருக்கு பெருங் குறை அவ்வளவு வசீகரப் பெண்ணாக இருந்தார் அவர்.

இந்த நாடகத்தில் மைக்ரோபோன் கருவி சமயத்தில் சத்தியாக்கிரகம் செய்ததால் ஆரம்பக் காட்சிகளில் நாடகபாத்திரங்கள் பேசியது காதில் விழவில்லை. மழை, இடி இவற்றுக்கு கிராமபோன் பிளேட் வாங்கி ஒலி பெருக்க முயற்சித்தும், ஒலிபெருக்கித் தகராருல் முடியவில்லை. ஆகையால், அவையெல்லாம் இருந்ததாக ஊகித்துக்கொள்ள வேண்டியதாயிற்று

அடுத்த வருஷம் இந்தக் குறைகளையும் நிவர்த்தித்து, பத்திரிகைக்காரர்கள் சக்கைபோடு போடுவார்கள் என்று அவர்கள் சார்பாக உறுதி கூறுகிறேன்.

—சாண்டில்யன்.



மாடியில் நடந்த இந்த பாணிக்கிரகணத்துக்கு சந்திரன் தான் சாட்சி. 'சௌகா'ரில் சுப்புலுவும் சத்தி...



ஜீவன் பிக்சர்ஸ் 'ஸ்டே'ஜில் தேவ் ஆனந்த் ரமோலாவைக் காதலிக்கிறார்.

உலக நாடக மேடை

கிரீஸில் நாடகம்

★

(சக்தீதாஸன் சுப்பிரமணியம்)

ஐரோப்பிய நாடுகளுக்கெல்லாம் கலையுணர்வு அளித்த நாடு கிரீஸ். கி. மு. 534-ல் கிரீஸ் தேசத்திலே நாடகம் தோன்றிவிட்டது. பிஸிட்ராடஸ் என்பவன் நாடகத்துக்குப் பரிசு வழங்கினான். ஹோமர் கவிதைகளை எல்லாம் நடிப்பதற்கு ஏற்பாடு செய்தவன் இவனே.

அஸ்சைலஸ் என்பவன் தான் கிரீஸ் தேசத்தின் முதல் நாடக ஆசிரியன். சோக நாடகத்தின் தந்தையும் இவனே. இவனது காலத்துக்கு முன்பு நாடகத்திலே ஒரே ஆசாமி தோன்றி, எல்லாருடைய பாத்திரங்களையும் தாங்கி நடிப்பது வழக்கமாயிருந்தது. ஆனால் நாடகத்தில் இரண்டு பேரைப் புகுத்தி நடிக்கச் [illegible]வன் அஸ்சைலஸ்.

[illegible]0 முதல் 429வரை- கிரீஸ் [illegible] நாடகக் கலையானது மிகவும் செல்வாக்குடன் இருந்தது. வருஷத்தில் இரண்டே முறைதான் நாடகம் நடிக்கப்படும். ஜனவரி, மார்ச்சு ஆகிய இரண்டு மாதங்களிலும் நடக்கும் உற்சவங்கள். அந்த சமயத்திலே நாடகங்களும் நடிக்கப்படும். கிரேக்க நாடகமானது கவிதை நிரம்பியதாயிருக்கும். எதன்ஸ் நகரத்து மக்கள் எல்லாரும் இந்த நாடகங்களுக்கு வருவார்கள். நாடகங்கள் எல்லாம் இப்போது நாம் பார்க்கிற மாதிரி சில மணி நேரங்களில் முடிந்துவிடாது நாட் கணக்கில் நடந்து கொண்டேயிருக்கும்.

கிரீஸ் தேசத்து நாடக மண்டபம் எப்படியிருக்கும்? இப்போது நாம் பார்க்கிறோமே! தியேட்டர்! அந்த மாதிரி அல்ல. ஸ்டேடியம் என்று இப்போது சொல்கிறார்களே அதைப் போலிருக்கும் கிரேக்க தியேட்டர். ஒரு புறம் நீலக் கருங்கடல்! உயரத்திலே அதற்குப் போட்டியாய் நிற்கும் நீல வானம்! இந்தப் பின்னணியிலே மலைச்சரிவிலே பிறைச்சந்திரன்போல் அமைக்கப்பட்டிருக்கும். திறந்த வெளிதான் மேலே கூரை கிடையாது. இந்த இடத்திலே பல ஆயிரக் கணக்கான மக்கள் கூடி நாடகம் பார்ப்பார்கள். மலைச்சரிவிலே உட்காரும் இடம் அமைக்கப்பட்டிருப்பதால் நாடகம் எல்லாருக்கும் நன்றாகத் தெரியும்.

இப்படி மலைச் சரிவின்மீது உட்கார்ந்திருக்கும் ஜனங்களின் முன்னே ஒரு மேடை இருக்கும் அதிலே நடிகர்கள் தோன்றி நடிப்பார்கள் அந்த மேடைக்குப் பின்னால் ஒரு சிறு கூடாரம் இருக்கும் இதற்குள்ளே தான் நாடகக்காரர்கள் தங்கள் சாமான்களை எல்லாம் வைத்துக்கொண்டிருப்பார்கள், அவர்கள் வேஷம் போட்டுக் கொள்வதும் இந்த இடம் தான் இதற்கு 'ஸ்க்ரீன்' என்று பெயர் அதாவது 'படுதா அறை' துணி அறை' என்று பொருள் நாடக[illegible]திலே ஸீன் என்று சொல்கிறார்களே இந்த வார்த்தையானது 'ஸ்கின்' என்ற கிரீக் வார்த்தையிலிருந்து பிறந்தது.

நாடகம் பார்க்கும் கிரேக்க மகா ஜனங்கள் தங்கள் அபிப்பிராயங்களை எல்லாம் உடனுக்குடன் தெரிவித்துக் கொண்டுதான் இருந்தார்கள் இப்போதுங்கூட நம் நாட்டிலே நாடகக் கொட்டகைகளில் 'உஸ்' என்று சத்தம் போடுவதைப் பார்க்கிறோம் 'விஸில்' அடிப்பதைப் பார்க்கிறோம். இந்த மாதிரி விஷமங்கள்—அதாவது ரஸிகத்தன்மை—அந்தக் காலத்து கிரேக்கர்களிடமும் இருந்ததாகத் தெரிகிறது தங்களுக்குப் பிடிக்காவிட்டால். அப்போது கிரேக்கர்கள் மேற்படி 'சேஷ்டை'களால் தங்கள் வெறுப்பைத் தெரிவித்துக்கொண்டார்கள். 'உள்ளே போ' என்று சொல்வதை சமீபகால நாடகமேடையில் தான் பார்த்தோம். ஆனால் இது அந்தக் கால கிரேக்க மகா ஜனங்களும் கையாண்ட முறைதான். தங்களுக்குப் பிடிக்காவிட்டால் அந்த பாத்திரத்தை நிறுத்திவிட்டுத் தங்களுக்குப் பிடித்தமானதொரு பாகத்தை நடிக்கச் சொல்வது கிரேக்கர்களிடையே சகஜம்.

கணீரென்று பெருங் குரலுடன் தெளிவாகவும், அழுத்தந்திருத்தமாகவும் பேசவேண்டும். இதுதான் அந்தக் கால நடிகருக்கு முக்கியமாக இருக்கவேண்டிய அம்சம். கிரேக்கர்களுடைய நாடக மேடையில் மற்ற குறைகள் மன்னிக்கப்பட்டு வந்தன.

பிரபல ஹாலிவுட் நடிகையான வாண்டா ஹெண்ட்ரிஸுக்கு டென்னிஸ் ஆடுவதில் மிகவும் பிரியம். ஆனால் அவருக்கு ஒரு விபத்து ஏற்பட்டுக் கால் ஒடிந்துவிட்டதால் இன்னும் கொஞ்சநாளைக்கு டென்னிஸ் பாட்டைத் தொடமுடியாத ஸ்திதியிலிருக்கிறார்.

நமது பம்பாய்க் கடிதம்

★

சினிமாவுக்கே அதிகமாக போகாத என் நண்பர் ஒருவர், "பர்ஸாத்' என்னும் படத்தைத் தற்செயலாகப் பார்த்துவிட்டு, அன்றொரு நாள் என்னிடம் 'ஆஹா, நடிகை நர்கிஸ் என்ன அழகாகப்பாடுகிறாள்' என்று சொன்னா . உடனே நான் விழுந்து விழுந்து சிரிக்கத்தொடங்கினேன். என்னுடைய சிரிப்பு அவருடைய வயிற்றெறிச்சலைக் கிளப்பவே, என் சிறிப்பின் காரணத்தை அவரிடம் உடனே சொல்லாவிட்டால், என்னை லேசில் விடமாட்டார்போல் தோன்றவே, நான் அவருடைய தெரியாத்தனத்துக்காக சிரித்தேனென்றும், நர்கிஸ் இரவல் குரலைக்கொண்டு பாடியிருக்கிறாள் என்று விளக்கினேன்.

தற்காலத்தில் இந்தியப்படங்களில். இரவல் குரலை உபயோகித்துக்கொள்வது சர்வ சாதாரணமாகப் போய்விட்டது. இதைத்தான் 'பிளே-பாக்' (Play-back) என்று சொல்லுகிறார்கள். நல்ல குரலுள்ளவர்கள் அழகுள்ளவர்களாய் இருப்பதில்லை அதேபோல் நல்ல அழகுள்ளவர்க்ள் நல்ல குரலைப் படைத்திருப்பதில்லை. இப்போழுது கையாளப்படும் 'பிளே-பாக்' முறை ஏற்படுவதற்குமுன், அவ்வளவு அழகுள்ளவராய் இருக்காவிட்டாலும், நல்ல குரல்மாத்திரம் உள்ளவர்கள் ஸினிமாவில் நடித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் இந்த 'பிளே-பாக்' முறை இந்தியாவில், 1936-ம் வருஷம் கண்டுபிடித்தது முதல், நல்லபாட்டு பாடுகிறவர்களின் குரலைத் தனியாகப் பதிவு செய்து கொண்டு நல்ல அழகுள்ளவர்களை நடிக்கவைத்து, அவர்களே பாடுவதுபோல் செய்கிறார்கள். இதனால், சினிமா பார்க்கும்பொழுது, நடிக நடிகைகளே பாடுவதுபோல் தோன்றுகிறது.

பம்பாயில், சுரைய்யா, சுரேந்திர, நஸூம் இவர்களைத்தவிர, மற்ற எல்லா நடிக நடிகைகளுக்கும் பாட்டு நன்றாக பாடவே இயலாது. எல்லோரும் வெள்ளிர்உள் பாடகர்கள்தான். அவர்களுக்கு நல்ல முக வெட்டிருப்பதால், அவர்களெல்லோரும் இரவல் குரலைத்தான் உபயோகப் படுத்துகிறார்கள். இவ்வுண்மையைத் தெரியாதவர்கள் இக்கட்டுரையில் முதன் முதலில் குறிப்பிட்ட என் நண்பரைப்போல், சிலர் இருக்கலாம். ஆனால், சினிமாவில் உபயோகப்படுத்தும் மாயஜாலமெல்லாம் தெரிந்து அனேகமாக எல்லா இந்தியப் படங்களிலும் 'பிளேபாக்' பாட்டுகளை உபயோகப்படுத்துகிறார்களென்றும், ஒரு சினிமாவைப் பார்த்த உடனே, அப்படத்தில் யார் யார் குரல் இரவல் கொடுத்திருக்கிறார்கள் என்றும், சரியாக ஊகித்துச் சொல்லுபவர்களும் இருக்கிறார்கள்.

"பிளே—பாக்" என்னும் நூதன முறை இந்திய சினிமாவில் 1936-ம் வருஷம் முதல் முதலாக கையாளப் பட்டபோதிலும். 1939–40 வருஷம் வரை இந்த ரகசியம் படமுதலாளிகளைத் தவிர மற்றவர்களுக்கு ஒன்றுமே தெரியாமல் இருந்தது. இந்த நூதன முறையைப், படமுதலாளிகள் ஒருவருக்கும் சொல்லவில்லை. அனேகமாக, இரவல் குரல் கொடுப்பவர்களின் பெயர்களையும் வெளிப்படுத்துவதில்லை. அவர்களுக்கு ஒரு விளம்பரத்தையும் தருவதில்லை. ஒரு புகழுக்கும், பெயருக்கும் ஆசைப்படாமல் திரைக்குப் பின்னிருந்து. உயிரைவிட்டு பாட்டுப் பாடி அவர்கள் இரவல் கொடுக்கும் படங்களின் விருத்திக்கும் வெற்றிக்கும் அவர்கள் காரணமாகயிருக்கிறார்கள். ஆகையால், இந்த "பிளே—பாக்.' பாடகர்களை ஆதரவு செய்து போற்றுவதுபத்திரிகைகளின் கடமையாகும்.

"நடிக நடிகைகளின் நடிப்புத் திறமையைக் காட்டிலும், இரவல் குரல்கொடுக்கும் பாடகர்களின் பாட்டைக் கேட்டுதான் நாங்கள் ஆனந்தமடைகிறோம்' என்று அனேகர் என்னிடம் சொல்லக்கேட்டிருக்கிறேன். இதில் பூர்ண உண்மையிருக்கிறது. பம்பாயில், அனேகப்படங்களின் வெற்றிக்கு, 'பிளே-பாக்' பாடகர்கள் தான் காரணம் என்று நான் உறுதியாகச் சொல்லுவேன். இங்கே முதன் முதன்மையான "பிளே-பாக்" பாடகர்கள் யார் யாரென்றால், முக்கியமாக, லதா மங்கஷ்கர், முகேஷ், ஷம்ஷாத் பீகம், ரபி, ஸுரேந்திரா கார் முதலியவர்களைச் சொல்லவேண்டும்.

லதா மங்கேஷ்கர் ஒரு மஹாராஷ்டிரியப்பெண். இப்பொழுது அவளுக்கு 21 வயதாகிறது. இவளுடைய தகப்பனார், இவளுடைய 12-ம் வயதில் காலமானார். அவருடைய காலத்தில், அவர் ஒரு நல்ல நடிகரும், படமுதலாளியும்கூட. இவர் காலமானதும், இவருடன் வேலைசெய்துவந்த மாஸ்டர் விநாயக்என்னும் படமுதலாளி லதா மங்கேஷ்கரையும், அவளுடைய குடும்பத்தாரையும்காப்பாற்ற முன்வந்தார்.

சஹிதா, வஹிதா என்னும் முஸ்லிம் யுவதிகள் முதல் முதலாக பரதநாட்டியம் கற்று அரங்கேறும் சம்பவம் சமீபத்தில் ஈரோடில் நடந்தது. இவர்கள் ஈரோடு முனிசிபல் கமிஷனர் ஜனாப் எம். ஏ. ரஹ்மான் பி. ஏ அவர்களின் குமாரத்திகள்.

லதா மங்கேஷ்கர், தெய்வ சங்கல்பத்தால், நல்ல சாரீரரும் நல்ல மயக்குகின்ற குரலும் படைத்தவள். இவள் காலம் சென்ற மாஸ்டர் விநாயக்குடன் வேலை செய்தபோது 'பிளே—பாக்'' பாடகியாகவும், ஆறு படங்களில் நடித்தும் இருக்கிறாள். "நடிப்பில் எனக்கு ஆர்வமும் ஏற்படவில்லை. அதில் எனக்கு ஆசையும் இல்லை. திரைக்குப் பின்னிருந்து பாடுவதிலேயே எனக்கு மனச்சாந்தி ஏற்படுகிறது'' என்று என்னிடம் சென்ற வாரம் சொன்னாள்.

இதுவரையில். லதா மங்கேஷ்கர், 100 படங்களுக்குமேல் இரவல் பாட்டு கொடுத்திருக்கிறாள். இரண்டு மாதங்களுக்கு முன், கோயம்புத்தூருக்குப் போய் "ஜுபிடர் பிக்சாஸாரின்'' 'ராணி' என்னும் படத்திற்கு நான்கு பாட்டுகள் கொடுத்திருக்கிறாள். இங்கு அவளுக்கு இருக்கும் கிராக்கி சொல்லி முடியாது.

—தி. மா. ராமச்சந்திரன்.

22

பக்கத்து வீட்டில் கனகாவைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்த அவர்கள் தங்கள் பேச்சை வேறு விஷயத்தில் திருப்பினார்கள்.

இந்த கம்பெனி மானேஜர் கொலையைப்பற்றி பத்திரிகையில் வந்தபோது பட்டணமே அமர்க்களப்பட்டது. மூலை முடுக்கு எங்கு பார்த்தாலும் இது பற்றிய பேச்சாகவே இருந்தது

'ரொம்ப அக்கிரமம் ஸார். ஜனங்களுடைய மனசு எவ்வளவுக்குத்தான் துணிந்துவிட்டது பார்த்தீர்களா?' என்பார் ஒருவர்

'ஒன்று சொல்லுகிறேன் கேளுங்கள் எப்பொழுது ஜனங்களுக்கு தெய்வம், தேவாதி வேதம், சாஸ்திரம், ஆசார அனுஷ்டானங்கள் இவைகளில் பக்தி, சிரத்தையெல்லாம் விட்டுப்போய் பணம்தான் தெய்வம், பணம்தான் ஸர்வமும் என்ற மனப்பான்மை ஏற்பட்டு விட்டதோ அன்றே வந்துவிட்டது உலகத்துக்கு அனர்த்தம். பணம்தான் பிரதானம் அதற்கு மிஞ்சிதான் மீதியெல்லாம் அதற்காக எதையும் செய்யலாம் என்ற எண்ணம் ஜனங்களின் மனதில் வேரூன்றிவிட்டபிறகு இதெல்லாம் நடைபெறுவதில் என்ன ஆச்சரியமிருக்கிறது!' என்பார் இன்னொருவர்

'சே! சே! தயை, தாட்சண்யம், ஈவு, இரக்கம் ஒன்றுமில்லாமல் கேவலம் மிருகமாகவல்லவோ போய்விட்டான் மனிதன்!' என்பார் வேறொருவர்

'மிருகமா? மிருகத்துக்கும் கேவலம் ஸார் கேவலம் மிருகத்துக்குக்கூட தன்னுடைய கன்று, எஜமான் என்ற பாசம் விச்வாஸம் எல்லாம் இருக்கிறது. அதைக்கூட விட்டுவிட்டானே மனிதன்! தன்னைப் போக்கிதான் மீதி பேரெல்லாம் என்ற முடிவுக்கு வந்துவிட்டபிறகு என்ன இருக்கிறது அப்புறம்?' என்பார் இன்னொருவர்.

இல்லாவிட்டால் இந்த மாதிரி துணிகரக் கொலை செய்ய மனது எப்படித்தான் துணியும்?' என்பார் வேறொருவர்

'என்னவோ வர வர ஜனங்களின் மனது போகிற போக்கைப் பார்த்தால் எந்த நிமிஷமும் மனிதன் ஆபத்தை எதிர்பார்த்தே இருக்க வேண்டியதாகவல்லவோ போய்விட்டது! என்பார் மற்றொருவர்

'விநாச காலே விபரீத புத்தி:' என்பார்கள் அந்த மாதிரி பிரளயம் சமீபித்து விட்டது அதற்குத் தகுந்த மாதிரி ஜனங்களுடைய மனதும் மாறித்தானே ஆகவேண்டும்! நான் இன்று சொல்லுகிறேன் வேண்டுமானால் பாருங்களேன் வெகு சீக்கிரத்தில் மனிதர்கள் தாய் தகப்பன், பெண்டு பிள்ளை என்று பாராமல் ஒருவர்க்கொருவர் வெட்டி மடியப் போகிறார்கள் பாருங்களேன்' என்பார் மற்றொருவர்.

இந்தமாதிரி அந்த மானேஜர் கொலை நடந்த இரண்டு, மூன்று தினங்கள் வரை எங்கு பார்த்தாலும் இதுபற்றிய பேச்சாகவே இருந்தது

அப்புறம் ரொம்ப நாட்கள் வரையில் இதுபற்றிய பிரஸ்தாபத்தையே காணோம்

நான்கூட நினைப்பேன்: அவ்வளவு பிரமாதப்பட்ட விஷயம் இப்படி கிணற்றில் கல்போட்ட மாதிரி இருக்கிறதே என்று.

இந்த விஷயமாக பக்கத்து வீட்டில் இந்த கோஷ்டி பேச்சை மாற்றவே நான் மிகவும் உன்னிப்பாக அதைக் கேட்க ஆரம்பித்தேன்

வேறொன்றுமில்லை என் கணவரைப்பற்றி எதுவும் சொல்ல முடியாமலிருக்கிறதா? அந்த விசாரம்தான் இதில் அதிகமாக கவனத்தைச் செலுத்தும்படியான அவசியம் ஏற்பட்டு விட்டது

இல்லாவிட்டால் நானாவது மறைவில் பதுங்கி இருந்து ஒட்டு கேட்பதாவது! இந்த ஒட்டு கேட்பவர்களைக் கண்டால் என் தகப்பனருக்கு கட்டோடு பிடிக்காது இதனால்தான் குடும்பங்களில் வீண் சண்டைகளும் மனஸ்தாபங்களும் வருகிறதென்பது அவருடைய தீர்மானமான அபிப்ராயம்

அவ்வளவென்ன. இப்பொழுதுதான் இந்த 'வம்பர் மகா சபை' ஜோஸ்யர் எங்கள் வீட்டுக்கு வந்ததாக ஒரு பெரிய அபாண்டத்தைச் சொல்லி கனகாவின் மீதுள்ள கொஞ்சநஞ்சமிருந்த சந்தேகத்தை ஊர்ஜிதம் செய்து விட்டது இப்படித்தானே இருக்கும் மீதி விஷயங்களும்!

இது நன்றாகத் தெரிந்துதானிருக்கிறது இருந்தாலென்ன? எதுவும் சொந்த விஷயம் என்று வந்து விட்டால் மனது சிறிது மயங்கத்தான் செய்கிறது. ஆகவே அவர்கள் பேச்சை மிகவும் கவனித்துக் கேட்டேன்

'என்னடி, இன்றைக்கு கோர்ட்டில் பெரிய ரகளையாமே!' என்றாள் ஒருத்தி

'ஆமாம் எங்கள் அகத்துக்காரர்கூடச் சொன்னார். ஆனால் முழு விவரத்தையும் கேட்பதற்குள் அவர் எங்கோ அவசரமாய் வெளியே போக வேண்டுமென்றும் ராத்திரி வந்து எல்லாவற்றையும் விவரமாகச் சொல்வதாகவும் சொல்லிவிட்டுப் போய் விட்டார். ரொம்ப துணிச்சல்காரன்போலிருக்கிறது அவன்!' என்றாள் இன்னொருத்தி.

'துணிச்சல்காரன் என்று நாம் சொல்லிவிடுகிறோம். அவன் மனது அப்படி கொதித்துப்போயிருக்கிறது' என்றாள் முதலில் பேசியவள்

'என்ன ஸமாசாரம்? எனக்கும்தான் கொஞ்சம் தெரியும்படியாகச் சொல்லுங்களேன் என்றாள் வேறொருத்தி

......கம்பெனி மானேஜர் கொலை செய்யப்பட்டதும், எதிரி போலீஸில் சரணடைந்ததும் தெரியுமோவியோ?' என்றாள் முதலில் பேசியவள்.

'என்னடி தெரியுமோலியோ என்று கேட்கிறாயே? நாம் தானே முதன் முதலில் அன்று பத்திரிகையில் பார்த்தோம்? ஆமாம் அப்புறம் அதுபற்றி ஒன்றும் தெரியவில்லையே. என்ன ஆயிற்றுஎன்று நானே கேட்கவேண்டுமென்றிருந்தேன். ஆமாம். யார் அவன்? என்ன ஆயிற்று அப்புறம்?' என்றாள் மூன்றாவதாகப் பேசியவள்.

'அதைப்பற்றித்தான் சொல்லுகிறேன். அது ஒரு பெரிய கதையாக இருக்கிறது' என்றாள் முதலில் பேசியவள்.

'இங்கே எதிர்வீட்டிலே ஒரு சினிமாக்காரி இருந்தாளே அவள்கூட இதில் சம்பந்தப்பட்டவளாமே?' என்றாள் இரண்டாவது பேசியவள்

'அப்படியானால் உன் அகத்துக்காரர் சொல்லியிருக்கிறார்போலிருக்கிறது?' என்றாள் முதலில் பேசியவள்.

'இல்லைமாமி. அவர் (கணவர்) கோர்ட்டிலிருந்து வந்தார் 'இன்று கோர்ட்டில் பெரிய ரகளை எதிர்வீட்டில் ஒரு சினிமாக்காரி இருந்தாளே ஞாபகம் இருக்கிறதா?' என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தார். அதற்குள் அவரை யாரோ அவசரமாய் வந்து கூப்பிட்டார்கள் ராத்திரி வந்து எல்லாவற்றையும் விவரமாகச்சொல்கிறேன்' என்று சொல்லிவிட்டு வெளியே போய்விட்டார் அவ்வளவுதான் வேறொன்றும் தெரியாது எனக்கு? என்றாள் இரண்டாவது பேசியவள்

'மானேஜர் கொலைக்கும் அந்த சினிமாக்காரிக்கும் என்ன சம்பந்தம்! என்றாள் வேறொருத்தி

பிறகு முதலில் பேசியவள் சொல்ல ஆரம்பித்தாள்:

நளினிக்கு அப்பொழுது மூன்றுவயதோ நான்கு வயதோவாம். தாயார், தகப்பனார், பெண் மூன்றுபேரும் சந்தோஷமாகத்தான் வசித்து வந்தார்களாம். நளினியின் தகப்பனாருக்கு ஏதோ ஒரு தொழிற்சாலையில் இருபது ரூபாய் சம்பளமாம் கொஞ்சம் ஏழைக் குடும்பம்தானும். நளியின் தாயார்மாத்திரம் சற்று பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவளாம் நல்ல அழகு. நன்றாகப் பாடுவாள் என்பதெல்லாம்தான் நமக்குத்தெரிந்த விஷயம். நளினியின் தகப்பனார் ரொம்பவும் நல்லவராம் வீண்விஷயங்களில் தலையிட்டுக்கொள்ளமாட்டாராம் தான்உண்டு, தன்வேலையுண்டு, அவ்வளவுதானும். வீண் ஆடம்பரத்திலெல்லாம் அவருக்கு இஷ்டமில்லையாம் தனது அந்தஸ்தை நினைத்து அதற்குத் தகுந்தமாதிரி வாழ்க்கையை நடத்தவேண்டும் என்ற கொள்கையை உடையவராம் சிலதுகள்மாதிரி தன்னுடைய அந்தஸ்து இன்னதென்று தெரியாமல் கடன் கிடைக்கிறதே என்று கண்ணை மூடிக்கொண்டு அளவே இல்லாமல் கடனை வாங்கி ஹா, ஹூ என்று தலை கால் தெரியாமல் 'ஆட்டம் ஆடிவிட்டு அப்புறம் கொடுத்தவர்கள் பணத்தைத் திருப்பிக்கேட்கும்போது தொல்லை தாங்கமுடியாமல் எங்காவது கண் காணாத தேசத்துக்கு ஓடி விடுவோமா, விஷத்தைச் சாப்பிட்டுவிட்டு பிராணனை மாய்த்துக்கொள்வோமா, அல்லது குளம், குட்டை, சமுத்திரத்தில் விழுந்து உயிரை விடுவோமா, அல்லது தாக்குப் போட்டுக்கொண்டு மரத்திலோ, வீட்டிலோ தொங்குவோமா என்று மனதைக் குழப்பிக்கொள்வதில் அவருக்கு இஷ்டமே இல்லையாம் அப்படிப்பட்டவர்களைக் கண்டாலே அவருக்கு கட்டோடு பிடிக்காதாம் வரவுக்குத் தகுந்த வாழ்க்கை என்ற திட்டத்தில் போகிறவராம்' என்று அவள் சொல்லிக்கொண்டிருக்கையில், 'மானத்துக்கு அஞ்சுகிறவர் போலிருக்கிறது பாவம்!' என்றாள் ஒருத்தி

அப்படிப்பட்ட இடத்தில் இந்தத் தங்கம் எப்படி மாமி குடித்தனம் செய்தாள்?' என்றாள் இன்னொருத்தி.

'அதுதான் தொல்லைக்கெல்லாம் காரணம்' என்று சொல்லிவிட்டு முதலில் பேசியவள் மேலே சொல்ல ஆரம்பித்தாள்

இந்தத் தங்கம் இருக்கிறாளே—அதான் எதிர் வீட்டிலிருந்தவள் அந்த சினிமாக்காரி நளியின் தாயார். இதற்கு நேர் விரோதமாம். காலில் சிலிப்பர், கையில் ரிஸ்டுவாட்சு,

முகத்தில் அரை அங்குலம் ஸ்னோ, பவுடர், நெற்றியில் காலணா அகலத்துக்கு குங்குமப்பொட்டு, தங்க பிரேம் போட்ட மூக்குக்கண்ணாடி. கோணவகிடு. முழம் நீளம் சரிவுவைத்து தொடை வரையில் தொங்கும் பின்னல், அதில் கொத்து கனகாம்பரம். காதில் தோள்பட்டையைத் தொடும் அளவுக்குத் தொங்கட்டம். இடுப்பில் ஒரு கைக்குட்டை, சாவிக் கொத்து, மொட மொடவென்று சலவைக்குப்போய் வந்த வாயில் புடவை, பப் வைத்த ஜாக்கெட். இவ்வளவில் ஒன்று குறைந்தால்கூட அவள் வெளியில் கிளம்பமாட்டாளாம். பிரதிதினமும் மாலை ஐந்து மணியானால் பீச்சுக்கோ. ஸங்கீத ஸபாவுக்கோ. ஸினிமாவுக்கோ வீட்டைவிட்டுக் கிளம்பியாகிவிட வேண்டுமாம். ஆபீஸிலிருந்து கணவன் வந்தால் பக்கத்துக் குடித்தனக்காரர்களிடம் தான் சாவி கேட்டு வாங்கிக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போக வேண்டுமாம் 'ஹாட்டும் பூட்டும்' இல்லாத கணவனுடன் கூட யாராவது வெளியே கிளம்புவார்களா என்று தான் சொல்லுவாளாம். தங்கத்தின் அகத்துக்காரர் பாவம், குடுமிப் பேர் வழியாம். அதனால் அவர் தன்னுடன் கூட வருவதை அவள் விரும்பவே மாட்டாளாம். சிலரிடத்தில் அவரைத் தன்னுடைய அகத்துக்காரர் என்று சொல்லிக்கொள்வதற்கே அவள் ஸங்கோஜப் பட்டுக்கொள்வாளாம் பாழும் தெய்வம் இப்படி தன்னை அநியாயமாகத் தலைதூக்க முடியாமல் செய்துவிட்டதே என்று அடிக்கடி கஷ்டப்பட்டுக்கொள்வாளாம். கணவனுடன் முகம்கொடுத்துப் பேசமாட்டாளாம் வீட்டில் எப்பொழுதுபார்த்தாலும் எலியும் பூனையும்மாதிரிதானும்

'இவர்களுடைய வீட்டுக்கு மூன்றாவது வீட்டில் ரங்கராமானுஜம் என்று ஒருவன் இருந்தானும் பேர்வழி பார்ப்பதற்கு ரொம்ப நன்றாக இருப்பானும் நிகு நிகுவென்று வாரிவிடப்பட்ட கிராப், ஒரு ஸில்க் ஜுப்பா, கழுத்தில் ஒரு செயின், பைஜாமா இவைகளுடன் அவன் தெருவில் கிளம்பிவிட்டால், ஒவ்வொரு வீட்டிலும் உள்ள இளம் பெண்கள் ஜன்னல் வழியாகவும். கதவிடுக்கின் வழியாகவும் அவனைப்பார்க்கத் தவறவேமாட்டார்களாம். சில இடங்களிலிருந்து ஒன்றிரண்டு பெருமூச்சுகள்கூடக் கிளம்புமாம்

'தங்கம்தான் முதலில் வலையை வீசினாளோ. ரங்கராமானுஜம்தான் வீசினானோ தெரியாதாம் இருவருடைய கண்களும் கொஞ்ச நாள் அப்படி பேசிக்கொண்டனவாம். பிறகு தங்கத்தின் அகத்துக்காரரை எப்படியோ சிநேகம் செய்துகொண்டு ரங்கராமானுஜம் தங்கத்தின் வீட்டுக்குப் போக்குவரத்து ஏற்படுத்திக்கொண்டு விட்டானும் தங்கமும் ரங்கராமானுஜம் வீட்டுக்கு அடிக்கடிபோக ஆரம்பித்துவிட்டாளாம். வீட்டுப் போக்குவரத்தோடு இருந்தது உல்லாஸ பிரயாணத்திலும் போய் முடிந்துவிட்டதாம்

'இதுவரை அகத்துக்காரருடன் வெளியே போவதற்கு அவமானப்பட்ட தங்கம், அவருடன் பீச்சுக்குப் போகாமல் இருக்கவேமாட்டாளாம். இவர்கள் பீச்சுக்குக் கிளம்பினால். காலையும், கண்ணையும் தீட்டிக்கொண்டிருக்கும் ரங்கராமானுஜமும் இவர்களுடன் பீச்சுக்குக் கிளம்பிவிடுவானும். பீச்சுக்குப்போய் வெகுநேரம் வரை ஓர் ஒதுக்கமான இடத்தில் உட்கார்ந்துகொண்டு பேசிக்கொண்டிருந்துவிட்டு எல்லோரும் போன பிறகுதான் வீட்டுக்குத் திரும்புவார்களாம் சில நாட்கள் பத்து பதினோருமணி வரைகூட பீச்சில் தங்கியிருப்பார்களாம்

'அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள் சும்மா இருக்கிறார்களா? முதலில் காதோடு காது வைத்தாற்போல் பேசப்பட்ட விஷயம் திண்ணைப் பேச்சில் பிரதான அம்சமாகப் போய்விட்டதாம் சில சமயங்களில் தங்கத்தின் அகத்துக்காரரின் காதுபடக்கூடப் பேசுவார்களாம் தங்கத்துக்கும் ரங்கராமானுஜத்துக்குமிடையே இருந்த காதல் உறவு அக்கம் பக்கத்து ஜனங்கள் பார்த்து கைதட்டிச் சிரிக்கும் அளவுக்கு முதிர்ந்துவிட்டதாம். தங்கமும் ரங்கராமானுஜ

றும் சில சமயங்களில் தனியாகவே வெளியில் போய்வரத் தலைப்பட்டு விட்டார்களாம்.

இதெல்லாம் தங்கத்தின் அகத்துக்காரருக்குப் பிடிக்கவில்லையாம். ஜாடைமாடையாக தங்கத்தைக் கண்டித்துப் பார்த்தாராம் அவள் கேட்கவில்லையாம் பிறகு நேரிடையாகவே சுட்டிக்காட்டி கண்டிக்க ஆரம்பித்தாராம். இதையும் அவள் பொருள்படுத்தவில்லையாம் இனி ரங்கராமானுஜத்தின் விட்டுக்குப் போகக் கூடாது என்று கண்டிப்பாகவே சொன்னாராம் அவள் கேட்கவில்லையாம் இதற்குமேல் என்ன செய்வதென்று ஒன்றும் தெரியாமல் விழித்துக்கொண்டிருந்தாளாம்

'ஒரு சமயம் தங்கத்தின் அகத்துக்காரர் ஒரு கலியாணத்துக்காக வெளியூருக்குப்போயிருந்தாராம் போன இடத்தில் சம்பந்திகளுக்கிடையே சீர்வரிசை வரதக்ஷிணைத் தகராறு காரணமாகக் கலியாணம் நின்றுவிட்டதாம் ஆகையால் அன்றிரவே வீட்டுக்குத் திரும்பிவிட்டாராம்.

'வீட்டுக்கு வந்தால் தங்கத்தைக் காணோமாம் உடனே ரங்காராமானுஜத்தின் வீட்டுக்குச் சென்றாராம். அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் வம்பளப்பது சரிதான் என்று ஊர்ஜிதம் செய்துகொள்ளும்படியாக நேரிட்டுவிட்டதாம் அப்பொழுது அங்கு காணப்பட்ட ஒரு சூழ்நிலை.

அத்துடன் அவருடைய மனது இடிவிழுந்து விட்டதாம் பாவம்! அப்பொழுதும்கூட மானத்துக்கு அஞ்சி ரங்கராமானுஜத்துடன் உள்ள ஒரு தொடர்பை கத்தரித்துக் கொள்ளும்படி காலில்விழுந்து கேட்க்காத குற்றம. தங்கத்தினிடம் கெஞ்சிக் கேட்டுக்கொண்டாராம். அவள் அவருடைய இந்த வேண்டுகோளை லக்ஷயத்திலேயே வைக்கவில்லையாம்

'பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டல்லவா? இவ்வளவு தூரம் பொறுத்ததே எவ்வளவோ ஆச்சரியப்படக்கூடிய விஷயம் ஒன்று ரங்கராமானுஜத்தைத் தீர்த்துக் கட்டி விடுவது அல்லது தான் இந்தக் குடும்பத்தை விட்டு வெளியே விடுவது இவை இரண்டிலொன்று எப்படியும் நடைபெற்றாக வேண்டும் என்று சங்கல்பம் செய்து கொண்டுவிட்டாராம் இதற்கான ஸமயத்தையும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தாராம்.

'அவர் எதிர்பார்த்திருந்த ஸமயமும் வெகு சீக்கிரத்திலேயே கிடைத்துவிட்டதாம் அதற்கென்று மனதை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்து கையைத் தீட்டிக்கொண்டு உட்கார்ந்துகொண்டிருந்தால் ஸமயம் கிடைப்பது ஒரு பிரமாதமா என்ன? ஒருநாள் தங்கத்தின் அகத்துக்காரர் அன்று ஆபீஸில் அதிக வேலை இருக்கிறதென்றும் ராத்திரி பதினொரு மணிக்குத்தான் வரமுடியும் என்றும் சொல்லிவிட்டுப் போனாராம் போனவர் மத்தியானம் மூன்று மணிக்கே வீட்டுக்கு வந்துவிட்டாராம்

'வந்தால் வீட்டில் தங்கத்தைக் காணோமாம். அவர் எதிர்பார்த்ததுதானும் இது உடனே அப்பொழுதுதான் ஆறணா கொடுத்து வாங்கிய பேனாக்கத்தி பாக்கெட்டில் இருக்கிறதாவென்று பார்த்துக்கொண்டாராம் வீட்டுக் கதவை திறந்துகொண்டு உள்ளே சென்று தீர்த்தம்கூட சாப்பிடவில்லையாம் நேராக அப்படியே பரபரவென்று ரங்கராமானுஜத்தின் வீட்டுக்குச் சென்றாராம். ரங்கராமானுஜத்தினுடைய வீட்டுக் கதவும் பூட்டப்பட்டிருந்ததாம் சரி. இருவரும் ஜோடி போட்டுக்கொண்டு எங்கோ வெளிக் கிளம்பிவிட்டார்கள் என்று தீர்மானித்துவிட்டாராம்

'அப்பொழுது எதிர்வீட்டிலிருந்தவர்கள் இவரைப் பார்த்துவிட்டு ஏதோ பரிகாசமாகப் பேசுவதுபோலிருந்ததாம். சே! மானங்கெட்ட பிறகு இந்த உயிரை எதற்காக வைத்துக்கொண்டிருப்பது என்றும். அந்த நிமிஷத்திலேயே பிராணனை மாய்த்துக்கொண்டு விட வேண்டும் என்றும் மனது துடியாய்த் துடித்ததாம் இருந்தாலும் அவர்களிருவரையும் அதிலும் அந்த ரங்கராமானுஜத்தை ஒழித்துக் கட்டிவிட்டுத்தான் மீதி காரியமெல்லாம் என அடக்கிக் கொண்டாராம்.

'அவர்கள் எங்கே போயிருப்பார்கள் எங்கே சென்று தேடுவது என்று தெரியாமல் சிறிது நேரம் மனது போனபடி சுற்றிக்கொண்டிருந்தாராம் இதற்குள் சூரியாஸ்தமனமாகி இருட்டியும்விட்டதாம் தெருக்கோடியிலேயே வட்டமிட்டுக்கொண்டிருந்தாராம் முதலில் ரங்கராமானுஜம் ஒரு ரிக்ஷாவில் வந்து அவருடைய வீட்டில்போய் இறங்கினானும் பிறகு பத்து நிமிஷம் கழித்து தங்கம் ஒரு ரிக்ஷாவில் தனது வீட்டில் வந்து இறங்கினாளாம் உடனே ஐந்து நிமிஷத்துக்கெல்லாம் தங்கம். ரங்கராமானுஜத்தின் வீட்டுக்குச் சென்று விட்டாளாம் இதையெல்லாம் தங்கத்தின் அகத்துக்காரர் தெருக்கோடியில் பதுங்கியிருந்து பார்த்துக்கொண்டிருந்தாராம்.' என்று முதலில் பேசியவள் சொல்லிக்கொண்டிருக்கையில், 'பாவம்!' என்றாள் ஒருத்தி

'நடு நடுவில் பேசாதே ரொம்ப சுவாரஸ்யமான விஷயம் அப்புறம் சொல்கிறேன் கேளேன்' என்று சொல்லி விட்டு முதலில் பேசியவள் மேலே சொல்ல ஆரம்பித்தாள்

'இரண்டாம்பேருக்குத் தெரியாமல் தங்கத்தின் அகத்துக்காரர் பதுங்கிப் பதுங்கி ரங்கராமானுஜத்தின் வீட்டு தெருத்திண்ணையில் வந்து உட்கார்ந்துவிட்டாராம் தெருக் கதவு உள் தாழ்ப்பாள் போடப்பட்டிருந்ததாம்.

'உள்ளே தங்கம், ரங்கராமானுஜம் பேச்சு சிரிப்பு அமர்க்களப்படுகிறதாம் தான்போட்ட திட்டத்தை நிறைவேற்ற இரண்டு மூன்றுதரம் எழுந்து எழுந்து உட்கார்ந்துவிட்டாராம். என்னதான் மனதைக் கல்லாக்கிக் கொண்டாலும் மனது அவ்வளது சீக்கிரத்தில் துணியவில்லையாம் கடைசியில் மனதை கெட்டிப்படுத்திக் கொண்டு தெருக்கதவைத் தட்டினாராம் 'யாரது?' என்று உள்ளிருந்து ரங்கராமானுஜம் கேட்டானும் பதில் ஒன்றும் சொல்லாமல் மறுபடியும் கதவைத் தட்டினாராம்.

உடனே கூடத்து அறைப்பக்கம் யாரோ சொல்வதும் சறுக் சறுக் என்று புதுப் புடவையின் ஓசையும் கேட்டதாம் சரி தங்கம்தான் கூடத்து அறையில் போய் ஒளிந்து கொள்கிறாள் என்று முடிவு செய்துவிட்டாராம் அதற்குத் தகுந்தமாதிரி அடுத்த செகண்டே கூடத்து அறைக் கதவுகள் மூடப்பட்ட ஓசையும் கேட்டதாம் பிறகு ரங்கராமானுஜம் இதோ வந்துவிட்டேன் என்று சொல்லிக் கொண்டே வநது தெருக்கதவைத் திறந்தானும்

'வெளியே தங்கத்தின் அகத்துக்காரர் நிற்பதைப் பார்த்துவிட்டு சற்று பிரமித்துப் போய் விட்டானும் உடனே சமாளித்துக்கொண்டு 'அடே! நீங்களா, வாங்கோ நான் யாரோவென்றல்லவோ பார்த்துவிட்டேன், வாருங்கள் உள்ளே போகலாம் என்று சொல்லி விட்டு தங்கத்தின் அகத்துக்காரரை வரவேற்றானும் ரங்கராமானுஜம்

'அடடா, என்ன ஆதரவு! என்ன வரவேற்பு! இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்கிறமாதிரி, யாரை ஏமாற்றுகிற வித்தை இதெல்லாம் என்று மனதுக்குள் எண்ணிக்கொண்டு 'உங்களுடன் ஒரு விஷயம் பேச வேண்டும் வேலை ஒன்றுமில்லையே? ஒழிவுதானே இப்பொழுது? என்று கேட்டாராம் தங்கத்தின் அகத்துக்காரர் தாராளமாகப் பேசலாம் ஒழிவுதான் ஒழிவே இல்லாவிட்டால்கூட உங்களைப்பற்றிய வரையில் உங்களுக்குப் பிறகுதான் மீதி எல்லாம் வாருங்கள் உள்ளே போகலாம் என்று சொல்லிவிட்டு உள்ளே செல்லத் திரும்பினானும் ரங்க ராமானுஜம்

'இதுதான் சமயமென்று பாக்கெட்டிலிருந்த பேனாக்கத்தியை எடுத்து ரங்க ராமானுஜத்தின் முதுகில் ஒரு குத்து குத்தினாராம் தங்கத்தின் அகத்துக்காரர்' என்று முதலில் பேசியவள் சொன்னபோது 'உம். அப்புறம்? என்று பரபரப்போடு கேட்டாள் ஒருத்தி.

(தொடரும்)

உங்கள் கால பலன்

'ராவ்'

மேஷ ராசி

அசுவனி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய

இந்த மாதத்தில் மேஷ ராசிக்காரர்களுக்குக் கிரகங்கள் குடும்பத்தைக் குறித்தும் பணத்தைப் பற்றியும் கவலைகள் ஏற்படக்கூடிய நிலையிலிருக்கின்றன இருப்பினும் உரியகாலத்தில் உதவிகிட்டி மன நிம்மதியும் உண்டாகும் சுக்கிரன் 12-ல் இருக்கிறார் செவ்வாயின் பார்வையையும் பெறுகிறார் எனவே, மனைவியின் சுகவீனம் காரணமாகக் குடும்பத்தில் கஷ்டங்களேற்படக்கூடும் பண முடை தோன்றும். லக்னத்தில் புதனிருப்பதால், தற்காலிகமாகச் சங்கடமாயிருந்தாலும் வருமான இனங்கள் வசதியாகவேயிருக்கும் செலவு கடுமையெனப் புலப்படும் சிலருக்கு இச்செலவுகளெல்லாம் சுப காரியங்களை முன்னிட்டு ஏற்படக்கூடும் மே மாதக் கடைசி வாரத்திலிருந்து பண வசதிகள் பெருகும் புதன் லக்னத்திலிருப்பதால், கிட்டிய பந்துக்களுடன் உள்ள தொடர்பு பாதிக்கப்படலாம் ஏழ்மை நிலையிலிருப்பவர்களானால், அவர்கள் கைமாற்று வாங்க நேரிடும் உஷ்ண அதிகரிப்பால் வயிற்றுக்கோளாறு ஏற்பட்டு, சில தினங்கள்வரையில் தேகசுகம் திருப்திகரமாயிராது வயது முதிர்ந்தவர்களுக்குச் சில தினங்கள்வரையில் கண்களில் கோளாறுகள் இருக்கும் இம்மாதத்தில் குழந்தைகளிடம் விசேஷமாகக் கவனத்தைச் செலுத்தும்படியிருக்கும் சிலருக்குத் தொண்டையில் கோளாறுகள் ஏற்படுவது இம்மாதத்தில் பிரத்யேகம்சமாயிருக்கும் உத்தியோகத் துறையில் வேலை பளு அதிகம் மேலதிகாரிகளுடன் அனுசரித்துப் போகவேண்டும் இல்லையானால். உத்தியோகத்தில் விரும்பத்தகாத விவகாரம் ஏதாவது ஏற்பட இடம் கொடுத்ததாகவிருக்கும். ஆபீஸில் பிறரோடு சச்சரவு வைத்துக் கொள்ளக்கூடாது இம்மாத இரண்டாம் பகுதியில் ஆபீஸ் விவகாரங்கள் சுமுகமான நிலைமையை அடையும். வியாபாரிகளுக்கு இரண்டாம் பகுதிதான் ஏற்றது முதற் பகுதியில் எதிர்பாராத நஷ்டமும், ஆதரவின்மையும் இருக்கும். ஹேஷ்யங்கள் சாதகமாயிராது.

மே 20 23. 28 30 ஜூன், 1 6 7, 12. 13 தேதிகள் இவர்களுக்கு அதிருஷ்டகரமானவை.

விருஷப ராசி

கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோஹிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் முடிய

விருஷப ராசிக்காரர்களுக்கு இம்மாதம் குடும்பக் கவலைதான் பிரதானமான விஷயம். வாடகைவீடுகளிலிருக்கும் ஏழைகளுக்கு வீட்டுப் பிரச்னை தீவிரமாகும் சிலருக்குக் குடும்பத்தில் சச்சரவுகள் உண்டாகும் சிலர் வீடு நிலம் இவற்றில் பணம் போடும்படியாகும் குடும்பவாழ்வில் முதியவர்கள் செல்வாக்கு பிரயோகமாவதற்காக மனம் சுணங்க நேரும் தற்காலிகமாகத் தாயாருடன் மனஸ்தாபப்படும்படியிருக்கும் வாஹன யோகத்தைப் பரீட்சிக்கலாமென்றாலும் இதில் சிலருக்குத்தான் வெற்றியுண்டு மனைவி அல்லது புருஷனின் தேகசுகம் திருப்திகரமாயிராது 4 5 இடங்களிலுள்ள தீயகிரகங்கள் காரணமாகச் சொந்த ஆரோக்கியம் வயிற்று உபாதைகளினால் பாதகமடையும் முதற்பகுதியில் அதிகச் செலவு. இரண்டாம் பகுதியில் சகாயமான நிலைமை தக்க சமயத்தில் பணத்தால் உதவிசெய்யவில்லையென்ற காரணத்துக்காக உறவினர்கள்; அவதூறு செய்வார்கள் அல்லது அவர்களால் கவலைகளாவது ஏற்படும் குழந்தைகளில் ஒருவருடைய தேகசுகம்பற்றி மனக்கவலை ஏற்படும் இம்மாதம் மூன்றும்வாரம் வரையில் கிட்டிய பந்துக்களிடம் எவ்விதமான பணக் கொடுக்கல் வாங்கல் சச்சரவுகளையும் வைத்துக்கொள்ளலாகாது உத்தியோகத்தில் சீரான மாறுதலும். மேலதிகாரியின் ஆதரவும் ஏற்பட்டுவரும் ஆடவராயிருந்தால். பெண்களின் சிநேகமோ அல்லது பெண்ணால் புருஷர்களின் சிநேகமோ ஏற்பட்டு, அனுகூல மேற்படக்கூடும் முக்கியமாக இரண்டாம் பகுதியில் வியாபாரிகளுக்குக் கணிசமான லாபம் உண்டு பேரங்களில் தகராறு இல்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். புதிய வியாபாரங்களைச் செய்யலாம், கூட்டுவியாபாரம் லாபகரமாயிருக்கும். இரும்பு வியாபாரிகளுக்கு நல்ல லாபம்

மே 15. 16. 20 23. 26 29 ஜூன் 1, 3. 6, 12 தேதிகள் இவர்களுக்குச் சிறந்த நாட்கள்.

மிதுன ராசி

மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை புனர்வஸு 3-ம் பாதம் முடிய

இந்த மாதத்தில் சூரியனுக்குள்ள அமைப்பு சென்ற மாதத்திலிருந்ததுபோல இந்த ராசிக்காரர்களுக்குச் சாதகமான நிலைமையில் இல்லை எனவே. போன மாதத்தைப் போல பொதுவான வெற்றியும் திருப்திகரமாயிராது. பண வசதிகள் குறைவில்லையானாலும் முடை மட்டும் தீவிரமாகவே யிருந்துவரும் குடும்பத்தில் அதிக சந்தோஷத்தைப் பெறுவதற்கு இன்றும் கொஞ்ச காலம் போக வேண்டும் வெளியிடப் பழக்கங்களில் முனைந்து நிற்கும்படியாயிருக்கும் இரண்டாம் பகுதியில் 10-வது வீட்டைச் செவ்வாய் பார்ப்பதால். அவ்வளவு சாதகமெனச் சொல்வதற்கில்லை. முக்கியமாக புதன் 10-வது இடத்தில் பெறும் ஸ்தான விசேஷமும் இதற்குக்காரணம்.

உறவினர்களிடம் அனுதாபம் கொண்டு அவர்களுக்கு அவசியமான காலத்தில் உதவி புரிய நேரும் இவர்களால் மன நிம்மதியிராது செவ்வாய் சனி இவர்கள் காரணமாயும் மன அமைதி இராது குடும்பம், வெளியிடம் இரண்டிலும் சில்லரையான கவலைகள் பிடுங்கும் குழந்தைகளால் ஆறுதலிருக்கும் புதிய நண்பர்கள் நீடித்திருக்கமாட்டார்கள் அபிப்ராய பேதமும் ஏற்படும். இவர்களோடு செய்யும் பணம் விவகாரங்கள் நல்ல முறையில் முடியாது. சொந்த ஆரோக்கியம் சுமாராயிருக்கும் இரண்டாம் பகுதி வாக்கில் தேகத்தில் உஷ்ணம் அதிகரிப்பது தெரியவரும். உத்தியோகத்தில் அதிகமாக எதுவும் கிட்டாது அப்படி ஏதேனும் உத்தியோகத் துறையில் முயற்சிகள் செய்வதாயின், அவற்றை அடுத்த மாதம் வைத்துக்கொள்வது நலம் கடிதப் போக்குவரத்துகளில் உஷாராயிருக்க வேண்டும் இல்லையாயின் ஏதேனும் தவறு ஏற்பட்டுவிடும். வியாபாரிகளுக்கு முதற் பகுதிதான் ஏற்றது இரண்டாம் பகுதி ஏமாற்றகரம் கணக்கு வழக்கு பார்ப்பவர்கள் எண்ணிக்கை விஷயத்தில் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

மே 16, 20, 23 26 29, ஜூன் முதல்வாரம், 12, 13-ந் தேதிகள் இவர்களுக்குத் தரம்.

கடக ராசி

புனர்வஸு கடைசி பாதம் முதல் புஷ்யம் ஆயில்யம் முடிய

கடகராசிக்காரர்களுக்கு இம்மாத கிரகநிலை நன்ருக அமையவில்லை பணமுடை உண்டு, இருப்பினும் முக்கிய இனங்களைச் சமாளித்துச் சரிக்கட்ட இயலும். இதில் அதிக சிரமமும் இராது. கஷ்டங்கள் ஏற்படும்போது நண்பர்கள், உறவினர்கள் உதவி கிட்டும், சகோதரர் அல்லது வேறு ஒரு உறவினர் விஷயமாகச் சிந்தைசெய்ய நேரும். அதிருப்திகரமான சூழ்நிலைமை ஏற்படுவது காரணமாகக் குடும்பத்தில் கவலைகளிருந்து வரும். இவற்றிற்கெல்லாம் மௌனம் ஒன்றுதான் பரிகாரம் புதிய சிநேகிதர்கள் ஏற்பட்டு, அவர்களால் பரஸ்பர நன்மை அடைய வழிஉண்டு. செலவு கட்டுமீறிப் போய்க்கொண்டிருக்கும். எதிர்பாராத பண விவகாரங்களில் சிக்கிக்கொள்ள நேருமாதலால் உஷாராயிருக்கவேண்டும், செவ்வாய் தன்னுடைய வீட்டைப் பார்ப்பதாலும், அவ்வீடு இந்த ராசிக்காரர்களுடைய உத்தியோக ஸ்தானமாயிருப்பதாலும், 24-ந்தேதிக்குப்பிறகு சுக்கிரன் 10-வது இடத்தை அடைவதாலும் திடீரென்று உத்தியோகத் துறையில் ஒரு புரட்சி ஏற்பட இடமுண்டு. எப்படியிருப்பினும் செய்யும் வேலையிலாவது மாறுதலிருப்பது திண்ணம். கெட்ட தசா, புக்தி நடப்பிலுள்ளவர்களானுல், வேறிட மாற்றம் ஏற்படும் என்று சொல்லவேண்டும். இம்மாத இறுதியில் ஏற்கெனவே கண் உபாதை உள்ளவர்களானுல், அவர்களுக்கு அத் தொந்தரவு வெளிக்கிளம்பும் ஜூன் 4-ந்தேதி வாக்கில் பண விவகாரங்களுக்கு நல்ல கால நிலையில்லை முதலாளிகள் ஊழியர்களிடம் கெடுபிடியாயிருப்பார்கள் சில முக்கியமான தஸ்தாவேஜுகள்பற்றி உத்தியோகத்தில் அபிப்ராய பேதங்களேற்படக்கூடும் இதனுல் எவ்விதத் தொல்லையும் ஏற்படாது வியாபாரிகளுக்குச் சுமாராயிருக்கும் புதிய வியாபாரத் திட்டங்களை லாபகரமான நிலைமையில் வகுத்துக்கொள்ளலாம்

மே 17, 20 23 27, 29, ஜூன் 1, 3, 6, 12, 13 தேதிகள் இவர்களுக்கு உகந்தவை.

ஸிம்ம ராசி

மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய

ஸிம்ம ராசிக்காரர்களுக்குச் சென்ற மாதத்தைக் காட்டிலும் இது அபிவிருத்திகரமான மாதம். மனோபீஷ்டங்கள் நிறைவேறுவதற்கு ஏற்ற சமயம் பண விஷயத்தில் அதிக அதிருஷ்டமேற்படும். வருமானம் சுமாராயிருக்கும். மே 17-ந்தேதிக்குப் பிறகு புதனைச் செவ்வாய் பார்ப்பதால், குடும்பத்திலுள்ளவர்களுடன் சண்டை சச்சரவுகள் கொள்ள நேரும் மேல் நிலையிலுள்ளவர்களின் ஆதரவிருக்கும் அதிகாரிகள் உதவி கோரினுல் செய்வர் அந்தஸ்திலுள்ளவர்களது பரிச்சயம் ஏற்படும் மனைவி அல்லது புருஷனின் தேக சுகம் தரமாயிராது இம் மாதக் கடைசி வாரத்தில் பணமுடை கடுமையாயிருக்கும். பெரியவர்களுடைய அதிருப்திக்கும் ஆளாக நேரிடும். உத்யோகத்தில் உயர்வோ, மாற்றமோ நிகழும் பொறுப்பு அதிகமுள்ள வேலையிருக்கும் சேவைபாராட்டுக்குரியதாக விளங்கும். வேலைத் தொந்திரவால் ஆரோக்கியம் நலிந்து உணவு விஷயத்தில் ஒரு கட்டுப்பாட்டைக் கைப்பற்றும் அவசியம் பிறக்கும் உஷ்ணமாக எதையும் இம்மாதம் உட்கொள்ளலாகாது நெடுநாளாக உள்ளேயே ஊறிய வியாதிகளால் கஷ்டப்படுபவர்களானுல் இம்மாதம் அவர்களுக்கு சுகமாகவேயிராது. மே 27, ஜூன் 4 இவை இரு நாட்களும் ஆரோக்கியத்துக்கு அனுகூலமானதன்று வியாபாரிகளுக்குத் திருப்திகரமான நிலை இவர்களில் சிலர் புதிய வியாபாரங்களை ஆரம்பிப்பர், கூட்டு வியாபாரம் லாபகரமாகவிருக்கும் புதிய ஒப்பந்தங்களை ஏற்படுத்திக்கொள்ளலாம்.

மே 16. 20 23. 26. 29 ஜூன் 1, 3, 5, 6, 12, 13 தேதிகள் இவர்களுக்கு நல்லவை.

கன்னியா ராசி

உத்திரம் 2-ம் பாதம் முதல் ஹஸ்தம், சித்திரை 2-ம் பாதம் முடிய

சென்ற மாதத்தைக் காட்டிலும் இந்த மாதம் எவ்விதத்திலும் கன்யா ராசிக்காரர்களுக்குத் தரமென்பதற்கில்லை. தேகாரோக்கியம், பணம் ஆகிய இரண்டு இனங்களிலும் விரோதமான பயனைக் கொடுக்கும்படி செவ்வாயும், சனியும் அமைந்திருக்கிருர்கள் தேகத்தில் சூடு அதிகரித்து ஜுரம் வரும். ஏற்கனவேயே உள்ளூர இருந்துவரும் ரோகம் இம்மாதத்தில் வெளியே தலைகாட்டும் குடும்பத்தில் யாருக்காவது அசௌகரியமேற்பட்டு மன அமைதி பங்கமடையும், பணக்கவலை உண்டு மே கடைசிவாரமுதல் இத்துறையில் சற்று வசதிகள் காணலாம். ஏழைகளானுல் கடன்வாங்கநேரும், செலவு

> **1950-ம் வருஷம் மே மாதம் 14உ முதல் 1950-ம் வருஷம் ஜூன் மாதம் 14உ வரையில் பொதுவாக ஒவ்வொரு ராசிக்காரர்களுக்கும் பலன்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ராசியைத் தெரிந்துகொள்ள உதவியாக நட்சத்திரங்களும் பாதங்களும் கூடவே பிரசுரிக்கப் பட்டிருக்கின்றன.**

வரவர அதிகரித்தவண்ணமிருக்கும், கடன்கொடுத்தவர்களிடமிருந்து கெடுபிடியாக எச்சரிக்கைகள்கூட வரும். விரோதிகள் இந்த ராசிக்காரர்களுடைய முன்னேற்றத்தைப் பாழாக்குவர் குடும்பத்தில் எப்படி சந்தோஷமாக விருக்க நினைக்கிறேமோ அப்படியிருக்க இயலாது குடும்பத்திலும் சுகமானநிலை இல்லை மனைவி அல்லது கணவனின் தேகசுகம் பாதிக்கப்படும். உத்தியோகத்தில் அனுகூலமேதுவும் ஏற்படாது. பார்க்கப்போனால் வேலை விவகாரங்கள் குறித்தும், மேலதிகாரிகள் தங்களை நடத்தும் முறை பற்றியும் கிலேசமேற்பட்டு மனநிம்மதி குலைவுறும் வியாபாரிகளுக்கு இந்த சமயம் எவ்வித புது வியாபாரமும் சுகப்படாது இதில் நஷ்டம் வேறு ஏற்பட இடமுண்டு.

மே 16, 20, 23, 26, 25 ஜூன் 1; 3, 6, 7, 12, 13 தேதிகள் இவர்களுக்குச் சிரேஷ்டமானவை

துலா ராசி

சித்திரை, 3-ம் பாதம் முதல், சுவாதி, விசாகம் 3-ம் பாதம் முடிய

துலா ராசிக்காரர்களுக்கு இம்மாதமுள்ள கிரக நிலைமை செயல் முறைகள் அனைத்திலும் சுமுகமான போக்கை உண்டு ண்ணுவதாகவிருக்கிறது. வெளியிடப் பழக்கங்களுக்கு இது மிகவும் மனோகரமான கட்டம். ஆதரவையும் அனுதாபத்தையும் நாடி வருபவர்களுக்கு அந்தரங்க சுத்தியோடு சேவை செய்யும்படியிருக்கும் குடும்பத்திலும் சந்தோஷகரமான நிலைமை இருந்துவரும். மனைவி ஆரோக்கியம் போதிய திருப்தியைத் தராது சொந்த தேக நலமும் இருமல் ஜலதோஷத்தால் பாதிக்கப்படலாம் குடும்பம், வெளியிடம் ஆகிய இரு துறைகளிலும் பிரமுகர்களைச் சந்தித்துத் தொடர்புகொள்ளும் வாய்ப்பு உண்டு பணமுடையிருப்பதாகவிருந்தாலும் அசௌகரியங்களெதுவுமிராது கடன்வாங்குவது கொடுப்பது இந்த இரண்டில் எதுவும் நல்லபடியாக இம்மாதத்தில் முடிவுபெருது சில்லரைக் காரியங்களைப் பூர்த்தி செய்யாததற்காகக் கிட்டிய பந்துக்கள் அவதூறு செய்வர். புதிய நண்பர்கள் ஏற்படுவர். பழைய நண்பர்களில் ஓரிருவர் அபிப்ராயபேதப்படுவர் அல்லது விரோதமாவர் பணக்காரர்களாயின் நிலம், வீடு இவற்றில் பணம் போட முயற்சி செய்யப்படலாம் உத்தியோக விவகாரங்களுக்கும் ஏற்ற மாதமிது. வேலையில் ஏற்படக்கூடிய மாறுதல் வேறிடத்துக்கு மாற்றிப்போகும்படியாயுமிருக்கலாம்: ஆபீஸில் எவரோடும் தகராறு ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். வியாபாரிகளுக்கு லாபகரமான நடப்பு உண்டு. கூட்டு வியாபாரத்தில் ஆதரவிருக்கும். பாகஸ்தரில் ஒருவர் பிறரிடம் சரியாக நடந்துகொள்ளாமலிருப்பார்,

மே 16, 20 23, 26 29. ஜூன் 1, 3, 6, 7, 13 தேதிகள் இவர்களுக்குச் சிலாக்கியம்.

விருச்சிக ராசி

விசாகம் 4-ம் பாதம் முதல், அனுஷம், கேட்டை முடிய

குடும்ப விவகாரங்கள், வெளியிட விஷயங்கள் இரண்டிலும் சிறந்துவிளங்கக்கூடியதாக இம்மாதம் விருச்சிகராசிக்காரர்களுக்கு அமைந்திருக்கிறது விவாகமாகாதவர்களுக்கு, விவாகம்பற்றிய திட்டங்கள் யோசனைக்குவரும், உறவினர் ஒருவருடைய கல்யாண காரியத்தில் சிரத்தை எடுத்துக்கொள்ள நேரும், கல்யாணமானவர்களாயின், கொஞ்சகாலம்வரை மனைவி அல்லது கணவன் இருவருக்குள் ஏதேனும் சச்சரவு நிகழலாம். உஷ்ண அதிகரிப்பால் சொந்த ஆரோக்கியம் திருப்திகரமாகவிராது பணமுடை ஏற்பட்டு திடீரென நிவர்த்தியும் கிட்டும் இம்மாதக் கடைசி வாரம் பண விஷயத்தில் அதிருஷ்டகரமாயிருக்கும் செலவு எதிர்பாராதவிதமாக அதிகரிக்கும் எதிரிகள் மறைமுகமாக விஷமங்கள் செய்வர் சிலருக்கு மட்டும் உத்தியோகத்தில் சற்று அபிவிருத்தி தென்படும் வேலைக்கடுமை ஊழியர்கள். சகபாடிகள் இவர்களால் மன அமைதி பாதகமடையும். பரஸ்பரம் நன்மை பயக்கும்படியான புதிய நண்பர்கள் ஏற்படுவார்கள் மே 28-ந் தேதி முதல் ஆத்மீக நூல்களைப் படிப்பதில் ஓர் ருசி தட்டும் நண்பர்களுடன் மனஸ்தாபம் ஏற்படும்படியான நடவடிக்கைகளை வைத்துக் கொள்ளக்கூடாது. முதலாளிகள் தங்கள் ஊழியரிடம் கெடுபிடியாயிருப்பர் வேலை வாங்குவதில் தீவிரமாயிருப்பரேயன்றி போதியபடி ஊதியம் தருவதில் சிரத்தையிராது ஊழியர்கள் தங்கள் மேலதிகாரிகளுக்குத் திருப்தி தரமாட்டார்கள் அவமானங்களை அடைவரேயன்றி மேலதிகாரிகளின் போக்கை அனுசரித்து நடக்கமாட்டார்கள் வியாபாரிகளுக்கு இம்மாதம் நன்றாகவில்லை, தடைகள் காரணமாக வியாபார நடவடிக்கைகள் ஸ்தம்பித்து நிற்கும்

மே 16, 20, 23, 30 ஜூன் 1, 2, 3, 5, 7, 10, 12, 13 தேதிகள் இவர்களுக்கு உத்தமம்.

தனுர் ராசி

மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் முடிய

சென்ற மாதத்தைவிடக் கொஞ்சம் அபிவிருத்தி தென்படும்படியான மாதமிது. பாக்கியாகத் தீராமல் நின்றுபோன விஷயங்கள் இம் மாதம் முடிவடையும். 5-வது வீட்டைச் செவ்வாய் பார்ப்பதால் மனம் ரொம்ப பளுவாயிருக்கும். அநேகம் விஷயங்களில் ஈடுபடும்படியிருக்கும். ஆனால், இவை எவற்றிலும் திருப்தியிராது. வெளியிடங்களில் நல்ல பாத்திரமாகவிருக்கும் ஏழைகளுக்கு உதவிசெய்வதில் முனைந்துநிற்க நேரும் குழந்தைகளில் ஒருவரால் கவலை ஏற்படும் பணவிஷயத்தில் சிறிதுஅபிவிருத்தி உண்டு லக்னத்தைச் செவ்வாய் பார்ப்பதாலும் 6-வது இடத்திலுள்ள சூரியனைச் சனி பார்ப்பதாலும் ஜலதோஷம்,

1950-மே மாதம் 14-ந்தேதியுள்ள கிரக நிலை

ராகு சுக்கிரன்	சந்திரன் வக்ரபுதன்	சூரியன்	உரானஸ்
குரு			
			சனி செவ்வாய்
			கேது நெப்டியூன்

இருமல் தொண்டைக் கோளாறு முதலிய உபாதைகள் ஏற்பட்டு வயது வந்த நபர்களுக்கு ஆரோக்கிய நிலைமை பாதிக்கப்படும். குடும்பத்தில் பெரியவர்களுடன் அபிப்பிராயபேதம் உண்டாகலாம். கண் பார்வை பாதிக்கப்பட்டு சிகிச்சை புரிய நேரலாம். செலவு அதிகமாகும், உத்தியோகத்தில் தீவிர கவலைகள் இருக்கும், உத்தியோகம் நீடிக்குமா அல்லது சீக்கிரம் போய்விடுமோ என்ற பயமேற்படும், உத்தியோகத்தில் உள்ள நிலைமையால் மனஅமைதிகெடும். சிலருக்குமட்டும் கடுமையாகச் செய்தவேலைக்குப் பாராட்டிருக்குமேயன்றி வேறு ஆதாயம் ஏதுமிராது. அநேகருக்கு கெட்ட பெயரும். கீழ்ப்படி வேலைக்கு மாறுதலும் ஏற்படும். வியாபாரிகளுக்கு நல்லது. நல்ல வியாபார நடப்பும், லாபமும் இருக்கும். தற்போதுள்ள கூட்டு நன்ருக விளங்கும். புதிய மாறுதல் சரிப்பட்டு வராது.

மே மாதம் 16. 23, 25, 28, 30. ஜூன் 1. 3. 5 6, 12, 13 தேதிகள் இவர்களுக்கு சௌகர்யமான தினங்கள்.

மகர ராசி

உத்திராடம் 2-ம் பாதம் முதல். திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் முடிய

இந்த ராசிக்காரர்களுக்கு இம்மாதம் பிரதானமாக விளங்கக்கூடிய அம்சங்கள் குடும்பக் கவலை; குழந்தைகளில் ஒருவரைப்பற்றிய தேக சுகம்; சொந்த ஊருக்கு ஒரு பிரயாணம் ஆகியவையாம். எதிர்பாராத மாறுதலொன்று குடும்பத்தில் ஏற்படும். வீட்டின் பேரில் பணம் போடுவதோ அல்லது வாங்குவதோ இம் மாதம் நிகழும். இன்னும் இதர இனங்களில் தசா, புக்திக்கேற்றவாறு வாகனப் பிராப்தி ஏற்படும் ஒரு நிலையிலின்றி மனம் பரபரப்பாக விருக்கும்.கட்டுமீறி செலவுஅதிகரிக்கும். உறவினரில் ஒருவருக்கு அந்தஸ்து உயரும், அல்லது மாற்றலாகும். உஷ்ணத்தால் வயிற்றுக் கோளாறு ஏற்படும். தூர இடத்துப் பிரயாணம்ஒன்று நேரும் பண விஷயத்தில்சுமாரான அபிவிருத்தி புதிய நண்பர்கள் ஏற்படுவர். முக்கியமாகச் சிரவண நட்சத்திரமுள்ளவர்கள் இந்த சமயத்தில் மணம் புரிவர். கெட்டதசா,புக்தி நடப்பில் உள்ளவர்களானல், பணபாக்கிக்காகத் தாவா போட்டுக் கோர்ட்டு நடவடிக்கைகளை எதிர்நோக்க நேரும். உத்தியோகத்தில் உயர்வோ மாற்றமோ ஏற்படலாம். வேலை படுகடுமை. கீழ்த்தரச் சிப்பந்திகளிடம் குற்றம் கண்டுபிடிக்கும் முறையை விட்டுவிட வேண்டும் கடைசி பகுதியில் உத்தியோகத்தில் கவலைகளிருக்கும். ஒரு அதிகாரியால் வேதனை உண்டாகும். வியாபாரிகளுக்குச் சுமாராகத் திருப்தி ஏற்படும். புதிதைவிட பழைய வியாபார நடப்பு விசேஷமாயிருக்கும். கூட்டுமுறை பயன்படாது. வியாபார முறையில் ஏதாவது மாறுதலேற்படலாம்

மே 15, 20. 23, 26, 28, 29, 30 ஜூன் 1, 2, 3, 5, 12, 13 தேதிகள் இவர்களுக்குத் திவ்யம்.

கும்ப ராசி

அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் முடிய

இந்த மாதத்தில் கும்ப ராசிக்காரர்களுக்கு ரொம்ப மனக் கவலைகளிருக்கும். 3-வது வீட்டிலுள்ள கிரகங்களும் அவற்றை செவ்வாய் பார்ப்பதுவுமே இதற்குக் காரணம். குழந்தைகளைப்பற்றியும், குடும்ப விவகாரங்கள் குறித்தும் கவலைகளேற்படும். எப்படியிருக்க வேண்டுமோ அந்த அளவுக்குக் குடும்பத்தில் சந்தோஷமாயிருக்க முடியாது. புதிதாகக் கல்யாணமானவர்களானாலும் அவர்களுக்குள்ளும் அபிப்ராய பேதங்களேற்படும். பணக்காரர்களானல் வீடு அல்லது நிலத்தில் பணத்தை முதலீடு செய்ய நேரும். கார் சொந்தக்காரர்களாயின் அவர்களது வண்டிகளில் கோளாறு ஏற்படும். புருஷன் அல்லது மனைவியின் தேக சுகம் பாதிக்கப்படும். இதற்குக் காரணம் ஸப்தமத்திலும் அஷ்டமத்திலும் தீய கிரகங்கள் இருப்பதேயாகும். பண முடையிருப்பினும் வசதிகள் பிறக்கும் வெளியிடப் பழக்கங்களுக்கு இம் மாதம் சந்தோஷகரமாயிருக்கும். தொழிலில் உள்ள பிரமுகர்களைச் சந்திக்கக்கூடும். லக்னத்தில் குரு இருப்பதால் சிலருக்குக் கல்யாணம் நிகழும் உத்தியோகத்தில் வாயளவில் சற்று பாராட்டிருக்குமேயன்றி வேறு எவ்வித ஆதாயமும் இராது. செவ்வாய் 8-ல் இருப்பதால் உத்தியோகத்தில் திருப்தி இராது, சுயநலத் தியாகம்தான் அதிகமாயிருக்கும். செவ்வாயின் இருக்கை காரணமாகவே எதிரிகளின் அவதூறுகளுக்கு ஆளாகநேரும், சூரியன் 10-வதுவீட்டிலிருக்கிறர். 10-வது வீட்டுக்குடைய கிரகம் 8-வது வீட்டிலிருக்கிறது. இதனால் சுமார் 1 மாதம் ரஜாப் பெறும்படி ஏற்படலாம். வியாபாரிகள் தாங்கள் எதிர்பார்த்தபடி ரொம்பத்தரமாக எதுவும் நடக்காது. பாகஸ்தர்களுக்குள் அபிப்ராயபேதமேற்படலாம்.

மே 15. 16. 20 23 26. 27 29. 30 ஜூன்1, 3,6,7, 10. 12. 13 தேதிகள் இவர்களுக்கு உதவிகரம்.

மீன ராசி

பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய

குரு. சனி. ராகு முதலிய பிரபல கிரகங்களெல்லாம் இம்மாதமும் இந்த ராசிக்காரர்களுக்கு சாதகமற்ற நிலையிலேயே இருக்கின்றன.சனி 6-ல்இருப்பதுநல்லதாயினும் இக்கிரகம் 8, 12-வது இடங்களைப் பார்ப்பதால் பணம், குடும்பம் ஆகிய இரு இனங்களிலும் கவலைகளே ஏற்படும். 3-வது இடத்தில் சூரியனிருப்பதால் அவசரத் தேவைகளுக்குப் பணம் புரட்டி சரிக்கட்ட முடியும். 7-வது இடத்திலுள்ள செவ்வாய் சந்திரனிலிருந்து இரண்டாமிடத்தைப் பார்ப்பதால் எதிர்பாராத பகுதியிலிருந்து திடீரென்று பணம் வர இடமுண்டு. ஒரு தூர இடத்துப் பிரயாணம் நேரலாம் இன்னும் சிறிது காலம்வரை அதிகமாகச் செலவுகள் நேரும்என்றே சொல்லவேண்டும். ஏழைகளாயின் கடனைப்பற்றிய கவலையும். பயமும் இருந்துவரும். இது கொஞ்ச நாட்களுக்குத்தான். குடும்ப வாழ்வு கொஞ்சங்கொஞ்சமாக அபிவிருத்திபெறும். உறவினர்கள் வேலைக்காரர்கள் இவர்களிடம் தகராறு ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். கூடியவரையில் சாத்விகமாக எதிர்த்துக்கொள்ளாமல் போவதன்மூலமே சந்தோஷ நிலைமை உதயமாகும். இது குடும்பம், வெளி

யிடம் இரண்டுக்கும் பொருந்தும். இல்லையானால் கெடுதலாகவிருக்கும் கிரகங்கள் இந்த ராசிக்காரர்களைக் குழி தோண்டி புதைப்பதுபோலச் செய்துவிடும் தன்மையை உடையன. உத்தியோகத்தில் சந்தோஷமிராது. மேலதிகாரியின் ஆதரவில்லாததோடு வேலையும் கடுமையாகும். இதனால் வேறு மனம் உடைந்து போகும். ஆபீஸ் தொந்திரவைத் தவிர்க்க 1 மாதம் லீவு பெற்றுக் கொள்வது உசிதம். குருவின் நிலைமை இதைக் குறிப்பதாகும். உத்தியோகத்திலுள்ளவர்களுக்கு மோசமாக விருப்பதுபோல இம் மாதம் வியாபாரிகளுக்கு இராது. சுக்கிரன், புதன், சூரியன் இவர்களால் சுலபமாக லாபம் பெற இடமுண்டு.

மே 16, 20, 23, 26 30 ஜூன் 1, 3, 6, 8, 10, 12, 18 தேதிகள் இவர்களுக்கு உயர்ந்த தினங்கள்.

★

பதிலுக்கு ஸ்டாம்போ, கார்டோ அனுப்ப வேண்டும்.

★

ஸ்ரீ பி. வி. ராவ்

நெ. 5, வாசுதேவபுரம்.

ஐஸ் ஹவுஸ் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை, 5.

அனுபவ ரேகா சாஸ்திரம்

★

ரேகை சாஸ்திரம் மிகப் பழமையானது. இது நம் நாட்டிலு மின்றி அனாதிகாலமாக பல் வேறு நாடுகளிலும் அப்பியசிக்கப்பட்டு அனுஷ்டானத்திலிருந்து வந்துளது. மனிதப் பிறவி எடுத்தவர்களுக்குச் சிருஷ்டி கர்த்தா பிரும்மாவினால் எழுதப்பட்ட ரேகையை வாழ்வின் விதிக்கோடுகள் என்று கருதலாம். இதை அனுபவ முதிர்ச்சியோடு கவனித்தால் புஸ்தகம்போல் படித்து அறிந்துகொண்டு விடுவது சாத்தியம்.

இந்த சாஸ்திரத்தின் பூர்வோத்திர அனுபவ சித்தாந்த முறைகளை நேயர்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு "அனுபவ ரேகா சாஸ்திரம்" என்ற தலைப்பில் இந்த சாஸ்திரத்தில் அதிகம் ஆராய்ச்சி செய்துள்ள ரொமேஷ் கே. சாஸ்திரி மித்திரன்' வாரப்பதிப்புக்குப் பிரத்யேகமாக கட்டுரைகள் எழுதியுள்ளார் முதல் கட்டுரை அடுத்த இதழில் பிரசுரமாகும்.

Zam-Buk வெட்டுப் புண், காயம்

புள்ளி, பரு, சிறங்கு, புண்களுக்கு



சீக்கிரத்தில் பூரணமாக குணமாக்கும்.

ஜாம்பக் மெழுகு மூலிகை எண்ணைகள் நிரம்பியது. சருமத்தினூடே புகுந்து வேலை செய்து ஜாம்பக் வலியையும், புண், எரிச்சலையும் நிறுத்தும். சருமத்தை சுத்தமாக்கி, கிருமிகளைக் கொன்று சீயை நிறுத்தி சுலபமான நிவாரணத்திற்கு உதவும் ஜாம்பக் சகல சரும நோய்கள், கால் நோய்கள் வெட்டுப் புண்கள், பூச்சிக் கடிகள். தீப்பட்ட புண், காயங்கள். மூலம் இவற்றை குணமாக்கும் மகோன்னத மெழுகு இதில் மிருகக் கொழுப்பு சேரவில்லை என்ற உத்தரவாதம். ஏஜண்டுகள்: தாதா & கோ, பி. டி மதராஸ்

ஜாம்பக் — உலகின் மகோன்னத சருமக் களிம்பு

சிகார் லைட்டர் ரூ. 3.

புகை பிடிப்பவர்களுக்கு இன்றியமையாதது நிக்கல் கேஸ். பார்ப்பதற்கு மிகவும் அழகானது நாட்பட உழைக்கும் இது ஒன்று இருந்தால், தீக்குச்சிகளே தேவையில்லை. விலைகள்: நெ.7 ரூ.3. நெ.9 ரூ 3-12-0 ஸ்பெஷல் ரூ 5 மிக உயர்ந்தது ரூ. 7. கல் 1 டஜன் ரூ 1. ஆயில் புட்டி ரூ. 1-8. பாக்கிங் etc. அ. 14.

பாக்கெட் பிரஸ்-பெயர், விலாசம், கடிதம். லேபில்-நிகழ்ச்சிக் குறிப்பு முதலியவைகளை வீட்டிலேயே அச்சடிக்கலாம். நெ 1 ரூ. 2; நெ 2ரூ 2-8 ஸ்பெஷல் ரூ. 3-0; சிறந்தது ரூ. 3-8. த. செலவு அணா 14.

கொசு வலைகள்

நன்கு தைத்து நீடிக்கக்கூடிய வெள்ளை வலையால் தயாரிக்கப்பட்டது.

நீள.	அக.	உய.	சாதா		உயர்		ஸ்பெ	
6 ft	3½ ft.	3½t f.	Rs 6	10	7	14	9	4
6 ft.	4 ft.	4 ft.	,, 7	8	8	14	10	8
6½ft.	4½ ft	4½ ft.	,, 8	12	10	4	11	12
7 ft	5 ft.	5 ft.	,, 9	14	11	4	12	8
7½ft.	6 ft.	6 ft.	,, 12	0	13	10	14	14
6 ft.	6 ft.	6 ft.	,, 14	8	15	12	17	8

பாக்கிங் போஸ்டேஜ் 1/8/- 3 வாங்கினால் இலவசம்.

French Commercial Stores (K. M)
P.B. No. 12216, CALCUTTA-5.

ஹிந்தி பாடங்கள்

'பண்டிட்ஜீ'

பயிற்சி 12-अभ्यास 12.

விடைகள்-उत्तर

(அ)

1, सीता का लड़का मोहन है।

சார்ந்து வரும் लड़का என்ற சொல் ஆண்பால் ஒருமைப் பெயர்ச்சொல். எனவே அதற்கு முன் की என்ற பெண்பால் சொல்லை உபயோகிப்பது தவறு का என்ற ஆண்பால் ஒருமைச் சொல்லை உபயோகிக்க வேண்டும்.

2. बड़ा भाई यहाँ नहीं है।

भाई என்ற பெயர்ச் சொல் ஆண்பால் ஒருமைச் சொல். எனவே அதை யொட்டிப் பெயர் உரிச்சொல்லும் बड़ा என்று ஆண்பால் ஒருமையாக இருப்பதுதான் சரி

3. कमला गोपाल की बहन है।

சார்ந்து வரும் बहन என்ற சொல் பெண்பால் ஒருமைச் சொல் எனவே அதற்கு முன் की என்ற பெண்பால் சொல்லை உபயோகிப்பதுதான் சரி

4. बड़े लड़के कहाँ हैं?

சார்ந்து வரும் लड़के என்ற பெயர்ச் சொல் ஆண்பால் பன்மைச்சொல். எனவே அதற்கு முன்னுள்ளபெயர் உரிச் சொல்லும் बड़े என்று ஆண்பால் பன்மையில் இருப்பதுதான் சரி.

5. गोपाल की कुरसियाँ अच्छी हैं।

சார்ந்து வரும் कुरसियाँ என்ற பெயர்ச் சொல் பெண்பால் பன்மைச் சொல் எனவே அதற்கு முன்னுள்ள சொல் की என்றும். பின்னுள்ள பெயர் உரிச்சொல் अच्छी என்றும் பெண்பாலில் இருப்பது தான் சரி.

(ஆ)

1. पिता जी, आप अब गाँव जाइए।

(இங்கே गाँव என்பதற்கு गाँव को என்பதுதான் பொருள் गाँव को என்று விவரமாகச் சொல்வது வழக்கமில்லை गाँव என்று சொன்னால் போதும் எனினும் गाँव को என்று சொல்வது தவறாகாது)

2. वहाँ बाग़ में बहुत फल हैं।
3. सब अच्छे अच्छे फल हैं।
4. यहाँ सब को फल चाहिए।
5. वहाँ से आप कुछ फल लाइए।
6. राजू, तुम भी पिता जी के साथ जाओ।
7. गाँव से आम और कटहल लाओ।
8. अनार नहीं चाहिए; मत लाओ।
9. माताजी, आप मत जाइए।
10. पिताजी, आप राजू के साथ जाइए।

பாடம் 13-पाठ 13

'அவன் ராமன்' என்பதை ஹிந்தியில் மொழிபெயர்க்கும்போது 'அவன் ராமனாக இருக்கிறான்' என்று பொருள் படும்படியாகத்தான் மொழிபெயர்க்கிறோம். இந்த 'இருக்கிறான்' என்ற வினை எப்போதும் ஒரே மாதிரியாக இருக்காது. வாக்யத்தின் எழுவாயை யொட்டி 'நான் ராமனாக இருக்கிறேன்' 'நீ ராமனாக இருக்கிறாய்' 'இவன் ராமனாக இருக்கிறான்' என்றெல்லாம் மாறும். அதாவது வாக்யத்தின் எழுவாயினுடைய எண் (Number), பால் (Gender), இடம் (Person) ஆகிய விவரங்களை அனுஸரித்து மாறும். ஒவ்வொரு எழுவாய்க்கும் ஏற்றதொரு வினையுண்டு அதை 'ஏற்ற வினை' என்று சொல்லலாம் இதோ பாருங்கள்:

"நான் இருக்கிறேன்
நாங்கள் இருக்கிறோம்.
நீ இருக்கிறாய்.
நீங்கள் இருக்கிறீர்கள்.
அவன் இருக்கிறான்.
அவள் இருக்கிறாள்
அவர்கள் இருக்கிறார்கள்
அவைகள் இருக்கின்றன"

இதேமாதிரி ஹிந்தியிலும் அந்த ஏற்ற வினை எழுவாயை அனுஸரித்துச் சிறிது மாறுகிறது. கீழேயுள்ள பட்டியலைப் பாருங்கள்:

இடம் (Person)	ஒருமை (Singular)	பன்மை (Plural)
I Person தன்மை	मैं हूँ நான் இருக்கிறேன்	हम हैं நாம் (நாங்கள்) இருக்கிறோம்.
II Person முன்னிலை	तू है நீ இருக்கிறாய்	तुम हो நீர் இருக்கிறீர். आप हैं நீங்கள் (தாங்கள்) இருக்கிறீர்கள்.
III Person படர்க்கை	वह है அவன் இருக்கிறான். அவள் இருக்கிறாள். அது இருக்கிறது यह है இவன் இருக்கிறான். இவள் இருக்கிறாள். இது இருக்கிறது	वे हैं அவர் இருக்கிறார் அவர்கள் இருக்கிறார்கள். அவை இருக்கின்றன. அவைகள் இருக்கின்றன. ये हैं இவர் இருக்கிறார். இவர்கள் இருக்கிறாகள். இவை இருக்கின்றன இவைகள் இருக்கின்றன

ஒருமைப் பிரிவில் तू, वह, यह ஆகிய எழுவாய்களுக்கு ஏற்றவினையாக है கொடுக்கப்பட்டிருக்கிறது मैं என்ற எழுவாய்க்கு மட்டும் हूँ என்பதே ஏற்றவினை.

பன்மைப் பிரிவில் हम, आप, वे, ये ஆகிய எழுவாய்களுக்கு ஏற்றவினையாக हैं கொடுக்கப்பட்டிருக்கிறது तुम என்ற எழுவாய்க்கு மட்டும் हो என்பதே ஏற்றவினை.

ஸாதாரணமாக நம்மையும். முன்னுள்ளவர்களையும் விட்டுப் பிறரைக் குறிக்கும் சொற்களெல்லாம் படர்க்கைச் சொற்களே எனவே பட்டியலில் படர்க்கை எழுவாய்களுக்காகக் கொடுக்கப்பட்டுள்ள है, हैं என்ற ஏற்ற வினைகள் எல்லாப் படர்க்கை எழுவாய்களுக்கும் பொருந்தும்.

(உ—ம்.)

लड़का यहाँ है।-लड़की यहाँ है।

लड़के यहाँ हैं।-लड़कियाँ यहाँ हैं।

கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்யங்களை நீங்கள் கவனமாகப் படித்து எழுதிப் பழகினால் இந்த ஏற்ற வினையை உபயோகிக்கும் முறைகள் உங்களுக்கு நன்றாக விளங்கிவிடும்.

मैं रामनाथ हूँ।

நான் ராமநாதனாக இருக்கிறேன்.
(நான் ராமனாதன்,)

मैं विद्यार्थी हूँ।

நான் மாணவன்.

मैं कालेज का विद्यार्थी हूँ।

நான் காலேஜின் மாணவன்,
(நான் காலேஜ்—மாணவன்)

तुम कौन हो?

நீ யார்?

मैं गोपीनाथ हूँ।

நான் கோபீநாதன்.

मैं भी विद्यार्थी हूँ।

நானும் மாணவன்.

मैं स्कूल का विद्यार्थी हूँ।

நான் பள்ளிக்கூடத்து மாணவன்.

तो, हम दोनों विद्यार्थी हैं।

அப்படியானால், நாம் இருவரும் மாணவர்கள்.

उमानाथ भी एक विद्यार्थी है।

உமாநாதனும் ஒரு மாணவன்.

यहाँ सब विद्यार्थी हैं।

இங்கே எல்லோரும் மாணவர்கள்.

वह कौन है?

அவன் யார்?

वह उषानाथ है।

அவன் உஷாநாதன்.

उषानाथ उमानाथ का भाई है।

உஷாநாதன் உமாநாதனின் ஸஹோதரன்.

उषानाथ विद्यार्थी नहीं है।

உஷாநாதன் மாணவனல்ல.

वह एक गुमाश्ता है।

அவன் ஒரு குமாஸ்தா.

वे कौन हैं?

அவர்கள் யார்?

वे लड़के हैं।

அவர்கள் பையன்கள்.

वे स्कूल के लड़के हैं।

அவர்கள் பள்ளிக்கூடத்துப் பையன்கள்,

वे गोपु और रघु हैं।

அவர்கள் கோபுவும், ரகுவும்.

वे दोनों दोस्त हैं।

அவர்கள் இருவரும் நண்பர்கள்.

वे दुशमन नहीं हैं।

அவர்கள் விரோதிகள் அல்ல.

ये लड़कियाँ हैं।

இவர்கள் பெண்கள்.

ये सब यहाँ की लड़कियाँ हैं।

இவர்களெல்லோரும் இவ்விடத்தும் பெண்கள்.

यह यहाँ की लड़की नहीं, शहर की लड़की है।

அவள் இவ்விடத்துப் பெண் அல்ல, பட்டணத்துப் பெண்.

क्या, तुम भी शहर की लड़की हो?

நீயும் பட்டணத்துப் பெண்ணா?

नहीं, मैं शहर की लड़की नहीं, गाँव की लड़की हूँ।

இல்லை, நான் பட்டணத்துப் பெண் அல்ல, க்ராமத்துப் பெண்.

पर, यह शहर की लड़की है।

ஆனால் இவள் பட்டணத்துப்பெண்.

यह एक विद्यार्थिनी है।

இவள் ஒரு மாணவி.

शहर में बहुत विद्यार्थिनियाँ हैं।

பட்டணத்தில் வெகு மாணவிகள் இருக்கிறார்கள்.

तुम कहाँ के आदमी हो?

நீ எவ்விடத்து மனிதன்?

मैं भी शहर का आदमी हूँ।

நானும் பட்டணத்து மனிதன்

वहाँ देखो—वे कौन हैं?

அங்கே பார்—அவர்கள் யார்!

जाओ और पूछो-"आप कौन हैं?"

போ, மேலும் கேள்—'நீங்கள் யார்?' (போய்க் கேள்—"நீங்கள் யார்?" என்று.)

जी, आप कौन हैं?

ஐயா, தாங்கள் யார்?

मैं राघवन हूँ।

நான் ராகவன்.

मैं एक वक़ील हूँ।

நான் ஒரு வக்கீல்.

आप कहाँ के वक़ील हैं।

தாங்கள் எவ்விடத்து வக்கீல்?

मैं मइलापुर का वक़ील हूँ।

நான் மயிலாப்பூரின் வக்கீல் (நான் மயிலாப்பூர் வக்கீல்.)

मैं राममूर्ति जी का भाई हूँ।

நான் ராமமூர்த்தி அவர்களின் ஸஹோதரன்.

क्या, राममूर्ति जी भी वक़ील हैं?

ராமமூர்த்தி அவர்களும் வக்கீலா?

नहीं, राममूर्ति जी वक़ील नहीं, डाक्टर हैं।

இல்லை, ராமமூர்த்தி அவர்கள் வக்கீல் அல்ல, டாக்டர்.

ये कृष्णमूर्ति जी हैं।

இவர் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி (கிருஷ்ணமூர்த்தி அவர்கள்)

ये एक अध्यापक हैं।

இவர் ஒரு வாத்யார்.

रंगाचारी जी एक पुजारी हैं।

ரங்காச்சாரி அவர்கள் ஒரு அர்ச்சகர் (பூசாரி.)

वे मंदिर के पुजारी हैं।

அவர் கோயிலின் அர்ச்சகர்.

यह कैसा मंदिर है?

இது எப்படிப்பட்ட கோயில்?

यह बड़ा मंदिर है।

இது பெரிய கோயில்.

प्रार्थना करो—"हे भगवान, तू सब से बड़ा है। तू ही सब का पिता है। तू सब को सुख दे।"

ப்ரார்த்தனை செய்—"ஏ பகவானே, நீ எல்லோரையும்விடப்பெரியவன் நீதான் எல்லோருக்கும் தந்தை நீ எல்லோருக்கும் ஸுகத்தைக் கொடு' (என்று).

குறிப்புக்கள்

1. ஒருமையில் मैं என்ற எழுவாய்க்கு ஏற்ற வினை हूँ என்பது तू, वह, यह முதலிய மற்ற எல்லா ஒருமை எழுவாய்களுக்கும் ஏற்ற வினை है என்பது

2. பன்மையில் तुम என்ற எழுவாய்க்கு ஏற்ற வினை हो என்பது. हम, आप, वे, ये முதலிய மற்ற எல்லாப் பன்மை எழுவாய்களுக்கும் ஏற்ற வினை हैं என்பது

புதிய வார்த்தைகள்

मैं—நான்.

हम—நாம்; நாங்கள்.

हूँ—இருக்கிறேன்.

है—இருக்கிறாய், இருக்கிறான், இருக்கிறாள், இருக்கிறது

हो—இருக்கிறீர் (நடைமுறையில் 'இருக்கிறாய்' என்பதே சரி)

हैं—இருக்கிறோம் இருக்கிறீர்கள், இருக்கிறார், இருக்கிறார்கள். இருக்கின்றன.

विद्यार्थी—(ஆ. பா.) மாணவன்.

द्+य=द्य—द्+या=द्या

र्+थ=र्थ—र्+थी=र्थी

विद्यार्थिनी—(பெ. பா.) மாணவி.

कालेज—(ஆ பா) காலேஜ்: கல்லூரி

स्कूल—(ஆ பா.) பள்ளிக்கூடம்.

गुमाश्ता—(ஆ பா) குமாஸ்தா.

दोस्त—ஸ்நேஹிதன்; ஸ்நேஹிதி,

(ஸந்தர்ப்பத்துக்கு ஏற்றபடி இது ஆண்பால்-பெண்பால் இரண்டிலும் உபயோகப்படும். எனினும் இதை ஸாதாரணமாக ஆண்பால் சொல்லாகவே கருதலாம்.)

दुश्मन—விரோதி.

दोस्त மாதிரி இதையும் ஸந்தர்ப் பத்துக்கு ஏற்றபடி இரண்டு பால்களிலும் உபயோகிப்பதுண்டு எனினும் ஸாதாரணமாக இதையும் ஆண்பால்சொல்லாகவே கருதலாம்

पूछ—கேள் (Ask)

वक़ील—(ஆ பா) வக்கீல்.

डाक्टर—(ஆ. பா.) டாக்டர், வைத்யன்.

पुजारी—(ஆ பா) பூசாரி; அர்ச்சகன்

मंदिर—(ஆ பா.) கோயில்.

प्रार्थना—(பெ. பா) ப்ரார்த்தனை; வேண்டுகோள்.

भगवान—(ஆ. பா.) பகவான்; கடவுள்

सुख—(ஆ பா) ஸுகம்.

है—ஏ! ஓ!

பயிற்சி 13-अभ्यास 13

(அ)

அடைக்கோடுகளில் கூறியுள்ளபடி கீழ்க்கண்ட வாக்யங்களை மாற்றி எழுதவும்:

1. मैं वक़ील हूँ।

(**मैं**-க்குப் பதிலாக முறையே **हम**-ஐயும், **तुम**—ஐயும் வைத்து இரு வாக்யங்கள் எழுதவும்)

2. वह विद्यार्थी है।

(**वह**—வுக்குப் பதிலாக முறையே **आप**—ஐயும். **ये**—ஐயும் வைத்து இரு வாக்யங்கள் எழுதவும்.)

3. हम लड़के हैं।

(**हम**—க்குப்பதிலாக முறையே **तू**-வையும், **वे**—ஐயும் வைத்து இரு வாக்யங்கள் எழுதவும்)

4. आप अध्यापक हैं।

अध्यापक—(ஆ பா.) வாத்யார்

(**आप**-க்குப்பதிலாக முறையே **वह**-வையும், **यह**—வையும் வைத்து இரு வாக்யங்கள் எழுதவும்.)

5. ये व्यापारी हैं।

(**ये**—க்குப் பதிலாக முறையே **तू**-வையும், **तुम**—ஐயும் வைத்து இரு வாக்யங்கள் எழுதவும்)

(ஆ)

ஹிந்தீயில் மொழிபெயர்க்கவும்:

1. கோபு ஒரு சின்னப் பையன்.
2. அவன் ரொம்ப நல்லவன்கூட.
3. ரகுவும் ஒரு சின்னப் பையன்.
4. கோபுவும், ரகுவும் இரு சின்னப் பையன்கள்
5. அவர்கள் ராஜம்மாவின் புத்ரர்கள்.
6. ராஜம்மா நல்ல ஸ்த்ரீ.
7. நான்கூட நல்ல மனிதன்.
8. இவன் மிகவும் கெட்ட மனிதன்
9. இவர்கள் யார்?
10. நீ ஒரு வ்யாபாரீ.
11. நீங்கள் டாக்டரா?
12. இங்கே வாத்யார் யார்?

(விடைகள் அடுத்த இதழில்)

जय हिंद! जय हिंदी!

அட்டைப் படம்

★

பீஹாரிலுள்ள ஸிந்திரி உர உற்பத்த்சாலையில் சேவை செய்யப்போகும் 30 இந்திய தொழில் நிபுணர்களும் பிரிட்டனில் பயிற்சி பெற்றவர்கள். எஞ்சினியரிங் பகுதிகளிலும் மற்ற இலாகாக்களிலும் இவர்கள் பயிற்சி பெற்றவர்கள். அவர்களில் ஒருவரும் சென்னையைச் சேர்ந்தவருமான ஸ்ரீ வி. எஸ். சர்மா இப்போது 'காஸ் எஞ்ஜினியராக லாபரேடரியில் வேலை செய்கிறார். அவரது படத்தை இவ் இதழின் அட்டையில் பாருங்கள்.

பம்பாய் தமிழ்ச் சங்கம்

★

பம்பாய் மதுங்காவிலுள்ள தமிழ்ச் சங்கத்தினர் தங்களுக்காக ஒரு கட்டிடத்தை நிர்மாணிக்க முயன்று வருகிறார்கள். இச்சங்கம் சென்ற சில ஆண்டுகளாகப் பம்பாயில் இயற்றி வரும் தொண்டுபற்றி அவ்வப்போது தகவல்கள் வெளியாகியிருப்பதை நேயர்கள் அறிவர். சங்கத்துக்காக ஒரு கட்டிடத்தை நிறுவவேண்டி இம் மாதம் 13 14-தேதிகளில் சென்னை எனெஸ்கே நாடக சபையார் பம்பாய் கால்ஸா காலேஜ் மைதானத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள திறந்த வெளி அரங்கில் இரு உதவி நிகழ்ச்சிகளை நடத்திக்கொடுக்க இசைந்துள்ளனர். ஸ்ரீ என் எஸ் கிருஷ்ணன் கோஷ்டியாரின் காந்திமகான் வில்லுப் பாட்டும்; கிந்தனார் காலட்சேபமும் அப்போது நடைபெறும். தமிழர்கள் ஆதரவு கொடுப்பதவசியம்.

தேவை: இளமையளிக்கும் மாத்திரை & ஆயில் விற்பனை செய்ய ஏஜண்டுகள் விற்பனையாளர் தேவை. மாத வருமானம் ரூ 300 முதல் 500 வரை கிடைக்கும். தேக திடமும் சக்தியும் இளமையும் தரும் உலகப் பிரசித்திபெற்ற டானிக் மாத்திரைகள் மாதிரிகளுக்கும். இலவச விவரங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் ஆங்கிலத்தில் எழுதுக:—

இந்திய வினியோகஸ்தர்கள்:
நாஷனல் டிஸ்ட்ரிப்யூட்டிங் கம்பெனி படாலா
National Distributing Co.,
(A.S.M.) Batala (India.)
லண்டன் விநியோகஸ்தர்:
யங் & ஹோவர்டு லிமிடெட், லண்டன் E. C. 2.

ஆபீஸ் ஸ்தாபிதம் : 1924.

பிரபல ஜோதிஷர்

★

மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு வருஷ பலன் மாதவாரி எழுத ரூ. 5 ஆரூடம் 3 கேள்விகளுக்கு ரூ 2 ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

★

பண்டித காழியூர்
ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
தபோ நிதி,
தியாகராய நகர், மதராஸ் 17.
தபால் பெட்டி 1417,

அனுசிப்பழம் அனுனுஸ் ஸ்டைவஸ்

★

இந்தச் செடியின் இலைகள் நீண்டு குறுகியிருக்கும். இதில் உறப்பான நார் உண்டு. இலையின் இருபக்கங்களிலும் நிடுக முள் இருக்கும். அமெரிக்க உஷ்ணப் பிரதேசம் இதன் தாய் நாடாகக் கருதப்படுகிறது. அங்கிருந்து தென் அமெரிக்கா மேற்கிந்தியத் தீவுகள், ஹவாய், குவீன்ஸ்லாந்து, இலங்கை, மலாயா, இந்தியா முதலிய நாடுகளின் உஷ்ண பாகங்களில் பயிராக்கப்படுகிறது.

இந்தப் பழம் சிலாக்கியமான உணவுப் பொருள் என்று கருதப்படுகிறது. பஹாமா தீவுகளிலிருந்து இங்கிலாந்துக்கு ஏராள்மான பழங்கள் அனுப்பப்பட்டதால் அங்கே இப்பயிர் விளைச்சல் மிகப் பரவலான பூமியில் பயிராக்கப்பட்டது.

அதி மேம்பாடான விமர்சைகள் செய்து இப்பழச் செடியின் குணத்தை உயர்வாக்கினர்கள். சிலாக்கியமான தினுசுகளில் சில:—

ஜமெய்கா ரிப்ளி, கருப்பு ஆண்டிகூவா, குவீன், ஷுகர்லோப், மெதுவான கேயென், முதலியன.

சுமார் 300 வருஷங்களுக்கு முன்பு இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டதாகத் தெரியவருகிறது. மேல் சமுத்திரக் கரையிலிருந்து, வங்காளம், அஸ்ஸாம், பர்மா முதலிய பல பாகங்களில் பரவிற்று.

இந்த மேன்மையான பழச்செடியை விருத்திசெய்து பழங்களின் குணத்தை அதிகரிக்கச்செய்து வியாபார முறை மேம்பாடாக்கவும் இதுவரை எதுவும் செய்யப்படவில்லை.

சீதோஷ்ணம்

இது உறப்பான வலுவுள்ள செடி. உஷ்ணமுள்ள ஈரந்தாங்குகிறபிராந்தியங்கள் இச்செடிக்கு சிலாக்கியம். வருஷத்தில் 50 இஞ்சு மழையும் அதற்கு அதிகமாகவும் பெய்கிறவும், இம்மழை நன்ருகச் சமமாய்ப் பெய்கிறவுமான இடங்களில் நன்ருகப் பலிக்கும். என்ருலும் அதிக வெப்பம், குளிர் கூடாது. மிக உயரமான மலைப் பிரதேசமும் ஏற்றதல்ல.

பூமி

வளமான மணல் கலந்த இருமண்பாட்டு நிலங்கள் தகுந்தவை. சற்று மட்டமான சரல் கண்டமுள்ள பூமிகளிலும் செய்நேர்த்தி வயணங்களால் நல்ல மகசூல் அடைய முடியும். வெறும் மணலும் பிசிப்புள்ள களியும் சற்றும் உதவமாட்டா. சதசதப்பான நீர் தேக்கத்த ஸ்தலங்களும் பெருநிழலடி இடங்களும் இப்பயிர்ச் செய்கைக்கு லாயக்கற்றவை.

தினுசுகள்

நாட்டு அனுசி ரகப் பழங்கள் சிறியவை. ரசம் நிறம்பி இருக்காது ருசியும் குறைவு.

பிற நாட்டுப் பழங்களான 'க்யூ' 'மொரிஷஸ்' தினுசுகள் இங்கே நன்ருக உண்டாகி தக்க லாபம் கொடுக்கக் கூடும்.

'க்யூ' ஜாதிச் செடியின் இலைகள் சற்று சாம்பல் பூத்த பச்சை ஊதா வர்ணமுள்ளவை. இவற்றில் முள் இல்லை. செடி உறப்பானது. அதிக இனிப்பான பெரிய பழங்கள் கிடைக்கும். இவை 10-15 ராத்தல் எடை உள்ளவையாகவும் இருக்கும்.

'மொரிஷஸ்' இனம் மிகச் சிறிய செடி. பழங்களும் சின்னவைதான். பழங்கள் சற்று மஞ்சள் நிறமாக இருக்கும். இவற்றின்மேல் பெரிய 'கண்கள்' இருக்கும். பழம் நல்ல வாசனையும் ருசியும் உடையது.

பூமி தயாரிப்பு

இப்பயிர்ச் செய்கையால் ஏராளமான வரும்படி அடையவேண்டுமாளுல் அதிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டியது அவசியம். பூமியின் மேலுள்ள செடி செத்தை, புல் பூண்டுகளை வெட்டியெடுத்துப் போட்டு, சரிவாக இருந்தால் சமப்படுத்தி வரப்பு போட்டு வடிகால் அமைக்க வேண்டும். நல்ல வேலி இருப்பதும் முக்கியம். 2 அடி ஆழமும் $1\frac{1}{2}$ அடி அகலமுமுள்ள நீண்ட கால்களில் 3-4 அடி தூரத்திற்கொன்ருக நட வேண்டும்.

எருவிடுதல்

அன்னுசிப் பழச்செடி ஏராளமான பயிருணவு வஸ்துக்களை இழுத்துக்கொள்ளும் தன்மையது. ஆகையால் அதிகமான எரு தேவையாகும். புது பூமிகளல்லாத நெடுநாள் பயிரேற்றப்பட்ட நிலங்களுக்கு 25 வண்டி மாட்டெருவாவது நன்ருகத் தயாரிக்கப்பட்ட மக்கின பழையகுப்பை உரமும் 2 வண்டி சாம்பலும் கொட்டிக்கலந்து சிறு செடிகளை நடுமுன் போட்டு வைத்து மண்கொண்டு மூட வேண்டும்.

இதைப்போலவே பின்னுல் ஒவ்வொரு வருஷமும் இந்த அளவு எருவை இரண்டு தடவைகளில் இட வேண்டும். இவ்விதமான இயற்கை எருக்கள் கிடையாதுபோனுல் 1 ராத்தல் மீன் குவானே அல்லது $\frac{1}{4}$ ராத்தல் எலும்புத்தூள், $\frac{1}{4}$ ராத்தல் அம்மோனியம் ஸல்பேட், $\frac{1}{8}$ ராத்தல் பொடாஷியம் ஸல்பேட் கலந்த கூட்டெருவை பிரதிசெடிக்கும் ஒவ்வொரு வருஷமும் இரு முறைகளில் இடுவது நலம்.

செடிகளை உற்பத்திசெய்வது

பூமிமட்டத்திற்குமேல் தாய்ச் செடியின் பக்கத்தில் வெடிக்கிற நிலக்கீழ் குருத்துக்களைப் பிரித்து எடுத்து நடுவதே நல்ல முறை. பழத்தின் அடிப்புறத்தில் இருக்கிற துண்டுகளையும் பழத்தின் உச்சியில் சாண்கிற சிகரச் செடிகளையும் நடுவதால் பலிதகாலம் அதிகரிக்கும். மேம்பாடடைந்தவையும் அரிதில் கிடைக்கிறவையுமானவற்றை ஒவ்வொரு தாய்ச் செடியும் அநேக குருத்துகளை அடிக்கச்செய்து அவை தக்க பருவத்திலிருக்கையில் பிடுங்கி நடுவது நற்செய்கை. குருத்தின் அடித்தண்டு பாகம் சிறிதும் ஒடிந்து கெட்டுப்போகாதபடி ஜாக்கிரதையுடன் எடுக்க வேண்டும். மறுபடி தயாரித்த இடத்தில் நடும்வரை நெருக்கமாக நாற்றங்காலில் நட்டுப் பாதுகாக்கவேண்டும்.

செடி நடவு

ஜூன்–ஜூலை மாதங்களில் முதல் மழையோடு முன்பே வெட்டித் தயாரித்து எருவிட்ட கிடங்குகளில் 'மொரிஷஸ்' ஜாதியை 3 அடியிலும் "க்யூ" ஜாதி குருத்துகளையும் நடவேண்டும். இவ்விதம் நட்டால் 4500 மொரிஷஸ், 2600 க்யூ செடிகளும் ஒரு ஏக்கர் நட தேவையாகும். செடிகள் துரிதமாக வேர்விட்டு வள

ரும் பொருட்டு, சில செதில் இலைகளை யும். செத்த வேர்களையும் நீக்கிப் போட்டு நடவும். நடுக்கிளைத் தண்டுக் குருத்தில் மண் விழாதபடி கவனமாக நடவேண்டும்.

பின் செய் நேர்த்தி

களையெடுப்பு, கொத்தல் சிறுகச் சிறுகக் கிடங்கை மூடிவைத்தல் முதலிய வேலைகள் செய்யத் தக்கவை.

நட்ட $1\frac{1}{2}$ வருஷ காலத்தில் காய்க்கத் தொடங்கும் மொரிஷஸ் ஜாதி—க்யூவுக்கு 2 வருஷங்கள் பிடிக்கும். கீழ் உள்ள ஒன்று இரண்டு தவிர மற்ற குறுத்துகளைப் பிடுங்கி அப்புறப்படுத்த வேண்டும். பிறகு எரு விட்டு மண்கொண்டு மூடிப்போடவும். எந்த விதத்திலும், செடிகள் மேல் மேலாக வேர் அடிக்கவிடவேகூடாது. இப்படிச் செய்தால் கோடையில் செடிகள் வலுக் குறைந்து கேடடையும்

அனுசிப் பயிருடன் மற்ற கலப்புப் பயிர்கள் செய்வது

செடிகள் நட்ட முதல் வருஷத்தில் சிறு கால இடைப் பயிர்களான மிளகாய், காய்கறிகள் முதலியவை செய்யப்படலாம். இவற்ருல் சுவல்ப லாபமடைய முடியும்

யாதொரு பயிரும் செய்யப்படாத வளமான புது நிலங்களில் வாழை. மரவள்ளி முதலிய பயிர்களும் செய்யப்படலாம். இவை அனுசிச் செடிகளுக்கு வேளா வேளைகளில் தேவையாகிற நிழலையும் அடையச் செய்வன ஆகும்.

தென்னந் தோட்டத்தில் வரிசைக்கு வரிசை உள்ள இடத்தில் இடை வெளிப்பயிராகவும் பழ விருக்ஷங்களின் நடுவிலுள்ள ஸ்தலத்திலும் அன்னுசிப் பழச் சாகுபடி செய்யலாம்.

நோய் நொடிகள்—சத்ருக்கள்

காட்டுப்பன்றி, நரி, மரநாய். காட்டுப் பூனை. முதலியவை காடாந்தமான ஜாகைகளில் இப் பயிருக்குப் பரம சத்துருக்கள்.

இதுவரை இப் பயிரைத் தாக்குகிற பெரு நோய்கள் ஒன்றும் காணப்படவில்லை. க்யூஜாதிச் செடிகள் மதாளித்துப் போவதும் நோஞ்சலான பழங்கள் ஆவதும் உண்டு திடமான நோயற்ற செடிகளிலிருந்தே புது நடவுக்குக் குருத்துகள் எடுக்க வேண்டும்.

மகசூல்

நட்ட $1\frac{1}{2}$-வருஷத்தில் 'மொரிஷஸ்' ஜாதியும், 2-வருஷங்களில் 'க்யூ' இனச் செடிகளும் 75 சத விகிதம் பழுக்கும் மீதமானவை பின் 6 மாதங்களில் பூரா பழுத்துவிடலாம். இடத்திற்கும் சீதோஷ்ண வேறு பாட்டிற்கும் ஒத்து முக்கிய புஷ்பகாலம் டிசம்பர்—பிப்ரவரி மாதங்களாகும். இவை காய்த்து முதிர்ந்து பழுப்பது ஏப்ரல்—ஜூன் சில சமயங்களில் நவம்பர்-டிசம்பர் மாதங்களில் ஒரு வாருன சிறிய மகசூலும் கிடைப்பதும் உண்டு. மொரிஷஸ் ஜாதிக்காய்கள் சற்று நீண்டகாலம் பலன்கொடுக்கக்கூடும். முதல் பருவக் காய்ப்பின் செடிகளிலிருந்து எடுத்த பக்கத்தூர் குருத்துகள் ஒரு வருஷகாலத்தில் பலன் கொடுக்கக்கூடும்.

விற்பனை—வியாபார விமர்சை

விற்பனைவயணங்களே லாபத்திற்கு மூல ஆதாரம். பழக்காலத் தொடக்கத்தில் சில பெரிய சைஸ் 'க்யூ" பழங்கள் ரூபாய் ஒன்றுக்குக்கூட விலையாகலாம். என்ருலும் பழம் ஒன்று சராசரி 4 அணுவுக்குக் கிடைக்கும். பட்டணங்களில் நல்ல பழத்திற்கு சதாகாலமும் நல்ல கிராக்கி உண்டு உற்பத்தியாளர் ஜாக்கிரதையாக கிராக்கி கண்டு யோக்கியமான வியாபாரிகளுடன் முன்கூட்டி ஒப்பந்தம் செய்து கொள்ளுவது நல்ல முறை.

பழத்தின் அடிப்பாகத்துக் 'கண்கள்' சற்று மஞ்சள் நிறமடையும் போது. சிறு தண்டுடன் பழத்தை நறுக்கவேண்டும். பழம் சிறிதளவேயானுலும் காயப்பட்டால் அழுகி விடும் நெடுந்தூர பிரயாணஞ் செய்ய நல்ல வண்ணம, உலர்ந்த வைக்கோலாவது வேறு பொருளாவது போட்டு பாக்கிங் செய்வது முக்கியம்.

உபயோகம்

அனுசிப் பழம் ஆயாசந் தீர்த்து போஷணை செய்யும் இதற்கு மருந்து செய் குணம் உண்டு. இதனுலேயே வயோதிகர். சிறுவர்கள் முதலியவர்களுக்குச் சிலாக்கியமான உணவு இப் பழம் குடல் வயிற்றுப் பூச்சிகளைக் கொல்லக் கூடியது.

சர்க்கரைப் பாகில் தோல் போக்கித் துண்டுகளைப்போட்டு வைத்தால் நல்ல நிறம், ருசி, மணம் உள்ளதாய் நெடுநாள் கெடாமல் இருக்கும்.

இப்பழ ரசம் இதர பண்டங்களுக்குச் சுவையும் ருசியும் கூட்டப் பயன்படும்.

பழுத்தும் பழுக்காமலும் உள்ள உரைக்காய்களால் சட்னி செய்யலாம்.

'க்யூ" ரகச் செடியின் முள் இல்லாத மங்தமான இலைகள் கோடையில் கால் நடைத் தீவனமாக உபயோகப்படலாம்.

கல்ல உரப்பானதும் சுத்தமான நார் 3 சத விகிதம் இலைகளிலிருந்து எடுக்கக்கூடும்.

பயிர் செய்வதின் லாபம்

மலிவான பூமிகளிலும் இப்பயிர் செய்யக்கூடுமாகையால் இது நல்ல லாபந்தரத்தக்கது. சராசரி 5 ராத்தல் எடையுள்ள சுமார் 7 000 பழங்கள் 4-வருஷங்களில் ஒரு ஏகரிலிருந்து. "க்யூ" ரகப் பழங்கள் கிடைக்கக் கூடும். ஒரு ராத்தலுக்கு $\frac{1}{4}$ அணு வீதம் குறைந்தபக்ஷ விகிதத்தில், ஒரு ஏகர் பூமி ரூ. 1 000 வரும்படி கொடுக்கும்,

மொரிஷஸ் பழங்கள் சராசரி 2 ராத்தல் எடையேதான் ஆகும். மொத்த வருமானம் அதிகமாகவே இருக்கும். இவை விரைவில் பழுக்கின்றவை. பழங்கள் ருசியானவை.

மேன்மையான முறையில் பயிர் செய்யப்பட்டபோது ஏகர் ஒன்றுக்குச் சுமார் ரூ 500 பிடிக்கலாம். எனவே வருஷம் ஒன்றுக்குச் சராசரி ஏகர் ஒன்று ரூ 125 நிகர லாபம் கொடுக்கும்

இப்பழங்களைப் பலவகை, முரப்பா, ஜாம். முதலியவையாகச் செய்து சரியானபடி விற்பனையாகிற வசதிகளேற்படுத்திஞல் லாபமும் அதிகமாகும்

புதிதாகத் தோட்டங்கள் அமைக்கப்படக்கூடிய ஜாகாக்களில், குருத்துகளுக்கு டிமாண்டு ஏற்படும் 100-க்கு ரூ 3 ஆக, ஏகர் ஒன்று நடத் தேவையான 4 000 தூர்களுக்கு ரூ 120 கிடைக்கலாம்

இது எளிதில் செய்யக்கூடிய பழச் செய்கை விரைவில் தக்க லாபந்தரத்தக்கது உடனடியாகச் செலவழியாத பழங்களை வெவ்வேறு வகை உபரி உணவுப்பொருள்களாக செய்து விற்பனைக்குத் தயாராக்கலாம். பழ விருக்ஷங்களில் இது வெகு விரைவில் நல்ல லாபந்தரத்தக்கதாகையால் ஏற்ற இடங்களில் ஏராளமாகப் பயிர் செய்ய கோரப்படுகிறது.

அன்னுசிப் பழரசமும் நாடாப்புழு நாசமும்

மனிதர்களுடைய குடலில் காணப்படுகிற புழுக்களில் சாதாரணமாக இருப்பது நாடாப்புழு இப்புழுக்களை உற்பத்திசெய்யும் நுண்ணுயிர் ஜீவதாதுக்கள் நோயடிபட்ட காய்கறிகளிலிருந்தே ஆகின்றன இம்மாதிரியான புழு நாசத்திற்கு வெகு கசப்பான தைலம் ஒன்றை குளிசத்திலிட்டு கொடுப்பதுதான் சிகிச்சைமுறை

ஜூலியஸ் பெர்ஜர், கான்ரேடோ பிரெடிக்கோ என்ற இரண்டு விஞ்ஞானிகள் மலிவானதும் இனிப்புள்ளதுமான புழுக்கொல்லி ஒன்றைக் கண்டுபிடிக்கப் பல சோதனைகள் செய்தார்கள் இறுதியில் அன்னுசிப்பழ ரசமே இதற்கு சரியான மருந்தென்று அறிந்தார்கள் புத்தம் புதிய பழ ரசத்தில் நாடாப்புழுக்களைப் போட்டால் உடனே செத்துப்போகின்றன. இப்பழ ரசத்தில் உள்ள ஒருவகை நாசவேலை அமிலம் புழுக்களை மாத்திரம் நொடியில் மடியச் செய்யத்தக்கதென்று தெரியவந்தது என்ருலும் ரசம் அப்பொழுது பிழிந்த புதியதாக இருப்பது மிகவும் முக்கியம். அதைக் கொதிக்க வைத்

சென்ற வாரம் ஜினிவாவில் 8-ந்தேதி கூடும் 3-வது உலக சுகாதார மகாநாட்டுக்கு புறப்பட்டுச் சென்ற இந்தியத் தூது கோஷ்டி:—இடது புறமிருந்து வலதுபுற வரிசையில் லெப்டினென்ட் கர்னல் ஸி. கே. லக்ஷ்மணன் ,ரஜ குமாரி அமிர்த கௌரி (இந்தியாவின் சுகாதார மந்திரியும் தூது கோஷ்டித் தலைவருமாவார்) டாக்டர் கே. ஸி. கே. ஈ. ராஜா (சுகாதார சர்விஸ் டைரெக்டர் ஜெனரல்) டாக்டர் ஸி. ராமசந்தனி

துப் பத்திரப்படுத்தும் முறையால் இச்சக்தி அறவே போய்விடும் ஆகையால் ரசத்தைச் சுட வைக்கவோ கொதிக்கவிடவோ கூடாது

இந்தப் பழரசம் இடுப்புவலிகளுக்குக் கைகண்ட ஔஷதம் 6—முதல் 8 அவுன்ஸு தனி பழச்சாற்றை சர்க்கரை கூட்டி தினம் 3 4 தடவை குடித்துவர 2. 3 நாட்களில் வலி குறைந்துகொண்டே வந்து, 5, 6 நாட்களில் அறவே போய்விடும் வலி தொடங்குகையிலேயே இந்த ரசம் உட்கொண்டால் உடனே நின்றுவிடும் ரசபானம் அதிகருசியுள்ளதாக இருப்பதால் மருந்து உட்கொள்ளுகிறோமென்ற நினைப்பே இன்றி ஏதோ இனிப்புப்பானம் அருந்துகிறோமென்றே கருதுவார்கள்,

அன்னாசிப்பழமும் சர்மரோகமும்

ஹவாய் யூனிவர்சிடியில் இரண்டு வருஷ பரிசோதனைகள் செய்து டாக்டர் கில்லியன் இந்தப் பழ ஆகாரம் சொறி, சிறங்கு நிவாரணத்தில் இணையற்றதென்று சொல்லுகிறார். சிகாகோ நகரத்து டாக்டர் ஹாங்கி பல்சொத்தை. பல்வலி முதலியவற்றிற்கு மிக்க குணம் செய்வது என்கிறார்

பெரி-பெரி என்ற கொடிய காய்ச்சலினால் மெலிந்து நலிந்து நோஞ்சலாகிறவர்களுக்கு சிறந்ததென்றும் சடுதியில் குணமடைவார்களென்று தெரிய வருகிறது மற்றும் தக்க உணவில் இருக்கவேண்டிய இரும்பு, தாம்பரம் மாங்கனீஸ் சத்துக்கள் இப்பழத்தில் இருப்பதாலும் எளிதில் உடற்கூற்றில் சேரக்கூடிய விதத்தில் இருப்பதாலும், இதன் குணம் போற்றத் தக்கதென்றும் சொல்லுகிறார்கள்

இந்தப் பழத்தில் இருக்கிற அயோடின் என்றவஸ்து கழுத்துக்கழலை நோய் நிவாரணி என்றும், அதனால் எல்லாரும் சிறிதளவிலேனும் இப்பழத்தை உட்கொள்வது நலம் என்றும் வைத்திய நிபுணருடைய சிபார்சு

அன்னாசிப்பழச் சக்கை

இதைச் சிதைத்துப் பிழிந்து சாற்றை வடிகட்டி பிப்பியை 160 பாரன்ஹீட் டிக்ரி உஷ்ண நீரில் போட்டுப் பிறகு பிழியந்திரத்தில் அழுத்தி ரசத்தையெல்லாம் பிழிந்தெடுத்துப் போட்டு சக்கையை உலர்த்தி வைத்து காகிதம் அட்டை முதலியவைசெய்ய உபயோகிக்கலாம்.

ரசத்தை எல்லாம் சேர்த்து 180 பாரன்ஹீட் டிக்ரி உஷ்ணத்திற்கேற்றி அதிலுள்ள பிசின் பொருளை உறைய வைத்துத் தனிப்படுத்திக்கொண்டு ரசத்தை பாட்டில்களில் பத்திரப்படுத்தி விற்பனையாக்குகிறார்கள்

* * * *

அன்னாசிப்பழ ரசம் தொண்டை அடைப்பான் சதை வளர்ச்சி ஜலதோஷத்தால் ஆகிற தொண்டை கறகறப்பு முதலியவற்றை நிவர்த்தி செய்து சுகம் கொடுக்கும் பதார்த்த குண சிந்தாமணியில் இப்பழத்தின் குணம் பின்வருமாறு சொல்லப்படுகிறது

"பிரமேக வெள்ளை வாந்தி பித்த நோய், தாகம, சிரஸ்தாபரோகம் போகும். அழகுண்டாகும்."

தேர்த்தட்டு வார்த்தை

'வாரன்'

77

இரு நால்வர்

★

பிரபஞ்சத்திற்கும் உயிர்களுக்கும் ஆதாரமாய் பரமாத்மா எங்கும் வியாபித்திருக்கிருர். இருந்த போதிலும் உயிர்கள் அவரை அறிய வொட்டாமல் தடையாக நிற்பது மாயை மாயை மிக்க வலிமை வாய்ந்தது எவராலும் எந்த உபாயத்தாலும் எளிதில் கடக்கவொண்ணுதது

கடுந்தவம் புரிந்தும் பிறரால் எளிதில் செய்யமுடியாத கர்மாக்களைச் செய்தும் யோகம் பயின்றும் மாயையை வென்றுவிடுவேன் என்று சங்கல்பம் செய்தனர் பலர் காரியத்தில் நிறைவேற்றும் பொருட்டு அரும்பாடு பட்டனர் காரிய சித்தி ஏற்படுவதுபோல் தோன்றும் காலத்தில் 'பிறரால் சாதிக்க முடியாததை நம்மால் நிறைவேற்ற முடிந்தது' என்ற எண்ணம் விருத்தியாகி அதுவே சூட்சும ரூபமான அஹங்காரமாக வளர்ந்து விடுகிறது அவ்வாறு அழிந்தோர் பலருடைய வரலாறுகளே புராணங்களில் மலிந்திருக்கின்றன. மகா ஞானிகளாலும் அறிந்து கொள்ள முடியாதபடி மாயை அதி சூட்சும ரூபத்தில் வேலை செய்யும் என்பதை ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் தனது 1001 உபதேசங்களில் காட்டியுள்ளார்.

'நாரதருக்கு மாயையால் அக்ம ஸ்வரூபம் மறைந்தது. பெண்ணுகிப் பதியையும் புத்திரர்களையும் செல்வத்தையும் இழந்து அழுது வருந்திஞர். முடிவில் பகவானலேயே அம்மாயை நீங்கப் பெற்று ஸ்வரூப ஞானத்தைப் பெற்ருர்'' என்று பரமஹம்ஸர் தேவீ பாகவதத்திலிருந்து எடுத்துக் காட்டியதுபோல் பல வரலாறுகள் இருக்கின்றன ஆகவே எந்த மார்க்கத்தில் எவர் சென்றபோதிலும் சித்தி பெறுவதற்கு மாயைக் கடந்தாகவேண்டும். கடப்பதற்குப் பரமாத்மாவைப் பற்றுதல் ஒழிய வேறு எந்தவித உபாயமும் இல்லை என்று முன்னே உறுதியாகச் சொல்லப்பட்டது.

அதைக் கேட்ட அர்ஜுனன் 'பகவத் சரணுகதியே மாயையைத் தாண்டுவதற்கு மார்க்கமாஞல் எல்லோரும் அதை ஏன் செய்வதில்லை' என்ற ஆலோசிக்க ஆரம்பித்தான் அதையறிந்த கண்ணன் சமாதானம் சொல்லுகிருர்.

மூடர் நராதமர்கண்
முன்மாயை யாலறிவின்

பாடழிந்தார் ஆசுரமாம்
பாவஞ்சேர்—கேடார்ந்த

தீவினையார் நால்வரெனைச்
சேருங் கதியதனின்

மேவியுறு வாரல்லர் மீக்கு.

(இ-ள்) மூடர்—முட்டாள்களும், நராதமர்கள்—மனிதர்களில் அதமர்களும் முன் மாயையால் அறிவின் பாடு அழிந்தார்—(எந்தவித முயற்சியையும் தன் வலிமையால் அழிக்க) முந்தும் மாயை காரணமாக அறிவு கெட்டவர்களும் ஆசுரமாம் பாவம் சேர்—அசுரத்தன்மையாகிய பாவம் சேரப் பெற்று, கேடு ஆர்ந்த தீவினையார்—(அதஞல்) துன்பம் நிறைந்து வரும் தீய செயலையே செய்கின்றவர்களும். நால்வர்-(ஆகிய நான்கு ரகத்தைச் சேர்ந்தவர்களும் எனை சேரும் கதி அதனில்—என்னைச் சரணுகதி பண்ணுதலாகிய மார்க்கத்தில். மிக்கு மேவி உறுவார் அல்லர்—எப்பொழுதும் (எங்கும்) பற்றவே மாட்டார்கள்.

நமாம்து து[3]ஷ்க்ருதிநோ மூ[4]டா:
ப்[3]ரபத்யந்தே நரா[4]தமா:
மாயயா பஹ்ருத் ஜ்[4]ஞாநா
ஆஸுரம் பாவமாஸ்ரிதா:

(இ-ள்) மூடா:—மூடர்களும், நராதமா:—அதம வழியில் செல்வோரும் மாயயா—மாயையால், அபஹ்ருத்க்ஞாஞ:—அபகரிக்கப்பட்ட அறிவையுடையோரும், ஆசுரம் பாவம்—அசுரத்தன்மையை. ஆச்ரிதா:—அடைந்தவர்களுமான, துஷ்க்ருதிந:—பாவத் தொழில் செய்பவர்கள் மாம்—என்னை. ந ப்ரபத்யந்தே—ஆசிரியிக்க மாட்டார்கள் (பற்றமாட்டார்கள்)

ஆஸுரம் பாவம் (ஆசுரமாம் பாவம்) என்பதற்குப் பரஹிம்ஸைத் தன்மை என்று சங்கரர் பொருள் கொண்டார்

நான்கு ரகமானவர்களின் தன்மைகளை ராமானுஜர் தனதுரையில் விவரித்திருக்கிருர்

ராமாநுஜர்:—விபரீத ஞானத்தால் பகவானுக்கே சேஷமான (உடையவனுக்குச் செல்வம்போல் அடிமைப்பட்ட) ஜீவாத்துமா சரீராதிகளை மமதை (புறப்பற்றுக்) கொண்டு தங்களுக்கே உரியவை என்று நினைத்திருப்பவர்கள் மூடாகள். பிரும்மம், ஜீவாத்மா முதலியவற்றின் ஸ்வரூபத்தைச் சாமானியமாய் அறிந்திருந்த போதிலும் சித்தி பெறுவதற்குரிய வழியில் செல்லமாட்டாதவர்கள் நராதமர்களாவர் ஞானமிருந்தும் வஞ்சக யுக்திகளால் பகவத் ஸ்வரூபத்தை மறுத்துரைப்போர் மாயையால் அறிவின் பாடழிந்தார் (அபஹ்ருத் ஜ்ஞாநா:) ஆவார்கள் ஈசுவரனும் அவனுக்கே உரிய எல்லா வஸ்துக்களும் யுக்திவாதங்களைக் கொண்டு இல்லை என்று மறுக்க முடியாதபடி, உண்மை என்று நிரூபிக்கப்பட்ட போதிலும், அவ்விவரத்தைக்கேட்கும்

போதே ஆத்திரமும் விரோதமும் மனதில் கொள்ளுகிறவர்கள் அஸுர பாவம் (தன்மை) உடையவர்களாவார். ஆக இந் நான்கு வகுப்பாரும் ஒருவரைவிட ஒருவர் விசேஷ பாதகர்கள் என்றுர்.

ராகவேந்திரர்:—பழக்க ஒழுக்கத்தால் (நராதமர்) மனிதரில் கடையாயவர் விவேகம் குறைந்தவர்களாய், நிலையுள்ளவற்றையும் நிலையில்லாதவற்றையும் பகுத்து உணர்ந்து கொள்ள மாட்டாதவர்கள். 'மாயையால்' என்பதற்குப் பகவானின் திருவுள்ளத்தாலும் தமது சுபாவத்தாலும் என்று பொருள் உள்ளதை உள்ளபடியே தெளிவாக உணர்ந்துகொள்ள முடியாதபடி அறிவை இழந்தவர்கள் 'அபஹ்ருதக்ஞானா:' எனப் பட்டனர். இவை முதலிய காரணங்களால் அசுரத் தன்மை வாய்ந்தவர்கள் இந்திரிய விஷயங்களால் வரும் இன்பத்தையே விரும்பி, பகவானுகிய என்னை உபாஸிக்க விரும்புவதில்லை; பற்றுவதுமில்லை

என்னை உபாஸிக்காத தீயோர் நால்வர் இங்ஙனமிருக்க என்னை உபாஸிக்கும் நல்லோர்களும் நான்கு வகையாக விருக்கின்றனர் என்று கண்ணன் அடுத்தபடியாகச் சொல்கிறுர்.

4 4
சதுர்விதா பஜந்தேமாம்
ஜநாஸ் ஸுக்ருதிநோர்ஜுந
ஆர்தோ ஜிஜ்ஞாஸு:
2 2 4 4
அர்தார்தீர் ஜ்ஞாநீச பரதர்ஷப.

(இ-ள்) பரதர்ஷப—பரதவம்சத்தி லுதித்தவனே!, ஆர்த்த:—(இல்லாததைப் பெற விரும்பும்) ஆர்த்தன், ஜிஜ்ஞாஸு:—ஸ்வரூப ஞானம்பெற விரும்புவோன், அர்த்தார்த்தீ—பொருளை விரும்புவோன் ஜ்ஞானீச-ப்ரும்ம ஞானியும், சதுர்விதா:-நான்கு வகையினரான, ஸுக்ருதிநஜநா:-புண்ணியசாலிகளான ஜனங்கள், மாம் பஜந்தே—என்னைப் பஜிக்கின்றனர்

'மாடு' என்பது பொதுப்படையாகச் செல்வத்தைக் குறிக்கும் பழந்தமிழ்ச்சொல். அதைப் பொருள், கல்வி, பதவி, அதிகாரம், ஆரோக்கியம் எல்லாவற்றையும் குறிப்பதாகக் கொள்ளலாம். இல்லாததையோ இழந்ததையோ வருந்திப் பெற விரும்புவோனைக் குறிக்கும் ஆர்த்த:' என்ற மூலச் சொல்லுக்கு அதனுல் 'மாடிழந்தான் என்ற பாடல் தொடர் நேர் பொருளாயிற்று

செல்வத்திலிருந்துகொண்டே திருப்தியடையாமல் மேலும் மேலும் பெற விரும்புவோனும் பகவானை விருப்பம் நிறைவேறும் பொருட்டு உபாஸிக்கிறுன். அவனே அர்த்தாத்தி எனப்படுவர் எவ்வளவு கிடைத்த போதிலும் திருப்தி பெருத பேராசையுடையவர்களாயிருந்த போதிலும் அதைப் பெறுவதற்கு அடிப்படையான உறுதியான உபாயம் என்றுணர்ந்து பகவானை உபாஸிக்கிறுர்கள் ஆகவே அவர்களும் பக்தர் வரிசையில் பொதுவாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த ரகத்தைச் சேர்ந்தவர்களின் தன்மை முழுதும் தோன்றும் பொருட்டு 'அர்த்தார்த்தீ என்ற மூலத்தொடர் பாடலில் வான் பொருளைத் தேடியிருப்பான் என்று விவரிக்கப்பட்டது பாராட்டத் தக்கது

'ஜிக்ஞாஸு' என்பதற்குச் சொரூப ஞானத்தையடைய விரும்பிப் பகவானைப் பிரார்த்திப்பவன் என்று பொதுவாகச் சிலரும், ஜீவாத்மாவாகிய தன்னை அறியும் பொருட்டுப் பகவானை உபாஸிப்பவன் என்று குறிப்பாகச் சிலரும் பொருள் கொள்வர் வேருகப் பொருள் கொள்ளப்படினும். 'ஞானம் ஸித்திக்காமல் அது ஸித்திக்கும் பொருட்டுப் பகவானை உபாஸிப்பவர் என்று இரு சாராரும் பேதமின்றி ஒப்புக் கொள்கின்றனர்.

ஞானி என்பவன் தனக்கு எதையும் பகவானிடம் வேண்டாமல் பகவானே தாரகம் போஷணம் போக்யம் என்றுணர்ந்து அவரையே தியானித்துக் கொண்டிருப்பவன்

துன்புற்ற காலத்தில் அதைப் போக்கிக்கொண்டு இழந்த பதவி அரசு இவற்றை அடைந்துதான் முன்னேயிருந்த நிலையில் இருக்கும் பொருட்டுப் பகவானுகிய கண்ணனை உபாஸித்தவள் திரௌபதி அவள் 'ஆர்த்த:' என்பதற்கு எடுத்துக்காட்டு துச்சாதனன் துகில் உரிந்தபோது கண்ணனை இவள் பிரார்த்தனை செய்தது ஆர்த்தனின் நிலையைத் தெளிவாகக் காட்டும் என்போரும் உளர்.

ஜிக்ஞாஸுவுக்கு பாகவதத்தில் வரும் உத்தவரை உதாரணமாகக் கூறுவர்.

பாகவத புராணத்தில் வரும் துருவனின் பக்தி வரலாறே அர்த்தார்த்தியின் பக்திக்கு எடுத்துக் காட்டு.

சுயநலம் அறவே நீங்கி பிரதிப்பிரயோசனத்தை எதிர் பாராமல் பகவானை உபாஸிக்கும் ஞானியின் நிலையை பிரகலாதனின் வரலாற்றுல் அறியலாம் ஆக இதுவரைச் சொல்லி வந்த தீயோர் நால்வர் நல்லோர் நால்வர் இவ்விரு நால்வரில் நல்லோரே சிறந்தவர் அவர்களின் ஞானி மேலும் சிறந்தவன் எப்படி என்பதை அடுத்த வாரம் காண்போம்.

மாடிழந்தான் மன்னுயிரை
வேண்டுணர்வோன் வான்
[பொருளைத்
தேடியிருப் பான்ஞானம்
சேர்வுற்றுன்—பீடமரும்
நல்வினையார் நால்வரிவர்
என்பால் நலம்புனையும்
தொல்வினையால் சேர்வர் துணிந்து

(இ-ள்) மாடு இழந்தான்—(பொருள் செல்வம் அல்லது ஆரோக்கிய) செல்வத்தை இழந்து பெறும் பொருட்டு வருந்துகின்றவன். மன்னுயிரை வேண்டு உணர்வோன்—தன்னைப் பற்றிய ஸ்வரூப ஞானத்தைப் பெற விரும்புபவன், வான் பொருளைத் தேடி இருப்பான்—மிக்க பொருளை மேலும் மேலும் பெற விரும்புவோன் ஞானம் சேர்வுற்றுன்—ஞானம் கைவரப்பெற்ற ஞானி. பீடுஅமரும்—(ஆக இவ்விதம்) பெருமை தங்கிய, நல்வினையார் நால்வர் இவர்—புண்ணியமுடைய நான்கு வகையான இவர்கள். நலம் புனையும் தொல்வினையால்—நன்மை மிகுந்த பழமையான (பல பிறவிகளில் செய்த) நற்கருமங் காரணமாக, துணிந்து -(உபாயம் பலம் இரண்டிலும்) உறுதி கொண்டு, என்பால் சேர்வர்—என்னையே பற்றுவார்கள் (உபாஸிப்பர்.)

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி" (Regd.)
Phone: 84254.
குழந்தைகளின் சுரம், குலை ஜுரக்கட்டி வியாதிகளைச் சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான் அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாருதீர்கள்.
Dr. பிள்ளா பாபய்யா பாத்ருடு & பிரதர்,
19, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.
கும்பகோணம் கிளை:— 7. சாரங்கபாணி கோவில் கீழ வீதி.
திருச்சி கிளை:— 15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்ட்.



உறையிலிட்ட கடிதம்

ஸ்ரீமதி பத்மா நாராயணன்

"சிறந்த சிறு கதைக்கு நூறு ரூபாய் பரிசளிக்கப்படும்." என்ற அறிவிப்பு 'கலைமாழி' என்ற பத்திரிகையில் வெளியானவுடன், எனக்கு அன்றிலிருந்து தூக்கம் வரவில்லை. என் கற்பனைகளைப் பல திசைகளில் ஓட்டினேன். நான் பார்த்ததும், பார்க்காததும், கேட்டதும் கேட்காததுமான பல சம்பவங்களையும், உணர்ச்சிகளையும் என் மனத்திரையில் ஓடவிட்டு, அவற்றிலிருந்து ஒரு கற்பனையைப் பின்னி சிறந்த முறையில் சிறுகதை எழுதி, அதைக் 'கலைமாழி'க்கு அனுப்பிவிடுவதென்று தீர்மானித்தேன்.

அப்படியொன்றும் நான் பிரமாதமான எழுத்தாளனல்ல. ஆனால், எழுத வேண்டுமென்ற ஆசை எனக்கு நிரம்ப இருந்தது அப்படியே சில கதைகளும் எழுதி பத்திரிகைகளுக்கு அனுப்பிவைத்தேன். அதிர்ஷ்டவசமாக என் முதல்கதையே, 'கலைமாழி'யில் வெளிவந்துவிட்டது. உத்ஸாகம் அதிகமாயிற்று; மேலும் பல சிறு கதைகள் எழுதி அப்பத்திரிகைக்கு அனுப்பினேன் பல திரும்பி வந்துவிட்டன; ஒரு சில பிரசுரமாயின

ஒரு கதை திரும்பிவந்துவிட்டால், என் உத்ஸாகம் குன்றிவிடும், பிரசுரமாகிவிட்டால், உத்ஸாகம் இரட்டிப்பாகிவிடும் என் மனம் ஒரு உஷ்ணமானிபோல பிரசுரமாகிவிட்டால், அதில் சந்தோஷம் நிறைந்து, பல 'டிகிரி'கள் உயர்ந்து காட்டும் கதை திரும்பிவிட்டால், அது குளிர்ந்து, உறைந்து குறுகிய 'டிகிரி'களையே காட்டும்.

'சிறுகதைப் போட்டி'யை அறிவித்திருந்த அந்த இதழிலேயே, என்னுடைய ஒரு கதையும் வெளியாகியிருந்தது. ஆகையால். நான் வெகு உல்லாசத்துடன். 'போட்டி'க்கும் ஒரு கதை எழுதிவிடுவதென்று தீர்மானித்தேன் சில தினங்களுக்குள். என் கற்பனைரதம் பலதிசைகளில் உருண்டு சுற்றியலைந்து, கடைசியாக ஒரு இடத்தில் நின்றது. அந்த இடமே அதன் லட்சியத்தை நோக்கிச்செல்லும் கிளைபாதை பிரியுமிடம் என்பதைத் தீர்மானித்துக்கொண்டது, அங்கிருந்து இலேசாக முன்னேற ஆரம்பித்தது,

நான் எழுதுகோலையும், காகிதத்தையும் எடுத்து வைத்துக்கொண்டேன். 'கலைமாழி'யில் சாதாரணமாக வெளிவரும் சுதைகளே மிக உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தவை அதிலும், அதில் போட்டி ஏற்படுத்தி ஒரு கதை பரிசும் பெற்று விட்டால். அந்த எழுத்தாளன் தற்காலப் பத்திரிகை உலகிலேயே. ஒரு 'சிறு கதை மன்னனாகத்' திகழ்வான் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ! ஆகையால், வெகு நிதானமாக எழுத முற்பட்டேன் சில வரிகள் எழுதியும் ஆயிற்று எழுதிய வரிகளைத் திரும்பவும் படித்தேன். ஆம்; நன்றாகத்தான் இருந்தது கதையின் ஆரம்பம் பகு ஜோர்' படிக்க ஆரம்பிப்பவன் முடிக்காமல் கீழே வைக்கமாட்டான், திரும்பத் திரும்ப அவ்வரிகளைப் படித்தேன். எனக்கு உள்ளூர பரம திருப்தியும் ஆனந்தமும் ஏற்பட்டன. ஏன்? "சோவென்று மழை பெய்துகொண்டேயிருந்தது. அந்தக் கொட்டும் மழையிலும். ஓட்டைக் குடையாயிருந்தாலும். நனைந்துகொண்டே, முழங்கால் தண்ணீரில், சொக்கன் வேகமாய்ப் போய்க்கொண்டிருந்தான்–' இப்படி ஆரம்பித்த வரிகள் யாரைத்தான் ஆகர்ஷிக்காது?

ஒரு பக்கம் எழுதி முடித்ததும். மேலும் எப்படி எழுதுவது என்று தெரியாமல் திணறிக்கொண்டே கையில் பேனாவை உருட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தேன் அப்போது என் சிறு குழந்தை மெதுவாகத் தவழ்ந்து வந்துஎன் பாதத்தைப்பிடித்துக்கொண்டது; 'வீர் வீரெ'ன்று அழத் தொடங்கியது. குழந்தையை எடுத்து முத்தமிட்டுவிட்டு, தரையில் மீண்டும் கிடத்தினேன். மேலும் ஒரு பக்கம் எழுதி முடித்து விட்டேன்.

மூன்றாவது பக்கம் புரட்டும்போது என் மனைவி கல்யாணி என் பின்னால் வந்து நின்றாள். தோள் பட்டை வழியாக என்னை எட்டிப் பார்த்துவிட்டு, "ஓகோ, கதை எழுதறேளா? ஒரு சமாசாரம். கேட்டுவிட்டு மேலே எழுதுங்களேன். இன்னிக்குச் சமையலுக்கு அரிசியில்லே," என்று சொன்னதும் சொல்லாததுமாக அப்பால் நகர்ந்தாள் சிலர் மனைவிகளைப்போல், வீட்டின் தரித்திர நிலைமையைப்பற்றி, விஸ்தாரமாகப் பிரசங்கம் செய்துவிட்டு. 'இந்த நிலைமையில், கதை என்ன வேண்டிக் கிடக்கு?' என்று இடித்துக் கூறுபவளல்ல என் மனைவி ஆனால், அவள் அமைதியாகச் சொன்ன அந்த "இல்லை'ப் பாட்டும் என்னை உத்ஸாகம் குலைக்க வைத்துவிடும். இன்று எனக்கிருந்த சந்தோஷ உணர்ச்சி என்னவோ, அவளுடைய குறுக்கீட்டினால், சிறிதும் பாதிக்கப்படவில்லை 'சரி சரி, போ, எங்கேயாவது அரைப்படி கடன் வாங்கிச் சமை' என்று சுருக்கமாகப் பதிலளித்துவிட்டு, என் கதையின் மூன்றாம் பக்கத்தைத் துவக்கினேன்.

மூன்றாம் பக்கம் முடியும் தருணத்தில், 'சனியன்' போல் வந்துவிட்டான் என் நண்பன் சுப்புடு அவன் வந்துவிட்டால் வெண்கலக்கடையில் யானை புகுந்த மாதிரிதான் ஓயாமல் பேசி 'நம்மைத் திணறடித்துவிடுவான் கடைசியில் நம்மிடம் ஐந்து, பத்து கடன் கேட்பான் சனியன் தொலையட்டும் என்று நினைத்து, கேட்டதைக் கொடுத்து அனுப்பிவிடுவது என் வழக்கம் சுப்புடு வந்துவிட்டானே என்றுகூடப் பீதியடையாமல் மூன்றாம் பக்கத்தை முடித்து, நான்காம் பக்கம் புரட்டினேனோ. இல்லையோ. அப்போது அவன் செய்த ஒரு காரியம் என்னையே மூர்ச்சையடையும் நிலைக்குக் கொண்டுவந்துவிட்டது நான் போன வருஷம் கொடுத்த பத்து ரூபாயைத் திருப்பிக் கொடுத்துவிடத்தான் வந்திருக்கிறானாம் என்ன ஆச்சரியம்! என் காதுகளையே நான் நம்பவில்லை நல்லவேளை, சிறு கதை எழுதும் ஆனந்தத்தில், **மூர்ச்சையடையாமல் தப்பினேன்!**

ஆயிற்று; நான்காம் பக்கமும் பூர்த்தியாகி, ஐந்து, ஆறு, ஏழு பக்கங்கள்கூட எழுதி முடித்துவிட்டேன். இன்னும் இரண்டே பக்கங்களில் கதையை முடித்துவிட வேண்டும் என்று தீர்மானித்தேன். ஆரம்பம் எப்படியோ, அப்படியே முடிவும் நல்ல முறையில் அமையவேண்டும் என்று எண்ணி, சிறிது அமைதியாக உட்கார்ந்து யோசனை செய்தேன். அப்போதுதான் எதிர்வீட்டுப் பாட்டி ஆடி அசைந்துகொண்டு என்னிடம் வந்தாள் 'ஏண்டா, 'கந்தசஷ்டி' என்னிக்கு வருது? கொஞ்சம் பஞ்சாங்கத்தைப் பார்த்துச் சொல்லேன்' என்று கேட்க ஆரம்பித்தாள். எனக் கொஞ்சம் கோபம் வரத்தான் செய்தது இருந்தாலும் அதைப் பாராட்டாமல், இந்தப் பாட்டியை எப்படியாவது அனுப்பித் தொலைப்போம் என்று எண்ணி, என் மேஜை மேலிருந்த பஞ்சாங்கத்தை எடுத்துப் புரட்டி, ஒரு நொடியில் 'கந்த சஷ்டி' நாளைச் சொல்லி அனுப்பிவைத்தேன் கற்பனைக் குதிரையை விட்ட இடத்திலிருந்து மேலும் பற்றிக்கொண்டேன்.

கதையின் முடிவு எனக்குத் தெளிவாயிற்று ஸ்திரமாக அதையே பற்றிக்கொண்டு, எழுதுகோலை எடுத்து, அதைக் காகிதத்தில் பின்னத் தொடங்கினேன். அப்பப்பா, எழுத வேண்டுமென்று உட்கார்ந்தால் எத்தனை இடைஞ்சல்கள்! எத்தனை நேரம் ஆகிறது? 'தெளிவாக ஒரே பக்கத்தில், எங்கள் பத்திரிகையில் ஐந்து பக்கங்களுக்குக் குறையாமல் இருக்கும்படி எழுதவேண்டும்''—என்று 'கணையாழி'யின் ஆசிரியர் விரும்புகிறார் பாவம், என்னைப்போல் இதே நேரத்தில் எத்தனை எழுத்தாளர்கள் அவதிப்படுகிறார்களோ என்று பரிதாபப்பட்டேன். ஆனால், புதிய எழுத்தாளனாக இருந்தாலும், எனக்கு கற்பனைக்கொன்றும் குறைவில்லை என் கஷ்டம் எல்லாம், அவற்றைத் தெளிவாகக் காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதுவதில்தான் இருந்தது. ஒரு கதை நம்முடைய ஒரு முழு நாளையும் பேனாவும் கையுமாக உட்காரச் செய்துவிடுகிறது. சில சமயங்களில் இரண்டு, மூன்று, நான்கு நாட்கள் கூட ஆவதுண்டு.

ஆனால் இன்று என்னவோ, கரை புரண்ட என் உத்ஸாகத்தில், கட்டுக்கடங்காத என் கற்பனையைக் கட்டிப் பிடிக்க முடியவில்லை. எழுதிக்கொண்டே இருந்தேன் ஆம்; அதற்கு ஒரு முடிவே இல்லை எல்லா இடையூறுகளையும் தகர்த்தெறிந்து, முன்னேறினேன் கதையை முடித்து வெற்றி வீரனாக வெளியேறும் தருணம். ஆம்; அப்போதுதான் அந்த— சொல்லவே கூசுகிறது— உறையிலிட்ட கடிதம் வந்து சேர்ந்தது அந்த உறையை உடைத்தேன், கடிதத்தைப் பிரித்தேன்: படித்தேன்:—

அன்புள்ள ஐயா,

தங்கள் விஷயதானங்கள் எங்களை மிகவும் சந்தோஷத்திலாழ்த்துகின்றன தங்கள் திருப்திக்காக ஒன்றிரண்டு கதைகளைப் பிரசுரித்தோம். எங்கள் பத்திரிகைக்கு வழக்கமாக எழுதும் சில பழைய பிரபல எழுத்தாளர்கள் இருப்பதால், புதிய எழுத்தாளர்களுக்கு அதிகமாக இடம் அளிக்க முடியாததற்கு வருந்துகிறோம். நீங்கள் வேறு பத்திரிகைகளுக்கு எழுதலாம். தங்களுக்கு எங்கள் நன்றி'

'கணையாழி'யின் ஆசிரியர் எழுதிய இந்நிருபம் என் உத்ஸாகத்தைக் குலைத்து, எழுதிய ஏழு பக்கங்களையும் கிழித்தெறியச் செய்தது!

—

ஆரூடம்! ஜாதக பலன்!!

ஜனன கால விவரம் அல்லது முழுப் பெயர், சுமார் வயது, செய்யும் தொழில், கடிதம் எழுதும் நேரம் தேவை. 1 முதல் 5 எதிர்காலக் கேள்விகளுக்குப் பதில் எழுத ரூ. 2.

ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் ரூபா 6. முக்ய யோகாம்சங்களும் சுருக்கமான பலனுடன் ஒரு ஜாதக குறிப்புக்கு ரூ. 5. ஒரு தசைக்கு புக்திவாரி பலன் எழுத ரூ. 10. கிரஹசார தோஷம் நீங்கி, சகல நன்மைகளும் உண்டாவதற்கு "விஜய ரக்ஷணி" கவசம் 1-க்கு ரூ. 7-8-0. பிரத்யேக ரக்ஷை ரூ 72-8. வி. பி. செலவு தனி.

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,
Astrologer & Journalist,
Triplicane :. Madras 5.

அதிசய அரண்மனை

எஸ்.ரங்கராஜன்

சாம்பிராணிபுரி அரசன் மந்தமதிக்குத் தாயாரிடத்திலிருந்த அன்பு. ஏனென்றால் அவன் தாயாருக்கு அவனைத் தவிர வேறு ஒருவரும் கிடையாது. அதனால் மிகவும் செல்வமாக வளர்ந்தவன். தினமும் தாயாருக்கு வேண்டியவைகளை கவனித்துவிட்டுத்தான் ராஜ்ய காரியங்களைக் கவனிப்பான். அவளுக்கு உடம்பு சரியாக இல்லாவிட்டால் 'அம்மா சரியாக இல்லை இன்று அரசாங்க விஷயங்களைக் கவனிக்க முடியாது' என்று சொல்லிவிடுவான். அம்மாவுக்காக உயிரையே வேண்டுமானாலும் விட்டுவிடத் தயாராயிருந்தான்.

இவ்வளவு பெருமை பொருந்திய அவன் தாயாருக்கு திடீரென ஒருநாள் ஜுரம் கண்டது. அரசாங்க வைத்தியர்கள் வந்து பார்த்து மருந்து கொடுத்தார்கள் ஆனாலும் ஜுரம் சிறிதளவு கூடக் குறையவில்லை. ஆகவே வெளியூரிலிருந்து பல வைத்தியர்களை அழைத்து நோயைக் கண்டுபிடிக்க முயற்சித்தான். அவர்களும் என்னென்னவெல்லாமோ செய்து பார்த்தார்கள். ஒன்றிலும் ஜுரம் இறங்கவில்லை. வைத்தியர்கள் அரசனைப் பார்த்து 'அரசே! ஜுரம் தானாகவே குறைந்தால்தான் உண்டு. இல்லாவிடில் உங்கள் தாயார் சீக்கிரமே இறந்துவிடுவாள்' என்று சொன்னார்கள். அரசனுக்கு அதைக் கேட்டதும் சொல்லமுடியாத வருத்தம் ஏற்பட்டது. தனக்கு உயிருக்கு உயிராயிருந்த தாயார் போய்விடுவாளோ என்ற திகிலும் ஏற்பட்டது.

வைத்தியர்களை எல்லாம் அவரவர்கள் ஊருக்கு அனுப்பிவிட்டுத் தானே தன் தாயாருக்கு இரவு பகலாக வேண்டியவற்றை செய்துவந்தான். ஆனால் அம்மாதிரி வெகுநாள் இரவில் தூக்கம் விழிக்கமுடியவில்லை. அதற்கு வேறு ஒரு ஏற்பாடு செய்தான்.

ஒருநாள் தன் சேவகர்கள் எல்லோரையும் அழைத்து ஒரு கட்டளையிட்டான் 'சேவகர்களே! என்னுடைய தாயார் படுத்த படுக்கையில் இருப்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அவளுக்கு வேண்டியவைகளைச் செய்ய இரவும் பகலும் யாராவது ஒருவர் அவள் அருகில் இருக்கவேண்டியிருக்கிறது ஆகையால் நீங்கள் ஒவ்வொருவரும் ஒருநாள் என் தாயார் அருகில் இநந்து அவளுக்கு வேண்டியவற்றைச் செய்யவேண்டியது அவள் இறந்துவிட்டாள் என்று யார் முதலில் வந்து சொல்லுகிறானோ அவன் தலை போய்விடும்' என்ற கட்டளைதான். சேவகர்களின் அஜாக்கிரதையினால் அவள் தாய் இறக்கக்கூடாது. என்ற எண்ணத்துடன் அவன் அம்மாதிரி தலையை வாங்கிவிடுவதாகக் கட்டளையிட்டான்.

அரசன் கட்டளை சேவகர்களுக்குக் கலகத்தை உண்டாக்கியது. எவன் தலை போகப்போகிறதோ என்ற பயம்வேறு உண்டாயிற்று. அந்த பயத்துடனேயே ஒவ்வொருவரும் ஒவ்வொருநாள் காவல்புரிந்து வந்தார்கள். ஒவ்வொருநாளும் அவர்கள் தலை தப்பித்து வந்தது. அரசன் தாயாருக்கு நோயும் கடுமையாகி இன்றோ அல்லது நாளையோ கட்டாயமாக இறந்துவிடுவாள் என்ற எண்ணம் எல்லோருக்கும் உண்டாகிவிட்டது. சேவகர்களுக்கும் அதிகபயம் ஏற்பட்டது,

அன்றிரவு காவல் புரிவதற்கு கந்தனுடைய முறை. அவன் வீட்டிலேயே எல்லோரிடமும் தான் அரசன் தாயாரோடு யமலோகத்துக்குப் போவதாகச் சொல்லிக்கொண்டு கிளம்பினான். ஆனால் வீட்டில் உள்ளவர்கள் ஒருவராவது அவனை அன்று காவலுக்கு அனுப்புவதற்கு இஷ்டப்படவில்லை. இருந்தாலும் கந்தன் என்னசெய்ய முடியும். காவலுக்குப் போகாவிட்டாலும் தலைபோய்விடும், போனாலும்

தலை போகத்தான் போகிறது. ஆகையால் வீட்டில் உள்ளவர்களை 'ஒருவேளை இன்றிரவு அவள் செத்துப் போகாமலும் இருக்கலாம்' என்று சமாதானம் செய்து கிளம்பினான்.

இரவு பன்னிரண்டு மணிக்குக் கந்தன் காவலுக்கு வந்து சேர்ந்தான். நேராக அரண்மனைக்குள் வந்து அரசன் தாயார் இருக்கும் அறைக்குள் நுழைந்தான். அப்பொழுது அவள் நிலை மிகவும் மோசமாக இருந்தது. மூச்சுக் கூட விடமுடியாமல் தவித்துக் கொண்டிருந்தாள். சரி இவள் இன்று டிக்கட்டு வாங்கிவிடுவாள் தானும் அவளுடன் யமலோக யாத்திரை செய்ய வேண்டியதுதான் என்று எண்ணி தலையின் மேல் கையை வைத்துக்கொண்டு அவள் அருகில உட்கார்ந்தான். எப்படித் தலைபோகாமல் தப்பித்துக்கொள்ளுவது என்ற யோசனையில் ஆழ்ந்தான். சுமார் இரண்டு மணி நேரங்கள் அப்படியே தூங்கிவிட்டான். மறுபடி திடுக்கிட்டு எழுந்து அரசன் தாயாரை உற்றுநோக்கினான். அவள் உடல் மாத்திரம் அசைவற்றுக் கிடந்தது. அவள் உயிர் அவன் வரவை எதிர்பார்த்தவண்ணம் யமலோகத்தில்காத்துக் கொண்டிருந்தது. ஆனால் கந்தன் அதற்குள் ஒரு வழி கண்டுபிடித்துவிட்டான்.

மறுநாள் காலையில் அரசன் மிகுந்த கவலையுடன் சேவகன் வரவை எதிர்பார்த்த வண்ணம் உட்கார்ந்துகொண்டிருந்தான். வெகு நேரமாவரையில் அவன் வராதிருக்கவே தன் தாயாருக்கு ஏதோ ஆபத்து என்று தீர்மானித்து தானே நேரில் பார்க்கப் புறப்பட்டான். அந்த சமயத்தில் கந்தன் அங்கு தோன்றினான்.

அரசன் படபடப்புடன் 'அம்மா எப்படி இருக்கிறாள்' என்றான்.

கந்தன் நிதானமாக 'அம்மா அப்படியேதான் இருக்கிறாங்க, ஆனால் ....' என்று சொல்லி முடிப்பதற்குள் அரசன் ஆத்திரத்துடன்,

'ஆனால், என்னடா! உயிரோடு இருக்கிறாளா, அல்லது இறந்து விட்டாளா?' என்று கேட்டான்.

கந்தன் மிகவும ஜாக்கிரதையாக 'இல்லீங்க! நீங்க எந்த அரண்மனையிலே முதன் முதலிலே உண்டானீங்களோ அந்த அரண்மனை இடிஞ்சு விழுந்துடுத்து' என்றான். அரசனுக்கு ஒன்றும் புரியவில்லை.

'நான் இந்த அரண்மனையிலேதான் உண்டானேன். இது நன்றாக இருக்கிறபோது இதை இடிந்து விழுந்துவிட்டது என்கிறாயே, உனக்குப் பைத்தியமா?' என்றான் அரசன்.

கந்தன் உடனே 'இந்த அரண்மனை இல்லீங்க நீங்க இந்த உலகத்திலே வரத்துக்கு முன்னாடி ஒரு அரண்மனையிலே பத்து மாதம் இருந்தீங்களோன்னே அந்த அரண்மனை இடிஞ்சுடுத்து என்றான். அரசனுக்கும் விஷயம் புரிந்துவிட்டது.

அரசன் ஆத்திரத்துடன் 'தாயார் இறந்துவிட்டாள். ஐயோ!' என்று கூச்சலிட்டான். சிறிது நேரங்கழித்து தேற்றிக் கொண்டு, தன் மந்திரியைப் பார்த்து 'என் கட்டளைப்படி கந்தன் தலையை வாங்கிவிடு' என்றான்.

கந்தன் மறுபடி அரசனைப் பார்த்து, 'தாயார் இறந்துவிட்டாள்' என்று யார் முதலில் சொல்லுகிறார்களோ அவர்கள் தலை போய்விடும் என்றுதான் தங்கள் கட்டளை. அம்மா இறந்துவிட்டார் என்று நான் சொன்னதுயார் என்று தாங்களே யோசித்துப்பாருங்கள் என்றான்.

அரசனுக்கு அப்பொழுதுதான் புத்தி வந்தது. அவன்தான் முதலில் அப்படிச் சொல்லியது, கந்தன் இல்லை என்பதைத் தெரிந்து கொண்டு கந்தனை விட்டுவிட்டான்.

கந்தனைப் பற்றியே அன்று முதல் ஊர் முழுவதும் பேச்சாக இருந்தது. கந்தன் கெட்டிக்காரத்தனத்தை எல்லோரும் புகழ்ந்தார்கள். அன்று முதல் கந்தனைக் கேட்காமல் ஒரு காரியத்தையும் செய்யமாட்டார்கள். அந்தப் பட்டணத்துக்கும் கந்தபுரி என்று பெயரும் சூட்டிவிட்டார்கள்.

பாடும் பறவைகள்

பிசாசுக் கிளி

பார்ப்பதற்குப் பயங்கரமாயிருப்பதால் இதற்கு மேற்கண்ட பெயர் கொடுத்துவிட்டார்கள். இதன் நிறம் கருப்பு. இதன் அலகு (மூக்கு) இரும்பையும் பிளக்கும் சக்திவாய்ந்தது. தேங்காயைக் கூடப் பிளந்து இளநீர் குடித்துவிடுமாம். அவ்வளவு கூர்மையான மூக்கு. இது

ஆஸ்திரேலியா கண்டத்தில் கூட்டங் கூட்டமாகக் காணப்படுகிறதாம். இதன் பாட்டுக்காக அங்குள்ள ஜனங்கள் பார்க்கமுடியாத இடத்தில் கட்டி வளர்க்கிறார்கள். தினமும் சாயங்கால வேளைகளில் அரை மணி நேரம் பாடும்.

அந்தக்காலத்து மாணவர்கள்

சபரி

அந்தக் காலத்தில் ஆண்கள் தான் குருவுக்கு பணிவிடைகள் செய்து மிகவும் புகழ் அடைந்தார்கள் என்று நினைக்கவேண்டாம். பெண்கள்கூட அம்மாதிரி குருவுக்குப் பணிகள் செய்து ஆண்களைக் காட்டிலும் பேரும் புகழும் அடைந்திருக்கிறார்கள். அம்மாதிரி உள்ள பெண்மணிகளில் சபரி என்பவளும் ஒருவள். ராமபிரானைப் பற்றி எண்ணும் போதெல்லாம் சபரியைப்பற்றி நினைக்காமல் இருக்க முடியாது. ராமபிரானுக்கும் அவளிடத்தில் அளவுகடந்த அன்பு. ஏன் தெரியுமா? அவள் குருவுக்குப் பணிவிடைகள் செய்துதான் காரணம். இதைப்பற்றித்தான் சொல்லப் போகிறேன்.

விந்திய மலையின் தாழ்வரைகளில் உள்ள அடர்ந்த காட்டின் ஓரிடத்தில் மதங்கர் என்ற முனிவர் இருந்தார். அவருக்கு ஏராளமான மாணாக்கர்கள் இருந்தார்கள். அவர்கள் குருவுக்கு வேண்டியவைகளைச் செய்து வந்தார்கள். வெளிநாடுகளிலிருந்தும் மதங்கரிடம் உபதேசம் பெற அநேகம் மாணாக்கர்கள் வந்தார்கள்.

அக்காடுகளின் ஒரு மூலையில் ஒரு வேடுவப் பெண் வசித்து வந்தாள். அவள் பெயர் சபரி. அவள் கடவுள் பக்தி உள்ளவள். மற்ற பிராணிகளிடம் இரக்கம் உள்ளவள். இப்படிப்பட்ட குணங்களுள்ள சபரிக்கு மதங்க முனிவரிடம் எப்படியாவது உபதேசம் பெறவேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. ஒருநாள் அவர் மாணாக்கர் ஒருவரை அணுகி தனக்கு உபதேசம் செய்வாரா என்று கேட்டாள்.

'வேடப் பெண்ணுக்கு உபதேசம் வேறு செய்யவேண்டுமா? நீ அவரைப் பார்க்கக்கூட முடியாது' என்று சொல்லிவிட்டார் அந்த மாணாக்கர். சபரிக்கு சிறிது வருத்தமாக இருந்தது. எப்படியாவது மதங்கரை நேரில் காண வேண்டுமென்று ஆசை உண்டாயிற்று.

மறுநாள் முதல் ஒவ்வொரு நாளும் மதங்கர் வெளியில் நடந்து செல்லும் பாதைகளை நன்றாக சுத்தமாக்கி, அவர் காலில் கற்கள் உறுத்தாமல் இருக்க புஷ்பங்களை வழி நெடுக இறைத்துப் பஞ்சுபோல் செய்து வந்தாள். ஒவ்வொரு நாளும் இம்மாதிரி நடக்கவே மதங்கருக்கு அம்மாதிரி செய்பவரை நேரில் காணவேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. முதலில் தன் மாணாக்கர்களை இதைப்பற்றி விசாரித்தார். பொறாமையினால் அவர்கள் தங்களுக்குத் தெரியாதென்று சொல்லிவிட்டார்கள். ஆகவே மதங்கர் வேறு வழியில் கண்டுபிடிக்க யத்தனித்தார்.

ஒருநாள் அதிகாலையில் எழுந்திருந்து ஓர் பெரிய மரத்தின் பின்னால் நின்றுகொண்டு நடப்பவைகளைக் கவனித்தார். சபரி வழக்கம்போல் தன் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள். உடனே மதங்கர் மனமுருகி மரத்தைவிட்டு ஓடிச்சென்று அவளைத்தடுத்து ஏன் அம்மாதிரி செய்கிறாள் என்று விசாரித்தார். சபரி நடந்தவைகளைச் சொல்லவே, அவருக்குத் தன் மாணாக்கர்களிடம் அளவிட முடியாது கோபம் ஏற்பட்டது.

மறுநாள் சபரியைத் தன் முதல் மாணவியாக ஆக்கிக் கொண்டார். இருந்தாலும் அவள் தன் பணிவிடைகளை விடாமல் செய்துவந்தாள். அதனால் கடவுளாகிய ராமனை நேரில் கண்டு களித்தாள். அழியாத உலகத்தையும் அடைந்தாள்.

கல்வியும் ஓடமும்

ஒரு ராஜா ஒருவன் மற்றொரு ஊருக்கு ஒரு ஆற்றைக் கடந்து போக நினைக்கிறான். ஆற்றில் வெள்ளம் கடுமையாக இருக்கிறது. ஆகவே ஒரு ஓடத்தைக் கொண்டுவரச்செய்து அதில் ஏறிக்கொள்ளுகிறான். ஓடக்காரனைக் காணவில்லை. அவன் இல்லாவிட்டால் ஓடம் புறப்பட்டுவிடுமா அரசன் உட்கார்ந்திருக்கிறானே என்று நடுங்கிக் கொண்டு தானே கிளம்பி அக்கரைக்குப் போய்விடுமா. கொஞ்சங்கூட நகராது. ஓடக்காரன் வந்தபிறகுதான் அது புறப்படும். 'நான்தான் அரசனாயிற்றே ஓடக்காரன் என்னைக்காட்டிலும் சிறியவன்தானே அவனைக் காட்டிலும் பெரியவனாகிய நான் ஓடத்தில் உட்கார்ந்திருக்கும் போது ஓடம் ஏன் புறப்படக் கூடாது' என்று நினைத்தால் அது மாதிரி முட்டாள்தனம் வேறு கிடையாது. அம்மாதிரிதான் கல்வியும் ஒன்றுமே படிக்காது வயதிலே பெரியவர்கள் நன்றாகப் படித்த சிறியவனைப்பார்த்து அவன் சிறியவன் என்று உதாசீனம் செய்யக்கூடாது. அவன் இல்லாவிட்டால் ஆற்றைப்போன்ற பெரிய கஷ்டங்களைத் தாண்ட முடியாது. ஆகவே ஒருவன் வயதில் சிறியவனாயிருந்தாலும். பிறப்பினால் சிறியவனாயிருந்தாலும், அவன் கல்வியிலே மேம்பட்டவனாயிருந்தால் அவனை அவமதிக்காதே என்று நாலடியார் சொல்லி இருக்கிறார்.

ஆகாய ரகசியம்

கோபர் நிகஸ்

வான சாஸ்திரத்தை முதலில் புது முறையில ஆக்கியவர் கோபர் நிகஸ் என்பவர். இவர் முழுப் பெயர் நிகோலஸ் கோபர் நிகஸ் என்று பெயர். இவர் போலந்து தேசத்தில் தார்ன் என்ற இடத்தில் 1473-ம்வருஷம் பிறந்தார். இவர் ஒரு வியாபாரியின் புதல்வர். இவருடைய மாமா ஒரு பெரிய பாதிரி. அப்பாதிரியார் கோபர் நிகஸை படிக்கவைத்து முன்னுக்குக் கொண்டு வந்தார். இளம் பிராயம் முதலே பயம் என்பது சிறிதுகூடத் தெரியாமல் வளர்ந்தவர். பாதிரியாரோடுகூடவே ஒரு மாதா கோவிலில் அவர் வசித்து வந்தார். அவர் ஒவ்வொரு நாளும், நோயாளிகளுக்கும், ஏழைகளுக்கும் உதவி செய்வதும், வான ஆராய்ச்சி செய்வதுமாக காலங் கழித்து வந்தார். ஒவ்வொரு நாள் இரவும் ஆகாயத்தின் மந்திர ஜாலங்களைப் பார்த்துக்கொண்டே வந்தார். அதன் பயனாக 'சூரியன் பூமியைச் சுற்றவில்லை. பூமியும், மற்ற கிரகங்களுந்தான் சூரியனைச் சுற்றுகின்றன' என்று கண்டு பிடித்தார். ஆனால் அம்மாதிரி பூமி சூரியனைச் சுற்றுவதாக நினைப்பது மகா பாபமாக எண்ணப்பட்டது. ஏனெனில் கடவுள் பூமியை ஒரே இடத்தில் நிற்கச் செய்து மற்றவைகளை அதைச் சுற்றிவரும்படி செய்திருக்கிறார். ஆகையால் அவர் படைப்புக்கு விரோதமாக நினைப்பது தப்பு என்று சொன்னார்கள். அம்மாதிரி எண்ணத்தைத்தொலைக்க தன் வழியை நிரூபித்து ஒரு புத்தகம் எழுதினார். அவருக்கு எதிர்ப்பு இருக்கும் என்று தெரிந்தே அம்மாதிரி எழுதினார். ஆனால் அதை உலகத்திற்கு வெளியிடுவதற்குப் பயந்தான். அதனால் அதை தன் உயிர் போகும் தருணம்வரை வெளியிடவில்லை. உயிர் போவதற்கு சில நாட்களுக்கு முன்புதான் அதை அச்சிட்டு வெளியிட்டார். வான சாஸ்திரம் சம்பந்தமாக முதன் முதலாக அப்பொழுது தான் அச்சிட்ட புத்தகம் வெளி வந்தது. அதற்குக் கிடைத்த மரியாதையை அடுத்த இதழில் கவனிப்போம்.

இது என்ன?

முதன் முதலில் இங்குதான் கிரிக்கெட் போட்டியே ஆரம்பமாயிற்று. இங்கிலாந்திலுள்ள பிரபுக்கள் பொழுதுபோக்குக்காக கிரிக்கெட் ஆடிவருவதற்கு ஒரு இடம் வேண்டி இருந்தது. அதற்காக ஒரு பெரியமைதானத்தைச் சுற்றி வளைத்தார்கள்.



அவர்கள் பிரபுக்களல்லவா. ஆகவே ஒரு பெரிய அழகிய கட்டடத்தையும் கட்டி, ஒரு பெரிய வாயிலையும் அமைத்து விட்டார்கள். அதன் வாயிலுக்கு 'க்ரேஸ்' (காருண்யம்) என்று பெயர் கொடுத்தார்கள், அதைதான் மேலே காண்கிறோம்.

அக்பர் கேட்ட கதை

★ எம். எஸ். சுப்ரமண்ய ஐயர் ★

கருகிய முகம், உருகிய மனம், உடைந்த சிந்தை, உறக்கமிலாத் துடிப்பு-இக்கோலத்துடன் அக்பர் சக்கரவர்த்தி வீற்றிருக்கிறான் கிட்ட நெருங்கிப் பேச எல்லாரும் கூசுகின்றனர் அஞ்சுகின்றனர். அச்சமயத்தில் யார் அவனை அணுகுவது? காதல் மனைவியரும் கலங்கி நிற்கின்றனர்.

முடிவில் வீரபாலனுக்கு ஓலை போயிற்று அவன் உடனே ஓடோடி வந்தான்: அக்பரிருக்கும் அறையினுள்ளே புகுந்தான் மகா அக்பரா மாழ்கிக் கிடப்பது என்றான். மலை புரண்டு வந்தாலும், மயங்கலாமோ, என்றான்: பாதுஷா வாடிக் கிடத்தல் பெருமையோ என்றான். பேடியல்லவோ பேதுறுவான் என்றான்.

‘பேடி’ என்ற சொல் கேட்டதும், மகா அக்பர் சற்றே தன் முகத்தை நிமிர்த்தினான். கடைக்கண்ணால் வீரபாலனைப் பார்த்தான். மறுபடியும் தலையைத் தொங்கவிட்டுக்கொண்டான். அது கண்டதும், ‘வேந்தர் வேந்தனா கவலை கொள்வது? இது அழகாகுமா? ஆண்மைதான் ஆகுமா?’ என்றான் வீரபாலன்

“என்ன செய்வது? இருபத்தேழு வருஷமாகச் சண்டை நடக்கிறது! ஒரு சிற்றரசனை மடக்க என்னால் முடியவில்லை. பெருஞ் சேனையும் வீராதி வீரரும் நான் படைத்திருந்தும் என்ன? தலை வணங்கேன் என்கிறான் அவன் தனிச் சமர் செய்கிறான் இந் நிலையில் தலை யிறக்கங் கொள்ளாமல், நான் என் செய்வது? என்றான் அக்பர்.

‘சிற்றரசன் ஆனாலும் என்ன? அவனோ புருஷசிம்மம்! தவிர, ராஜசிம்மம்! பெயரோ பிரதாபசிம்மன் நாடு நகரங்களைப் புகழுக்கு விற்றவன் ஆருயிரையும் பெரு வீரத்துக்கு விற்பவன் அத்தகையவன் எங்ஙனம் பணிவான்? கல் தூண் வளையுமோ’ என்று பேசினான் வீரபாலன்

‘பிரதாபன் சுத்தவீரன்தான்! சந்தேகமில்லை நமது முதல் தளபதி மானசிம்மன் கூட அவன் முன்னே நிற்க முடியவில்லை! இது கிடக்கட்டும் ராஜபுத்திரரிலே மடங்காதவன் அவன் ஒருத்தனே. நம் பக்கமிருக்கும் ராஜபுத்திர வேந்தர் வீரர் அனைவரையும் அவன் ஏசிப் பேசுவது எனக்குச் சகிக்கவில்லை அன்னாரும் தடுமாறுகின்றனர்’ என்றான் அக்பர்.

“நம்மைச் சார்ந்து நிற்கும் ராஜபுத்திரர் அனைவரையும் அவன் ஏசிப் பேசும் பான்மை யாதோ? அடியேன் அறியலாமோ?” என்று வினவினான் அவ் விகடகவி ‘எல்லாரையும் நாய் என்று இழித்துப் பேசுகிறான்,’ என்றான் அக்பர்,

‘நாய் என்பதில் என்ன இழிவு இருக்கிறது? உயர்வன்றோ தொனிக்கிறது! நன்றியறிவிலே நனி சிறந்தோரை நாய்க்கு ஒப்பிடுவர் புலவர் எறிந்த வேல் மய்யதா வால் குழைக்கும் நாய் என்பது ஒரு புலவன் வாக்கு!’ என்றான் விகடகவி

‘பிரதாபன் என் பகைவனேயானாலும் என்ன? அவன் வெற்றுரை பேசான் புகழை இகழ் எனக் கூறான். ஏதோ மிக்க இழிவு இருக்கிறது இல்லையானால், மான சிம்மன் உள்படப் பலரும் அச்சொல் கேட்டுப் பரிதபிப்பரோ?’ என்று பாதுஷா சொல்லினான்

சிறிதுநேரம் வீரபாலன் வாய் திறக்கவில்லை ‘நீயும் கவிஞன் ஆயிற்றே நாயின் எக்குணத்தைக் கண்டு அப்பிரதாபன் இளிக்கிறான்? தெரியவேண்டும். விளங்க உரைக்க வேண்டும்’ என்று மகா அக்பர் வேண்டிக் கொண்டான்

‘நாயாய்ப் பிறந்திடில் நல்வேட்டையாடி, நரர்க்கு நயமே புரியும்! இட்டதைப் புசித்து, ஏவினை வேலை செய்யும்! எட்ட நில் என்றாலும், இஷ்டமுடன் நின்றிருக்கும் எச்சில் இலை போட்டாலும், நச்சி நின்று நக்கித் தின்னும் இவையெல்லாம் உயர் குணங்களே!’ என்று அடுக்கி வந்தான் வீரபாலன்.

‘நீ விகடகவி என்பதை அறிவேன். வீண் பேச்சு வேண்டாம். நாய்க் குணத்தின் உண்மைத் தன்மையை உணர்த்தவேண்டும்” என்று சற்றே உரக்கச் சொன்னான் அக்பர் சக்கரவர்த்தி

“உண்மையை உரைப்பதானாலும், சந்தர்ப்பம் அறிந்தே பேசவேண்டும்” என்றான் வீரபாலன் ‘நம் இருவரின் மனமும் ஒத்திருக்கையில், தயங்காமல் பேச என்ன தடை?’’ என்று மகா அக்பர் மொழிந்ததும், வீரபாலன் விளம்புவான்

‘பாதுஷாவே! பச்சையாகப் பேசுகிறேன் பதறாமல் கவனியுங்கள் நாய்கள் கூடி வாழா! நாய் மந்தை என்பது இடையாது ஒரு நாயைக் கண்டதும், மற்றொரு நாய் சீறி விழும். தாவிக்கடிக்கும், தாண்டிக் குதிக்கும்! எச்சில் இலையைக் கண்டுவிட்டால், நாய்கள் ஒன்றையொன்று துரத்தும், தான் மட்டுமே தின்னப் பார்க்கும்

“காகம் இருக்கிறது கூட்டமாக வாழும் பருக்கை கண்டால், தன் இனத்தையெல்லாம் கூவியழைக்கும். கலந்து உண்ணும், களிப்புக் கொள்ளும் கண்ணியமாக வாழும்

“நாய்கள் ஒன்றையொன்று கண்டதும், சீறிக் குரைக்கின்றன அல்லவா? அவ்வாறே, ரஜபுத்திர வீரரும் வேந்தரும் ஒருவர்மீதொருவர் சீறுவர், போருக்கு எழுவர் புலம்பி நிற்பர். ஒருவரோடு ஒருவர் ஒற்றுமை கொள்ளார். அவ்விதம் அன்னார் அடித்துக் கொண்டு நின்றதனால்தான், இத்தேசத்திலே இஸ்லாமிய ஆட்சி முளைக்கலாயிற்று.

“இன்றைய நிலைமைதான் என்ன? இனபிமானம் இருக்குமேல், பிரதாபன் தன்னந்தனியனாய் நிற்க, ஏனையோர் அதுகண்டு அபிமானமோ இரக்கமோ கொள்ளாமல், நமது அரசைச் சார்ந்து நிற்கின்றனர் அன்றோ? இனபிமானம் இல்லாதிருத்தல் நாய்க்குணந்தானே. வேறென்ன?

‘பகைவனைக் கும்பிட்டு வாழ்வோன் ஆண்மையாளன் ஆவனோ? சுதந்திரத்தைப் பறிகொடுப்போன் சூரன் ஆவனோ? சொந்தநாட்டில் பிறர்க்கடிமை செய்வோன் புருஷன் ஆவனோ? ஆருயிர் போயினும், மானமே பெரிதென்று நிற்போனே மகிமையாளன் அல்லவா?

‘நமது சபையில் கிடைக்கும் பட்டம், பதவி இவற்றைக்கண்டு ஏனைய ரஜபுத்திரர் சொக்கிப்போய் விட்டனர் அன்றோ? அன்னாரைக் கண்டு அப்பிரதாபன் ஆத்திரப்படாமல் என்ன செய்வான்! இழித்துப்பேசாமல் ஏற்றமாகப்பேச இடமுண்டோ? ரூபம் சுட்டால் மாறும், குணமோ செத்தாலும் மாறாது

‘இனி, ஒரு கதை கேளுங்கள், நாய்க்கு ஒரோரு சமயம் நல்லறிவு பிறக்கும். பூர்வஜன்ம வாசனையும் உதிக்கும், அப்போது இனி, எச்சில் இலைக்கு இச்சைவைக்கலாகாதுஎன்று முடிவு செய்துகொள்ளும் அவ்விதம் அறிவு தலைப்பட்ட நாயொன்று. பிரம்மதேவனை யடைந்தது. அவ

னிடம் இவ்வாறு வேண்டிக் கொண்டது:

“மனிதருக்கென்ன மமதை! பிறரை இலேசாகபேசுகையில், ‘நாயே’ என்று தான் கூறுகின்றனர். அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் யானைக்கு வெகு பிரியமாக அரிசியும் வெல்லமும் கரும்பும் கொணர்ந்து கொடுக்கின்றனர் மரியாதையுடன்.

‘ஒரு பருக்கைபோட்டாலும், மெய் குழைந்து வால் குழைத்து நின்று விசுவாசமாக வீட்டைக் காத்துவரும் எங்களை மானிடர் எவ்வாறு நடத்துகின்றனர்? பூனையைக் கண்டாலும் பாவம், அதன் குரலைக் கேட்டாலும் பாவம், என்றிருந்தும், உண்ணும் போது அதனை அருகில் வைத்துக் கொண்டு அன்னமும் பாலும் அன்புடன் ஊட்டுகின்றனர்.

“மனிதர் உண்ணும்போது. நாங்கள் அணுகிவிட்டால், சீ நாயே என்று விரட்டுகின்றனர் இது அடுக்குமா? எஜமானுக்கு வைத்திருக்கும் பாலை வெகு தந்திரமாகப் பூனை குடித்துவிட்டுக் கும்மாளம் போடும், நன்றி கெட்ட பூனைக்கு என்ன ஏற்றம்?

‘மனிதர் தின்று மிஞ்சியதை நக்கித் தின்னும் நாங்களோ எஜமான் வீட்டில் திருடன் புகுந்தால், குரைத்துக் குரைத்து, எஜமானை எழுப்புவோம். இன்றேல், திருடன்மீது தாவிப் பாய்ந்து, குத்துச் சதை பிடுங்கிக் கொக்கரிப்போம். அவனை வெருட்டியடிப்போம்

“பூனையின் வாலை ஒரு முறை தொட்டால், கையிலே நரம்புத் தளர்ச்சி உண்டாகுமே, அத்தகைய பூனை அடுப்பங்கரை வரையில் போகலாம். நாங்களோ வீட்டு வாசலிலே காத்துக் கிடக்கவேண்டும். தோ, தோ என்று கூப்பிட்டால் ஓரளவு உள்ளே போகலாம்

“இனி, இல்வாழ்க்கைக்கு உரிய ஒழுக்க நூல் எழுதிய ஆசுவலாயன முனிவர் சொன்னபடி. மானிடர் நடக்கின்றனரா? வீட்டுக்கு வெளியே நிற்கக்கூடிய விருந்தாளிகளான நாய், காகம், பதிதன் இவர்களுக்கு முதலிலே பலியிடவேண்டும் என்று அவர் சொல்லியிருக்கிறாரே, அதன் படி எங்களுக்கு முதலில் அன்னம் படைக்கின்றனரா, இல்லையே.

“அம்முனிவர் ரிக்வேத ஆசிரியர் அல்லவா? வெளியே நிற்கும் விருந்தினரைக் கூறுகையில், முதலாவதாக எங்களையே குறித்திருக்கிறார் அவ்வாறு நடந்தால், சாஸ்திரப்படி நடந்ததாக மானிடருக்கு நல்ல பெயர் கிட்டுமே தவிர, எங்களுக்கு முதலில் இட்டால், அந்த உணவிலே தீங்கேதும் இருந்தால் நாங்கள் தெரிவிப்போமே.

“உணவு விஷயத்தில்தான் இப்படி என்றால், எங்களுக்கு உரிமை ஏதேனும் உண்டா? குழந்தைகளும் எங்களைக் கண்டால், கல்லெடுத்து வீசுகின்றன. அல்லது கம்பெடுத்துச் சாடுகின்றன. உதாசீனமாவது இல்லா திருத்தல் கூடாதா? சீ நாயே என்று ஏசாமல் இருந்தால் போதுமே! உயிர்த் தொகுதிகளைப் படைக்கும் ஒப்பற்ற கடவுளே! கண் திறந்து பார்த்து, எங்கள் சிறுமையைப் போக்க வேண்டும்.

‘அவ்விதம் நாய் கூறி வந்ததையெல்லாம் நான்முகன் சாவதானமாகக் கேட்டுவந்தான்: கருணையும் பூத்தான். முடிவில், “சுவானமே: உன் குல மனைத்தையும் பொறுத்த விஷயத்தில், அவர்களையும்கலந்தாலோசித்துமுடிவு செய்ய வேண்டும். ஆகலின் அவர்களைக் கூட்டி வா. இன்றேல், பிரிவுக்கொரு பிரதிநிதி வீதம் இட்டு வா” என்றான்.

‘நல்லது என்று நாய் அவ்வாறே சென்றது வரும் வழியிலே நகரொன்று தென்பட்டது அங்கே ஒரு கலியாண வீட்டின் முன்னிலையில், தன் இனத்தார் பலரும் கூடியிருப்பதைக் கண்டது பலரும் ஓரிடத்தில் குழுமியிருக்கின்றனரே என்று களிப்பு மிகக் கொண்டது கொண்டதும், அவர்களை நோக்கி, “என் இனத்தாரே? நான்முகனிடம்சென்று வந்தேன் நம் மரபுக்குரிய இழிவை அவனிடம் முறையிட்டேன் இனி, நமக்கெல்லாம் நல்ல வழி பிறக்கும். நம் மானம் சூற்றில் பறக்காது நான் சொல்வதைக் கேளுங்கள்” என்று மேலும் ஏதோ சொல்லப்போகும் சமயம்.

அதுவரையில் கவனமாய்க் கேட்டு நின்ற நாய்களோ, ஒரு கூடை நிரம்ப எச்சில் இலை வந்து வீழ்ந்ததும், ஒன்றின்மேலொன்று விழுந்து கடித்து, எச்சில் இலையைத் தின்னத் தொடங்கின.

“நமது இனத்தாரின் குணத்தையறிந்தே நாமகள் அவ்வாறு சொன்னான் போலும் என்று அந்நாய் கருதி, இரக்கம் மிகுந்து ஏக்கங்கொண்டது அந்நிலையில், தனது கூட்டத்தார் நாவை நீட்டி நீட்டி நக்கி நக்கித் தின்னுவதைக்கண்டதும், அதற்கும் நாவிலே ஜலம் ஊறியது. அத்துடன் பசியும் வந்து கூடிக்கொண்டது.

“பசி வந்திடப் பத்தும் பறக்கும் அல்லவா? அந்நாயும் தனது இனத்துடன் சேர்ந்து, எச்சில் இலையைத் தின்னத்தொடங்கிற்று. நாயின் உண்மைக்குணம் இதுவேயாகும் சுயமரியாதை, இனநலம், பிறந்த பூமியின் நலம் இவற்றை எண்ணிப்பாராமல், சுய நலமே பெரிதெனக்கொண்டு, சீரழியும் மாந்தரை ‘நாயே!’ என்று நவில்வதில் என்ன குற்றமுண்டு?

‘ரஜபுத்திரர் என்போர் ஒருமனங்கொண்டு. முனைந்து நின்றால், நமது அரசு பெருகுமோ? நம்மிடம் அன்னார் சேவைசெய்து நிற்பரோ? பிரதாபன் தன்னந்தனியே நின்று தவிக்க நேருமோ? என்று கூறி முடித்தான் விகடகவி வீரபாலன்

அறிவு படைத்த அக்பரும் அது கேட்டு, ஆம் ஆம் என்று தலையசைத்தான்.

சக்தி ஆருடம்!

★

(பிரபல ஆருடசாலை)

பல மேன்மையான
நற்சாட்சிகள் பெற்றது.
1 வருஷ பலன் ரூ. 5.
ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 1.
சக்தி கவசம் ரூ. 7-8-0.
ஜாதகம் கணிக்க ரூ. 2.
வி. பி. பி தனி
ஜாதகம் OR கடிதம் எழுதும்
நேரம் தேவை.

சக்தி ஹோம்,
விருத்தாசலம். P. O (S. I.)

சேலம்
மூன்று தாமரை
பீடிகளை உபயோகித்து
சந்தோஷமடையுங்கள்
Estd 19[illegible]0
Rgd. No. 2221.
Prop: S அஹமத் உசேன்.
கோட்டை சேலம் S. I. R.



ஸங்கீத பாரிஜாதம்

...பண்டித கிருஷ்ணமாச்சார்யா...

173. रिगधानां तथा नीनां पहीनासु विभेदतः ।
योगे तत्र भिदा ज्ञेया रसो वह्निः शरश्शशी ॥

ரிகதாநாம் ததா நீநாம்
3 4 2
பஹீநாஸு விபேதத : —
4 3
யோகே தத்ர பிதா ஞேயா
3 4 3
ரஸோ வஹ்நி: சர: சசீ ||

விக்ருதஸ்வரங்களான ரிஷப-காந்தார-தைவத நிஷாதங்களின் சேர்க்கையால் ஏற்படும் பஞ்சமமில்லாத மூர்ச்சனைகளின் பேதங்கள் 1536.

174. रिमधानां तथा नीनां पहीनासु विभेदतः ।
योगे भेदास्तथा ज्ञेयाः सागरश्च रसो वसुः ॥

ரிமதாநாம் ததா நீநாம்
4 2
பஹீநாஸு விபேதத :।
4 3
யோகே பேதாஸ்ததா ஞேயா :
3 4 3 2
ஸாகரஸ்ச ரஸோ வஸு : ||
3

விக்ருதஸ்வரங்களான ரிஷப-மத்யம-தைவத நிஷாதங்களின் சேர்க்கையால் ஏற்படும் பஞ்சமமில்லாத மூர்ச்சனைகளின் பேதங்கள் 864.

175. गमधानां तथा नीनां पहीनासु विभेदतः ।
योगे तत्र भिदा ज्ञेयाः शून्यं वेदौ शशी पुनः ॥

கமதா நாம் ததா நீனும்
4 2
பஹீனுஸு விபேதத :।
4 3
யோகே தத்ர பிதா ஞேயா :
3 4 3
சூன்யம் வேதௌ சசீ புன : ||
3

விக்ருதஸ்வரங்களான காந்தாரங்கள், மத்யமங்கள், தைவதங்கள், நிஷாதங்கள் இவைகளினுல் ஏற்படுவதும் பஞ்சமமில்லாததுமான மூர்ச்சனைகளின் எண்ணிக்கை 1440 ஆகும்.

176. इति भेदाः पहीनानां स्युरसौ पावको रसः ।

இதி பேதா : ப-ஹீ நாநாம்
ஸ்யூரஸௌ பாவகோ ரஸ :।

இவ்வாறு பஞ்சமமில்லாததான ஷாடவ-விக்ருத மூர்ச்சனைகளின் பேதங்கள் மொத்தம் 6366 ஆகும்

177. रिगानां च धनीनां च महीनासु विभेदतः ।
इति योगे भिदा ज्ञेयाः रसो वह्निः शरः शशी ॥

ரிகாநாம் ச தநீநாம் ச
3 4
மஹீநாஸு விபேதத :।
4 3
இதி யோகே பிதா ஞேயா :
3 4 3
ரஸோ வஹ்நி : சர : சசீ ||

விக்ருதங்களான ரி-க-த-நி இவைகளின் சேர்க்கையால் ஏற்படுவதும், மத்தியமில்லாத மூர்ச்சனைகளில் உண்டாவதுமான பேதங்கள் 1536.

178. रिमधानां तथा नीनां गहीनासु विभेदतः ।
इति योगे भिदा ज्ञेयाः सागरश्च रसो वसुः ॥

ரிமதாநாம் ததா நீநாம்
4 2
க-ஹீநாஸு விபேதத : |
3 4 3
இதி யோகே பிதா ஞேயா :
3 4 3
ஸாகரஸ்ச ரஸோவஸு ;।
3

ரி-ம-த-நி இவைகளின் விகிருத பேதங்களால் ஏற்படும் காந்தாரமில்லாத அத்தகைய மூர்ச்சனைகள் 864

179. गमधानां तथा नीनां रिहीनासु विभेदनः ।
इति योगे भिदां ज्ञेयाः खञ्च वेदौ शशी पुनः ॥

கமதாநாம் ததா நீநாம்
3 4 2
ரி-ஹீநாஸு விபேதத : |
4 3

இதி யோகே பிதா ஞேடா :
கஞ்ச வேதெள சசீ புந :॥

ரிஷபமில்லாத மூர்ச்சனைகளில் க-ம-த-நி இவைகளின் விக்ருதங்களால் ஏற்படும் அத்தகைய பேதங்கள் 1440.

180. रि-म-ध-निषादानां योगे भेदा उदीरिताः ।
खरसमुनि बाणैश्च षहीनासु मुनीश्वरैः ॥

ரிகம-த-நிஷாதாநாம்
யோகே பேதா உதீரிதா : ।
கர ஸமுநி பாணைஸ்ச
ப-ஹீநாஸு முநீஸ்வரை : ॥

விக்ருதங்களான ரிஷப-காந்தார-மத்யம-தைவத-நிஷாதங்களின் சேர்க்கையால் ஏற்படுகின்றதும், பஞ்சமமில்லாததுமான ஷாடவ-விக்ருத மூர்ச்சனைகளின் பேதங்கள் 5760

181. मूर्छितानां प्रभेदानां षाडवानां च सर्वशः ।
खबाण शून्य चन्द्रैश्च पावकेन मितिर्भवेत् ॥

மூர்ச்சனுனும் ப்ரபேதாநாம்
ஷாடவாநாம் ச ஸர்வச : ॥
கபாண சூன்ய சந்த்ரைஸ்ச
பாவகேந மிதிர் பவேத் ॥

சுத்தங்களும் விக்ருதங்களுமான ஷாடவமூர்ச்சனைகளின் மொத்த எண்ணிக்கை 31050 ஆகும்.

182. यत्र स्वरेण विहीनायां मूर्छनायां पृथक् पृथक् ।
तत्र स्वरेणैव हीनाः स्युः प्रस्ताराः षाडवाः क्रमात् ॥

யத் ஸ்வரேண விஹீநா யாம்
மூர்ச்சனு யாம்ப்ருதக் ப்ருதக் ॥
தத் ஸ்வரேணைவ ஹீநா : ஸ்யு :
ப்ரஸ்தாரா : ஷாடவா : க்ரமாத் ॥

'ஷாடவ மூர்ச்சனை'யென்பது ஸப்தஸ்வரங்களுள் ஏதாவது ஒரு ஸ்வரத்தைவிட்டு மற்றுள்ள ஆறு ஸ்வரங்களால் ஏற்படுவதாகும். எந்த எந்த ஸ்வரத்தை விடுத்து ஷாடவ மூர்ச்சனைகள் ஏற்படுகின்றனவோ, அதுபோல அந்த மூர்ச்சனைகளில் வரும் ஷாடவப்ரஸ்தாரங்களும் முறையே அந்த அந்தஸ்வரங்கள் இல்லாமலேயே ஏற்படுகின்றன.

183. सप्तशत्या सविंशत्या गुणितानां मिति र्भवेत् ।
शून्यत्रयं रसो नेत्रं सप्त वह्निरिति क्रमात् ॥

ஸப்தசத்யா ஸவிம்சத்யா
குணிதாநாம் மிதிர்பவேத் ।
சூந்யத்ரயம் ரஸோ நேத்ரம்
ஸப்த வஹ்நிரிதி க்ரமாத் ॥

ஷாடவப்ரஸ்தாரங்கள் 720. கீழ் கூறப்பட்ட ஷாடவ மூர்ச்சனைகள் 31050-ஐ 720 எண்ணல் பெருக்கி, 6-என்ற எண்ணல் வகுக்கப்படின் ஏற்படும் எண்ணிக்கை 3726000 ஆகும்.

184. औडुवा णथ कम्प्यन्ते शुद्धेषु विकृतेष्वपि ।
द्वयोर्द्वयोः परित्यागात् क्रमाद्भेदा मनीषिणः ॥

185. औडवानां विशुद्धानामवदन् पञ्चसप्ततिम् ।

ஔடுவா அத கத்யந்தே
சுத்தேஷு விக்ருதேஷ்வபி ।
த்வயோர்த்வயோ : பரித்யாகாத்
க்ரமாத் பேதா மநீஷிண : ॥
ஔடவாநாம் விசுத்தா
நாமவதந் பஞ்ச ஸப்ததிம்

(ஔடவ-மூர்ச்சனைகள்)

இனி ஔடவ மூர்ச்சனைகள் கூறப்படுகின்றன. ஸப்தஸ்வரங்களுள் ஏதாவது இரு ஸ்வரங்கள் விட்டு உண்டாகும் மூர்ச்சனை 'ஔடவ மூர்ச்சனை' யெனப்படும். அவற்றுள் சுத்தஸ்வரங்களால் ஏற்படும் ஔடவ மூர்ச்சனையின் பேதங்கள் (மூன்று கிராமங்களிலும் சேர்ந்து) எழுபத்தைந்து (75) என்று அறிஞா கருதுகின்றனா.

186. रिभेदा स्तत्र संगृह्य द्वाभ्यां विवर्जनात् ।
भेदानापि विजानीयात् पञ्चाशदुत्तरं शतम् ॥

ரிபேதாஸ்தத்ர ஸம்க்ருஹ்ய
த்வாப்யாம் த்வாப்யாம் விவர்ஜநாத் ।
பேதாநபி விஜாநீயாத்
பஞ்சாசதுத்தரம் சதம் ॥

ஔடவங்களுள் விக்ருதங்களான ரிஷபஸ்வரங்கள் சேர்ந்து ஏற்படும் மூர்ச்சனு பேதங்கள் 150 என்று அறிக.

தம்பியின் கலியாணம்

-ஏகோ-

தாமரைக் குளம் என்பது அத் தடாகத்தின் பெயர். ஆனால் நாம் எதிர்பார்க்கக்கூடியபடி அதில் மருந்துக்குக்கூட ஒரு தாமரைத்தண்டு காணமுடியாது நீர்ப்பரப்பின் மீது திரைதிரையாய்ப் படர்ந்திருக்கும் பச்சைப் பாசி கண்ணை உறுத்தும் காக்ஷியளித்தது. பாசிப்படலத்தைக் கிழித்துக்கொண்டு நடுநடுவே தலையில் பாதிமட்டும் வெளியே தெரியும்படியாக நாலைந்து எருமைகள் மோன நிஷ்டையில் ஆழ்ந்திருந்தன அழுகிய தாவரங்களினின்று சாதாரணமாய் வீசும் துர்நாற்றம் அக்குளக்கரையிலும் வியாபித்திருந்தது. அருகில் அடர்ந்து வளர்ந்திருந்த ஆலமரத்தில் வசித்த பக்ஷிகளின் விதவிதமான சப்த ஜாலங்கள் காதுக்கினிமையாய் ஒலித்து அந்த துர்க்கந்தத்தினால் ஏற்படக்கூடிய அருவருப்பைச் சமனம் செய்ய முயன்றுகொண்டிருந்தன.

அல்லிப்பாடி வாசிகளுக்கு அத் தாமரைக்குளத்தின் நீர்தான் குடிஜலம் அதைவிட்டால் அவர்களுக்கு வேறு கதியில்லை ஊரில் இருந்த நாலைந்து கிணறுகளும் உப்புநீர்க் கிணறுகள், எனவே குளத்துத் தண்ணீரை வேண்டியமட்டும் மொண்டு உபயோகித்துக்கொண்டார்கள். அதில்படர்ந்து கிடந்த பாசியை அகற்றிச் சுத்தம் செய்யவோ, அந்த எருமை மாடுகளை விரட்டியடிக்கவோ போதிய அவகாசம் அவர்களுக்கு இல்லை சுகாதார விதிகளைப்பற்றி அவர்களுக்கு அவ்வளவு தூரம் தெரியவும் தெரியாது

அல்லிப்பாடி சிறிய ஊர். ஆனால் அதற்கும் ஒரு கிராம முன்சிப், கர்ணம் தலையாரி ஆகிய நிர்வாகிகள் இருந்தனர். அந்த எல்லைக்குள் அவர்களது ஆக்ஞா சக்கரம் சம்பிரமமாய்ச் சுழன்று வந்தது. சில சமயங்களில் அது எல்லையை மீறி அடுத்திருந்த குருவிப்பாடி வட்டாரத்திற்குள் பிரவேசித்து விடுவதும் உண்டு அதன் பலனாக அவ்வூர் நிர்வாகிகள் தடியையெடுத்டிக்கொண்டு கிளம்புவதும் இருதரப்பிலும் மண்டைகள் நொறுங்குவதும் சகஜம் எந்த நெருக்கடியிலும் கோர்ட், கேஸ் என்று காசைச் செலவழித்துக்கொண்டு. கிளம்பாமல் தங்கள் பூசல்களைத் தங்களுக்குள்ளேயே தீர்த்துக்கொள்ளும் அவர்களது புத்திசாலித்தனத்துக்கு எல்லாருமே ஒரு குரலில் 'சபாஷ் போடவேண்டியது தான்.

அல்லிப்பாடின் தலையாரி முத்துத் தேவன் கிராம முன்சீப் ஐயாமுதற்கொண்டு மதிப்புக் கொடுக்கவேண்டிய அம்சங்கள் இரண்டு அவனிடமிருந்தன ஒன்று அவன் முகத்திலிருந்த மீசை; மற்றது அவன் கையிலிருந்த கழி முகத்தைவிட்டு மீசை எப்படிப் பிரியாமலிருந்ததோ, அதே மாதிரி அந்தச் சிலம்பக்கழியும் அவன் கையிலிருந்து பிரிவதில்லை தேவனுக்குக் கோபம்வந்தால் மீசை துடிக்கும். அவன் எங்கிருந்தாலும் கழியும் சுழலத் தொடங்கிவிடும் அச்சமயம் எதிர்ப்பட்டவர்களைக் கடவுள்தான் காப்பாற்றவேண்டும்.

சின்னப்பன் முத்துத் தேவனின் தம்பி மூன்று வருஷ ராணுவ சேவைக்குப்பின் ஊர் திரும்பியிருந்தான். போர்முனையில் எத்தனையோ தாக்குதல்களைச் செய்திருந்த அவன் ஊருக்குவந்த மறுநாளே தாமரைக் குளத்தின்மீது ஒரு தாக்குதலைத் தன்னந்தனியாகத் தொடங்கினான் நிம்மதியாய் நீரில் மூழ்கிக்கிடந்த மகிஷங்களை வாலைப்பிடித்து முறுக்கி விரட்டினான். அடுத்தபடி ஆண்டாண்டுகளாய்ப் படர்ந்திருந்த பாசியை அகற்றுவதில் முனைந்தான் அது எருமைமாட்டை விரட்டியது போல் அவ்வளவு சாதாரணமான காரியமாயில்லை. வெட்ட வெட்ட முளைத்த ராவணன் தலைபோல் அது மேலும் மேலும் வெளிக்கிளம்பிக்கொண்டேயிருந்தது எனினும் முயற்சியைக் கைவிடாமல் அல்லும் பகலும் குளத்தில்கிடந்து ஊறிய சின்னப்பனை ஊரெல்லாம் வேடிக்கை பார்த்தது குளக்கரையில் கூட்டத்தைப் பார்த்துவிட்டு யாராவது மூழ்கி இறந்துவிட்டார்களோ என விழுந்தடித்து ஓடிவந்த தலையாரி முத்துத் தேவனுக்கு, தன் தம்பியின் திருவிளையாடல்களொன்றும் புரியவில்லை சுத்தத்தையும் சுகாதாரத்தையும் பற்றிப் பல ஆங்கில வார்த்தைகளைக் கலந்து சின்னப்பன் செய்த குட்டிப் பிரசங்கத்தைக்கேட்டு அவனும் மலைத்துப்போய் நின்றான். தம்பி ரொம்பப் படித்து விஷயம்தெரிந்துகொண்டிருக்கிறானென்று அவனுக்கு உள்ளூறப்பெருமை

'ஏலே. உன்னாலே தனியா இந்த வேலையைச் செய்யமுடியாது நான் போயி அந்த மைதானத்துலே மாடு மேய்க்கறபசங்களையெல்லாம் இங்கே வெறட்டறேன். எல்லாருமாய்ச் சேர்ந்து செய்யுங்க' என்றான் முத்துத் தேவன்.

அதெல்லாம் வேண்டாம் அண்ணாச்சி. அவுங்க ஒண்ணும் பிரயோசனமில்லே. இதுக்கு நான்தான் சரி என்று தம்பியின் பதில் வந்தது.

'சரி உன்னிஷ்டம்போல செய்யி. ஆனா ஒண்ணு...சாயங்காலம் நம்ப முனிசீப் ஐயா இந்தப் பக்கமா வருவாரு அப்பொ நீ இங்கேயே இரு. நீ என்ன பண்ணிக்கிட்டிருக்கேன்னு கேட்டாருன்னா நீ அவரோடே இங்கிலீசிலேயே பேசிடணும்......ஆமாம். என்று தம்பியின் காதோடு உபதேசம் செய்துவிட்டு தமையன் அகன்றான். ஆங்கிலம் தெரியாத 'யசமானை'த் தன் தம்பியின் மூலம் அப்படித் திணறச் செய்துவிடவேண்டுமென்பது தலையாரியின் மனோபீஷ்டம்.

முத்துத் தேவனின் தலையைக் கண்டதுமே கலையத் தொடங்கியிருந்த கூட்டத்தினரில் இப்போது யாரும் பாக்கியில்லை சின்னப்பன் கரைமேலேறி, தன் உடுப்புகளிடையேயிருந்து ஒரு கைக்கடிகாரத்தை எடுத்து மணி பார்த்தான். அவன் முகத்தில் சிறிது கவலையின் சாயை படர்ந்தது "மணி பத்துக்கு மேலாகிவிட்டதே. வழக்கமாக ஒன்பது மணிக்கெல்லாம் வந்து விடும் அவள் இன்று ஏனோ...?" என்று சிந்தித்தான்.

ஆம்! அந்த 'அவள்' யாரென்பது இன்னும் சின்னப்பனுக்குத் தெரியாது அவன் பத்துப் பதினைந்து நாட்களாகப் பாசியைக் குடைந்துகொண்டுதானிருக்கிறான். அவளுடன் ஒரு வார்த்தை பேசப் போதிய தைரியம் அவனுக்கேற்படவில்லை. சரியாக ஒன்பது மணிக்கு அவள் குளத்துக்கு வருவாள் அவளது இடுப்பிலிருக்கும் பித்தளைக் குடத்தின்மீது

சூரியனின் ஒளிபட்டுப் பிரதி பலிக்கும். கூசும் கண்களால் அம் மதி வதனத்தை ஏறிட்டு நோக்குவான். அச்சமயம் குளத்தின் பக்கம் வேறு யாரும் இருப்பதில்லை. அழகும் இளமையும் வழியும் அவ்வங்கங்களைத் தன் பார்வையால் பருகி, தேன் குடித்த நரிபோல் இடுப்பாழம் தண்ணீரில் நிற்பான் சின்னப்பன். 'அடடா! இப்படி அழுக்குத் தண்ணீரில் பன்றியைப்போல் புரண்டு கொண்டிருக்கிறேமே! அவள் நம்மைப்பற்றி என்ன நினைத்துக்கொள்வாளோ?' என்ற கவலை பிறகு தான் ஏற்படும். அவன் குளக் கரையில் வீசி எறிந்திருந்த பாசிக்குவியங்களில் கால் வழுக்கி விடாவண்ணம் சர்வ ஜாக்ரதையாக அவள் சென்று தூரத்தில் மறையுமட்டும் சின்னப்பன் கண்ணிமைப்பதில்லை.

பதின்மூன்ருந் தடவையாக அவன் கடிகாரத்தைப் பார்த்தான். மணி பத்தரை. தூரத்தில் அவள் வருவது தெரிந்தது. பரபரப்புடன் தண்ணீரில் குதித்து வெகு மும்மரமாய் வேலை செய்யத் தொடங்கிவிட்டான். தன்னைப் பார்ப்பதற்காகத் தான் அவன் காத்திருக்கிருனென்று அந்தப் பெண் எண்ணிக் கொள்ளக்கூடாதல்லவா? இந்த வரட்டு ஜம்பம் ஒரு புறம் அவனை ஆட்டி வைத்தது. மூன்று வருஷத்துக்கு முன்னிருந்த வெறும் முரட்டுச் சின்னப்பனல்லவே அவன்?

அவள் குளத்தை நெருங்கினுள் சின்னப்பனின் மனம் ஏனே படபட வென்றடித்துக்கொண்டது வெகு நாட்களாக அவளைக் கேட்கவேண்டுமென்று துடித்துக் கொண்டிருந்த அந்தக் கேள்வியை இன்று கேட்டு விடலாமா? ஒரு முறை அக்கம் பக்கம் பார்த்தான். யாருமில்லை பாசியகற்றும் பணியில் உள்ளூர் மாட்டுக்காரப் பையன்களின் உதவி வலுவில் கிடைப்பதாயிருந்தும் அதை அவன் ஏற்றுக்கொள்ளாததற்குத் தகுந்த காரணமில்லாமலில்லை ஆம்! இம் மாதிரி விஷயங்களில் தனிமை மிக முக்யம் அல்லிப்பாடியைப்போன்ற அநாகரிக ஊர்களில் அது இன்றியமையாததும் கூட.

வெள்ளிச் சிலம்பணிந்த அவ்விரு பாதங்கள் தண்ணீரை ஸ்பரிசித்தன. அந்த ஸ்பரிசம் நீரில் அலையெழச் செய்ததேபோல் அவளது கடைக்கண் நோக்கு சின்னப்பனின் உள்ளத்தில் காதல் அலைகளை எழுப்பியது பித்தளைக்குடத்தினுல் தண்ணீரை அப்படியுமிப்படியும் அலக்கிவிட்டு அதைக் கவிழ்த்தாள் அவள் குடுகுடுவென்ற ஓசையுடன் பாத்திரத்தில் நீர் நிரம்பியது

ஆயிற்று மறு நிமிஷம் அவள் இளம்பிவிடுவாள். உலர்ந்து ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டிருந்த உதடுகளை நனைத்துக்கொண்டான் சின்னப்பன் எப்படியோ துணிச்சலை வரவித்துக்கொண்டு கேட்டுவிட்டான்.

"ஏனம்மா நீ யார் வீட்டுப் பெண்?'

மதியை மறைக்கும் மேகப்படலம் போல் அவளது வதனத்தில் நாணம் படர்ந்தது. அல்ல. அது நாணம் மட்டுமல்ல ஆழங்காண முடியாத ஓர் துயரத்தின் சாயையும் அதில் கலந்து நின்றது சின்னப்பன் கவனித்தான் 'ஏனடா கேட்டோம்?' என்றாகியது அவனுக்கு ஆனல் அவள் பதில் சொல்லாமல் போய்விட வில்லை.

"நான் காரைவீட்டுத் தேவரின் மருமகள்' என்ருள்

காரை வீட்டுக் கருப்பையாவைப் பற்றி சின்னப்பனுக்கு நன்ருய்த்தெரியும், அவன் ஒரு பேராசைப் பேய். பணத்தின் பொருட்டாக எதையும் செய்யத் தயங்கமாட்டான் அவனுக்கு மருமகளாய்ப் பிறந்த துர்ப்பாக்யத்தையெண்ணி அவளிடம் சின்னப்பனுக்குப் பரிதாபம் ஏற்பட்டது.

"ஓ! மூன்று வருஷத்துக்கு முன்னல் நீ இந்த ஊரிலே இருந்ததில்லைபோலிருக்கிறதே' என்ருன் அவன் யோசனை செய்யும் பாவனையாக. அவனையறியாமல் பேச்சு வளர்ந்தது

"இல்லை போன வருஷம் எங்கள் அப்பா இறந்துபோன பின்தான் நானும் அம்மாவும் இங்கே வந்து மாமா வீட்டோடு இருக்கிருேம்." அதைச் சொல்லும்போது அவள் கண்கள் கலங்கின. அவளது துக்கத்தின் காரணத்தைச் சின்னப்பனுல் ஒருவாறு புரிந்துகொள்ள முடிந்தது. கருப்பை யாவின் ஆதரவில். அதுவும் அவனுடன் ஒரே கூரையின் கீழ் வசிக்கும் எந்த ஜீவனும் சந்தோஷமாக இருக்க முடியாது. அருமைத் தந்தையைப் பிரிந்த துயரம் ஆறு முன்பே இந்தச் சோதனையும் ஏற்பட்டால்...? மௌனமாக அவளை ஒரு நிமிஷம் நோக்கினுன். அந்தப் பார்வையில் எத்தனையோ விதமான உணர்ச்சிகள். இடுப்பில் குடத்துடன் தலை குனிந்து நின்ற அப்பெண் அவன் கண்களுக்கு ஓர் தேவதைபோல் தோன்றினுள்

'அவன் கேட்க எண்ணியது ஒரு கேள்வி அதைக் கேட்டாயிற்று. மற்ருென்றும் கேட்டுவிட்டான். இன்னும் ஒன்றே ஒன்று கேட்பதில் என்ன குற்றம்?" உன் பெயரென்ன அம்மா? என்ருன் சின்னப்பன்.

பதில் ஒரு கணம் தாமதித்து வந்தது. 'சௌந்திரம்! என்ன பொருத்தமான பெயர்!

"நான் போகிறேன் நேரமானுல் மாமா திட்டுவார்." என்று சொல்லிக் கொண்டே திரும்பிப் படிகளிலேறினுள் அவள். எதையோ பறிகொடுத்தவன் போல், பிளந்த வாயுடன் அவள் செல்லும் திக்கை நோக்கியபடி நின்ருன் சின்னப்பன்.

'மாமா திட்டுவார்' இந்த எழில் வடிவின் முன்னால் நிற்கக்கூட யோக்யதையற்ற கருப்பையாப் பயலுக்கு அவளைத் திட்டுவதற்கு நாக்குப் புரளுமா? அதை அப்படியே அறுத்தெறிந்து விட்டால்தான் என்ன தோஷம்? "கருப்பையா! உன் அதிகாரமெல்லாம் இன்னும் எத்தனை நாளைக்கு? யாராவது ஒருத்தன் வந்து அவன் கையைப் பிடிக்கிற வரையில்தானே?" என்று கறுவிய அவன் மனதில் அந்த 'யாராவது ஒருத்தன்' தானாகவே ஏன் இருக்கக்கூடாது என்ற சபலமும் தட்டியது.

அவள் நின்றுகொண்டிருந்த படிக்கட்டின்மீது செக்கச் செவேலென்ற வஸ்து ஒன்று கிடந்தது. ஓடிச் சென்று அதைப் பொறுக்கினான் சின்னப்பன். அது ஓர் காட்டு ரோஜா மலர். மங்கையின் கூந்தலினின்றும் நழுவிய அம்மலரை இதயத்தோடணைத்தவாறு கரையேறினான். காதல் வெறி அவனை ஆட்கொண்டு விட்டது.

அப்புறம் எத்தனையோ தினங்கள் தாமரைக் குளத்தில் அவளைச் சந்தித்தான் அவனது காதலை சௌந்திரம் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டாள். அவள் கண்கலங்கி மனந்தளர்ந்து வந்த நாட்களிலெல்லாம் சின்னப்பனின் ஆர்வமொழிகள் அந்நெஞ்சில் நம்பிக்கையூட்டின ஊரில் அது அறுவடைக் காலம் இவாகளது காதலின் வளர்ச்சியைக் கவனித்து வதந்திகள் பரப்புவதற்கு யாருக்கும் ஒழிவில்லாதிருந்தது.

• • • •

தலையாரி முத்துத்தேவன் முண்டாசை வரிந்துகட்டிக்கொண்டு வெள்ளிப்பூண் போட்ட அந்தக் கழியைக் கையிலெடுத்துக்கொண்டான். அவனது அலங்காரம் பூர்த்தியாகி விட்டது

முத்துத் தேவனுக்கு இப்போது நாற்பத்தைந்து வயதாகிறது. அவனது மீசை நரைக்காத காரணத்தால் ஆசையும் நரைக்கவில்லை இரண்டு மனைவிகள் பிள்ளையில்லாமல் இறந்துவிட்டபின் இன்று மூன்றும் முறையாக யாருக்கோ பரிசம் போடக் கிளம்பிக்கொண்டிருந்தான் ஒரு மணி நேர அலங்கார வேலையின் பயனாக மயானகாண்டத்து அரிச்சந்திரன் போல் காக்ஷியளித்த அண்ணனை வியப்புடன் பார்த்தவாறு ஒரு மூலையில் நின்றான் சின்னப்பன்

"ஏலே சின்னப்பா! பரிசம்போடப் போறேன். நீயும் வாரியாடா?" என்றழைத்தான் முத்து.

'எந்த ஊர்ப்பொண்ணுஅண்ணே? என்று தம்பி கேட்டான்,

"எல்லாம் நம்ப ஊர் தாண்டா... நம்ப 'காரை வீட்டுக் கருப்பையா இல்லே?' அவன் மருமவ ஒரு குட்டி இருக்கா......என்னடாலே இப்பிடி முளிக்கிறே?

ஆம்! சின்னப்பன் விழித்தான் அவன் விழிகள் பிதுங்கி வெளியே வந்துகொண்டிருந்தன மூச்சே நின்றுவிடும்போலாயிற்று. அண்ணனின் செய்தி அவன் தலையில் இடிவிழுந்த மாதிரி இருந்தது. தம்பியை ஒரு அதட்டுப்போட்டுவிட்டு மேலே சொல்லிக்கொண்டு போனான் முத்துத்தேவன்.

"அவளை முந்தாநேத்துத்தான் பாத்தேன். பொண்ணு சாதாரணமாய் ஊட்டைவிட்டுக் கிளம்பறதேயில்லை போலுக்கு. இல்லாட்டி ஏளுமாசமா அல்லிப்பாடியிலே இருந்துக்கிட்டு எங்கண்ணுலே படாமேயிருககமுடியுமா? பொண்ணு எப்படி இருக்கா தெரியுமா! கிளின்னு கிளிதான் போ. தேவன் நாக்கைச் சப்புக்கொட்டிக் கொண்டு தம்பியைப் பார்த்துக் கண்சிமிட்டினான் அவனது பிராணுவஸ்தையைப்பற்றி அண்ணனுக்கென்ன தெரியும்?

"நேத்துக் காலையிலே எளுந்திரிச்சதே கருப்பையா ஊட்டுக்குத்தான் போனேன். பொண்ணைக் கட்டிக் குடுக்கிறயாடான்னேன். தலையாரி முத்துத்தேவன் வந்து கேக்கிறச்சே எவன் முடியாதுன்னு சொல்லுவான்? அதுவும் ரொக்கமா எண்ணூறு கையிலே கிடைக்குமின்னா கருப்பையா விடுவானா? அவ்வளவுதான். காரியம் தீருமானமாயிப் போச்சு உற்சாகத்துடன் தடியினால் தரையில் ஓங்கித்தட்டினான் தேவன் அல்லிப்பாடி வட்டாரத்திற்குத் தான் ஒரு பெரிய மனிதன். எண்ணூறு ரூபாய் கொடுத்தாவது தான் விரும்பிய வஸ்துவை வாங்கும்சக்தி தனக்கிருக்கிறது' என்ற பெருமை அவனது ஒவ்வொரு வார்த்தையிலும்தொனித்தது.

சின்னப்பன் பேசவும் நாவெழாமல் தயங்கி நின்றான் அண்ணனிடம் இயல்பாக இருந்த பக்தியும் மரியாதையும் அவனது உணர்ச்சிப் பெருக்கைத் தடைசெய்தன

'என்னடா நிக்கிறே? உன் 'மிலிடேரி சட்டையையும் நிஜாரையும் மாட்டிக்கிட்டு கிளம்புடா பூடுஸை' மறந்துடாதே என்று கத்தினான் அண்ணன், இயந்திரம்போல் அவ்வுடுப்புகளை அணிந்துகொண்டான்

சின்னப்பன் தன் ஆடைகள் வைத்திருந்த பெட்டியை அவன் திறக்கும்போது அதிலிருந்த ஓர் கரிய வஸ்துவும் அவன் நிஜார்ப்பைகுள் சென்றது. என்ன செய்கிறோமென்று தெரியாமலே அதை எடுத்துக்கொண்டு விட்டான் அந்தக் குழம்பிய மனோ நிலையில் அவனுக்கு ஒன்றும் புரியாதது இயற்கைதான்.

சில நிமிஷங்களுக்கெல்லாம் அண்ணனும் தம்பியும் கருப்பையா வீட்டு வாசலில் நின்றார்கள் குடிப்பதற்கு 'ஜில்'லென்று குளிர்ந்த ஜலத்துடன் அவர்களை அவன் வரவேற்றான் பரிசம்போட வருகிற பெரிய மனிதர்கள் கூட கஞ்சக் கருப்பையாவிடம் இதற்கு மேற்பட்ட விருந்தை எதிர்பார்க்க நியாயமில்லை பூர்வாங்கமான பேச்சுவார்த்தைகள் நடந்து முடிந்தன

'பொண்ணைக் கொஞ்சம் வரச்சொல்லுங்க நம்ப தம்பிக்குப் பார்க்கணுமாம்.' என்று வெகு கப்பீரமாய் உத்தரவிட்டான் முத்துத்தேவன். எண்ணூறு ரூபாய் ஏற்கெனவே கைமாறியிருந்தது பெண்ணின்மேல் தன் பாத்தியதையை ஸ்திரப்படுத்திக் கொண்டுவிட்ட அவன் அவளை எதிரில் வந்து ஆடக்கூடச் சொல்வான் போலிருந்தது.

'அதுக்கென்னங்க மாப்புள்ளே இஷ்டம்...' என்று கருப்பையா குழைந்தான் சந்தையில் கடா விற்பவனுக்குக்கூட அவ்வளவு நிச்சிந்தை இருக்காது.

பெண் வந்தாள் சௌந்திரம் தான் அவள் சின்னப்பனை அவள் இங்கே எதிர்பார்த்திருக்கவில்லையென்பதை அவள் முகபாவம் காட்டியது, ஆனால் கூச்சமுள்ள பெண்ணா கையால் தன் உணர்ச்சி வெளிப்படாமல் சமாளித்துக்கொண்டாள். அழுதழுது வீங்கியிருந்த அம்முகம் அவள் உள்ளத்தின் வேதனையைச் சின்னப்பனுக்கு அறிவித்தது. 'என்னைக் காப்பாற்றமாட்டாயா?' என்று கெஞ்சியது அப்பார்வை சின்னப்பன் துடித்தான் ஆனால் அவனால் என்ன செய்ய முடியும் ?

அவளை வெகு ஸ்வாதீனமாகப் பெயர்சொல்லியழைத்தான் முத்துத்தேவன் "அம்மா சௌந்திரம் இவன்தான் என் ஒரே தம்பி. தாயில்லாப் புள்ளே. நீ இவன் தாயார் கணக்குலே இருந்து கவனிச்சுக்கிட வேண்டியது என்ன, தெரிஞ்சுதா?'

"என்ன குளந்தே அய்யா சொன்னாப்போலே செய்யி இன்னமே அவருதான் உனக்கு..." கருப்பையா இந்த இடத்துக்குப் பொருத்தமான வார்த்தையொன்றைத்தேடித் திணறினான் பொங்கிவரும் கண்ணீரை அடக்கியவளாய் வீட்டினுள் மறைந்தாள் அவள்.

அந்த வாக்யத்தை அரைகுறையாய் விட்டு விட்டு, "நாளைக்குக் கலியாணமாயிட்டா எங்களையெல்லாம் பிரிஞ்சி போகணுமேன்னு அவளுக்கு ஒரே வருத்தம்" என்று விஸ்தரித்தான் அது எவ்வளவுதூரம் உண்மையென்பது அவனுக்கே தெரிந்திருக்கலாம்

'சரி, நேரமாவுது நாங்க வர்ரோம். அடுத்த வெள்ளிக்கிழமை முகூர்த்தம் வச்சிக்கிடலாம்" என்று முத்துத்தேவன் எழுந்தான் அவர்களை வாசல் வரை வந்து வழியனுப்பிவிட்டு, மடியிலிருந்த பணத்தை மீண்டும் எண்ணுவதில் முனைந்தான் கருப்பையா. கலியாணச் செலவுகளையெல்லாம் மாப்பிள்ளையே பொறுத்துக் கொள்வதால் அவனுக்கு அந்தக் கவலை இல்லை.

* * * *

நள்ளிரவு நேரம் நிலவின் ஒளி பால்போல் பரவியிருந்தது வீட்டுவாசலில் திறந்த வெளியில் போடப்பட்டிருந்த கயிற்றுக் கட்டில்களின் மீது அண்ணனும் தம்பியும் படுத்திருந்தனர். முத்துத்தேவனின் குறட்டை ஸ்ருதிலயத்தோடு தெரியாமல் வெகு ஒழுங்காய் வந்து கொண்டிருந்தது சின்னப்பனோ உறக்கம்வராமல் நெடுநேரம் படுக்கையில் புரண்டு கொண்டிருந்துவிட்டு எழுந்து உட்கார்ந்தான் அன்று பகலில் கருப்பையா வீட்டில் நடந்ததெல்லாம் அவன் நினைவுக்கு வந்து அவனை உன்மத்தன் போலாக்கிவிட்டன.

அண்ணன் கோபக்காரன் ஆனால் தம்பியிடம் அத்யந்த பிரேமை வைத்திருந்தான். சிறு பிராயத்திலேயே அவர்களது பெற்றோர் இறந்துவிட்ட பின் அவனே தம்பி சின்னப்பனுக்குத் தாயும் தந்தையுமாயிருந்து வந்தான் அவனது அன்பின் தன்மையை எண்ணும்போது அவன் சொல்லுக்கு எதிர்ச் சொல்லுரைக்க தம்பிக்கு எப்படி மனம் வரும் ?

ஆனால் விஷயம் சாதாரணமானதல்ல. சௌந்திரம் தன் காதலி; தனக்கே உரிமையாக வேண்டியவள். நேற்றுவரை அவர்கள் சந்தித்து ஒருவர்மீதொருவர் அன்பைப் பொழிந்து கொண்டனர். அவன் அவளுக்கு எத்தனையோ ஆசை வார்த்தைகள் கூறினான் அப்பேதை எல்லாவற்றையும் நம்பினாள். இப்போது...? நாளைக்கு அதே சின்னப்பனின் 'மதனி'யாக அவன் அவ்வீட்டில் நுழைந்து, முத்துத் தேவன் சொன்னபடி 'தாயின் ஸ்தானத்தை வகிக்க நேரிடும்போது அந்த முகத்தை ஏறிட்டுப் பார்க்கும் தைரியம் அவனுக்கேற்படுமா?

முடியாது. முடியாது அதைவிட தற்கொலை செய்துகொண்டு மடிவது மேல்.

ஆனால் எதற்கும் அண்ணனிடம் உண்மையைச் சொல்லிப் பார்த்தாலென்ன?

பொழுதுவிடியும் வரை காத்திருக்க அவனுக்குப் பொறுமையில்லை. முத்துவை எழுப்பினான்.

"அண்ணே, அண்ணே ஒரு வார்த்தை "

எடுத்ததுமே தூங்குகிற சிங்கத்தைத் தட்டியெழுப்பிய மாதிரி கோபம் வந்துவிட்டது முத்துத் தேவனுக்கு. வள்ளென்று விழுந்தான் அவன் 'என்னடாலே ஒரு நிமிஷம் கண்ணை மூட உடாமே...' கட்டிலில் உட்கார்ந்து கண்ணைக் கசக்கிக்கொண்டு நாற்புறமும் பார்த்தான்

"அண்ணே! ஒரு விசயம் கேக்கட்டுமா?" என்றான் சின்னப்பன்.

"என்னடா அது?"

"நீ கண்ணாலம் கட்டிக்கிட இருக்கியே. அந்தப் பொண்ணுக்கு..."

இந்தப் பிரஸ்தாபத்தைக் கேட்டதும் தேவனின் தூக்கக் கலக்கம் உடனே தெளிந்து விட்டதென்று சொல்லத் தேவையில்லை அதுவரையிலும அவன் அவளைப் பற்றித்தான் கனவு கண்டு கொண்டிருந்தான் "ஆமாண்டா. அந்தப் பெண்ணுக்கு என்ன?"

சின்னப்பன் சற்றுத் தயங்கினான். உரலில் தலையைக் கொடுத்துக் கொண்ட பின் உலக்கைக்குப் பயந்து என்ன செய்வது?" அவளுக்கு உன்னைப் பிடிச்சிருக்குன்னு என்ன நிச்சயம்? என்றான்.

"இவன் யாரடா பைத்தியக்காரன் என்பதுபோல் தம்பியை ஒரு முறை பார்த்தான் முத்துத் தேவன். "அட முட்டாள் பயலே! இந்த முத்துவைக் கண்டு மயங்காத பொம்பிளைங்களும் இருப்பாங்களாடா?" என்று கேட்டான் 'அண்ணே அந்தவிஷயத்துலே நீ நினைக்கிறது தப்பு.'

'என்னடா தப்பு? நீ ரொம்பக் கண்டுட்டயோ?' தேவனுக்கு மீண்டும் கோபம் வந்தது. இந்தப் பொடிப் பயல் தனக்கு எதிர் வார்த்தையாடுவதாவது?

'ஆமாம், அவளுக்கு வேறே ஒருத்தன் கிட்டே இஷ்டம். அதனாலே நீ அவளைக் கட்டிக்கிடறது நியாயமில்லே,' சின்னப்பனின் உள்ளத்திலும் கனல் மூண்டுகொண்டிருந்தது. அண்ணனின் பேச்சுக்கெல்லாம் சட்சட்டென்று பதில் சொல்லவாரம்பித்தான் முத்துத்தேவன் எழுந்துநின்றான். அவன் கண் விழிகள் பயங்கரமாய்ச் சுழன்றன; மீசை துடித்தது. தம்பியை விறைக்கப் பார்த்தான். 'டேய் சின்னப்பா, விளையாடாதே. யார் அந்தப் பயல்? அவன் பேரைச் சொல்லு. இந்த நிமிசமே போயி அவன் களுத்தைச் சீவிடுறேன்,' என்று கர்ஜித்தான். இரவில் சதாகாலமும் அவன் தலையணைக்கடியிலேயே இருக்கும் வெட்டரிவாள் தேவனின் கையில் பளபளவென்று மின்னிக்கொண்டிருந்தது. அவனது வார்த்தைகள் வெறும் மிரட்டல்ல அதை அப்படியே செய்துகாட்டத் தயங்கமாட்டானென்பது சின்னப்பனுக்குப் புரிந்தது.

ஆனால் அவன் கலங்கவில்லை. அண்ணனின் கொடூரப் பார்வையைத் தன் கண்களால் சந்தித்தான். அவனது உடல் நடுங்கவில்லை, நா குழறவில்லை.

'அண்ணே, அந்த ஆளைத் தேடி நீ ரொம்ப தூரம் போகவேணும் நான்தான் அவன்' என்றான்.

முத்துத்தேவன் இரண்டடி பின் வாங்கினான். மறுகணம் கடகடவென்று நகைத்தான் "டேய் பயலே நீ எருமைக்கடா கணக்குலே ராவாப் பகலா அந்தக் குளத்திலே துளைஞ்சுக்கிட்டிருந்தப்பவே ஒனக்குக் கொஞ்சம் பைத்தியம் பிடிச்சுப் போச்சுன்னு நான் நெனச்சுக்கிட்டேன். அது சரியாப் போச்சுடா. இல்லாட்டிப போனா நடுராத்திரியிலே தூங்கறவனை எழுப்பி இப்பிடியெல்லாம் உளறுவியா?......போடா பேசாமே படுத்துக்கடா" என்றான்.

'இந்தா நான் ஒன்னோடே வெளையாடலே ஐயனார் மேலே ஆணையாச் சொல்றேன். அவளைச் சந்திக்கிறதுக்காவத்தான் நானு குளத்துலே பளி கிடந்தேன். அதே ஐயனா சந்நிதியிலே அவளையே கண்ணாலங் கட்டிக்கிறதா சத்தியம் வேறே பண்ணிக் கொடுத்திருக்கேன். நானு உசுரோடேயிருக்கிறவரைக்கும் அவ கழுத்திலே நீ தாலி வைக்கக்கூடாது. மொதல்லே எனக்குப் பதில்சொல்லு.

தம்பி என்றுமில்லாத ஆவேசத்துடன் பேசியதைக் கேட்டதும் அண்ணன் மலைத்துவிட்டான். ஆனால் மறுகணமே சமாளித்துக்கொண்டு. "உம், அப்படியா?" என்று உறுமினான். தன் சந்தோஷத்துக் குறுக்கே நிற்பவன் சொந்த சகோதரனென்றாலும் அவனால் பொறுக்கக் கூடவில்லை.

"டேய் சின்னப்பா கூடப்பொறந்த தோசத்துக்குச் சொல்றேன். உசிர் மேலே ஆசையிருந்தா இந்த நிமிசமே ஊரை விட்டு ஓடிப்போயிடு" என்று அவன் எச்சரித்தான்.

'அந்தப் பேச்சே இங்கே வாணாம் அண்ணே இரண்டிலே ஒண்ணு தீர்ந்துடணும், உன் கையிலே அருவா இருக்குது எங்கையிலே தும்பு இருக்குது. (ஒரு கரு நிறமுள்ள பிஸ்டலைத் தூக்கிக் காண்பித்தான் சின்னப்பன்) அந்த அருவா அசைஞ்சுதோ, அதோடே ஒன் மூளையும் செதறிப்போகும் இதுவரைக்கும் என் குறி தவறினதில்லே...சின்னப்பன் பேசிக்கொண்டே போனான். விஷயம் இவ்வளவுக்கு முற்றும் என்று அவன் எதிர்பார்த்திருக்கவில்லையென்றாலும், அதற்காக வந்த வம்பை விட்டு விடவும் அவன் இஷ்டப்படவில்லை. அன்று கருப்பையா வீடு போய் வந்த பின் அவன் தன் ஆடைகளைக்கூட மாற்றியிருக்கவில்லை எனவே நிஜார்ப் பைக்குள் போட்டுக்கொண்ட பிஸ்டல் அப்படியே இருந்தது: ராணுவ சேவையின் போது அமுக்கிக் கொண்டு வரப்பட்ட ஆயுதம் அது.

முத்துத் தேவன் பிஸ்டலைப் பார்த்தான். என்னதான் முரடனானாலும் அவன் நெஞ்சம் சிறிது கலங்கத்தான் செய்தது பத்து நாட்களுக்கு முன்பு அவன் வீட்டுக் கொல்லையில் படமெடுத்தாடிய ஓர் நாக ஸர்ப்பத்தை சின்னப்பன் சுடும்போது அண்ணன் கண்ணால் கண்டிருந்தான் தம்பி துப்பாக்கியின் குதிரையை இழுத்தது தான் படாரென்ற ஒரு சப்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து புகையும் நெருப்பும் வெடி மருந்து நாற்றமும். அந்தப் பக்கம் ஸர்ப்பம் தலைவேறு உடல் வேறாகிக் கிடந்தது. அப்பேர்ப்பட்ட ஆயுதத்தினிடம் விளையாடுவதென்றால்.........?

அண்ணனும் தம்பியும் ஒருவரையொருவர் எரித்து விடுவது போல் பார்த்துக்கொண்டு நின்றார்கள். "ஹூம். ஹூம்." என்று முத்துத்தேவன் சிறிப் பெருமூச்சு விட்டானேயொழிய ஒரு அடி முன்னெடுத்து வைக்க அவனுக்குத் தைரியமில்லை.

'ஐயையோ அண்ணாச்சி!' என்றொரு குரல் கிளம்பியது தூரத்தில் கருப்பையா குடல் தெறிக்க ஓடி வந்துகொண்டிருந்தான். அந்தக் கூக்குரலைக் கிளப்பியது அவன்தான். நெருங்க நெருங்க அவனது இரைச்சல் வலுத்தது இருவரும் சற்றே அவன் பக்கம் திரும்பினர்.

முத்து அண்ணே! மோசம் பண்ணிப்பிட்டாளே அந்தப் பாவிப் பொண்ணு' என்று கைகளை நெறித்துக்கொண்டு அலறி அபிநயித்தான் கருப்பையா.

"என்னடா நடந்துட்டுது?' என்று தேவன் அதட்டினான்.

'உன்னைக் கட்டிக்கிட இஷ்டமில்லேன்னு வேஷத்தை முழுங்கிப்புட்டு சாகக்கிடக்கிறா அவ நான் என்ன பண்ணுவேன்? முத்துத் தேவனிடம் வாங்கிய ரூபாயை முழுசாகத் திருப்பிக் கொடுக்கவேண்டிவரும் என்று நினைத்ததுமே கருப்பையாவின் கண்களில் நீர் நிரம்பிவிட்டது. முத்துத்தேவன் செயலற்று நின்றுவிட்டான், சின்னப்பன் ஒருவன் தான் மூளையுடனும் நிதானத்துடனும் நடந்துகொண்டான். ஏ கருப்பையா எல்லாம் உன்னாலே வந்தது. இப்ப அழுது என்ன பிரயோசனம்? வா வைத்தியர் ஊட்டுக்குப் போயி அவரை எழுப்பிக் கூட்டிப்போவோம்...... அண்ணே நீயும் வா.' என்றழைத்தான் சின்னப்பன் 'அண்ணே' என்ற அந்தச்சொல் முத்துத்தேவனைத் தூக்கிவாரிப் போட்டது தன் தவறையும் அவசரபுத்தியையும் அதன் விபரீத பலனையும் எண்ணி வருந்தியவனாய் மௌனத்துடன் தம்பியைப் பின் தொடர்ந்தான்.

* * *

பொழுது விடியும்நேரம். கருப்பையா தன் வீட்டுத்தாழ்வாரத்தில் வைத்தியர் வைத்தியலிங்கம் பிள்ளைக்குத் 'தண்ணி காட்டி' கொண்டிருந்தான் 'வைத்தியரே. நெசத்தைச் செல்றேன். வைத்திய சாஸ்திரத்துக்கே நீங்கதான்...(இங்கு தன் வழக்கப்படி ஒரு பொருத்தமான வார்த்தையைத் தேடி விழித்தான் கருப்பையா) ராசா அகஸ்தியர், தேரையர், தன்வந்திரி இவங்க எல்லாரும் உங்ககிட்டே பிச்சை வாங்கணும், உங்க சாமர்த்தியத்துக்கு கைநிறைய பொன்னை வாரிக்குடுத்தாலும் போறாது ஆனா நான் ஏளை......'

வீட்டினுள்ளிருந்து வெகு கோபத்துடன் வெளிவந்தான் முத்துத்தேவன். 'ஏ கருமிப்பயலே உன் மருமவ உசுரையே காப்பாத்தின புண்யவான் அவரு. அவருகிட்டேயும் பளயகதை படிக்கிறயாடா?' என்று ஒரு அதட்டுப்போடவும் கருப்பையா கதிகலங்கிவிட்டான் தேவன் மற்றவர்பக்கம் திரும்பினான். அவன் குரலில் நயமும் நன்றியும் ததும்பின. 'வைத்தியர் ஐயா இவன் கெடக்கறான். நீங்க மத்தியானமா என்னெக் கொஞ்சம் வந்துபாருங்க அந்தப் பொண்ணை தன் தம்பிக்குத்தான் கட்டிக்குடுக்கப் போவுது. வெள்ளிக்கிழமை முகூர்த்தம் நீங்கதவறாமேவந்திருந்து குளந்தெங்களை உங்க மனசார ஆசிர்வாதம் பண்ணணும். ஏதோ உங்க புண்யத்துலேதான் அவ சாகாமப் பொளைச்சா இது ஒங்க பிச்சை"

முத்துத்தேவன் தங்களுடன் வாய் திறந்து நாலு வார்த்தை பேசினாலே அதை ஒரு பெரிய மரியாதையாக எண்ணக்கூடிய பிரகிருதிகள் சிலர் அவ்வூரில் இருந்தனர் வைத்தியலிங்கம் பிள்ளையும் அவர்களில் ஒருவர். வெகு சந்தோஷத்துடன் கிளம்பினார் அவர் 'ஏ கருப்பையா ஞாபகம் வச்சிக்கோ. வெள்ளிக்கிளமை கண்ணாலம் மாப்புள்ளே நானில்லே, என் தம்பி சின்னப்பன் என்ன...?' என்றான் தேவன்.

கருப்பையா சற்று யோசித்தான். அப்பொ அந்த ரூபாயை நான் திருப்பித் தரவேண்டியதில்லேன்னு சொல்லு'

முத்துத்தேவன் இடியிடியென்று நகைத்தான். 'வேண்டாண்டா வேண்டாம். ஆனை வாயிலே போன கரும்பும் கருப்பையா பெட்டியிலே போன காசும் திரும்புமா?...அதை நீயே வச்சுக்கோ'

'உள்ளே சின்னப்பனும் சௌந்திரமும் ஏதோ பேசி நகைக்கும் ஒலி கேட்டது ஏதோ மகத்தான தியாகத்தைச் செய்துவிட்ட ஆத்மதிருப்தியுடனும் உற்சாகத்துடனும் தம்பியின் கலியாணச் செய்தி சொல்ல கிராம முன்சிப்பின் வீடு நோக்கி நடந்தான் முத்துத்தேவன்.

[சில்லரை விலைகள்]

(விற்பனை வரி தனியாக செலுத்தவேண்டும்)

சென்னை, மே 8—

அன்றுட வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பண்டங்களின் விலைவாசிப் போக்கைக் குடும்பத்திலுள்ளவர்கள் தெரிந்து கொள்வதற்கு உதவியாகச் சென்னை நகரிலுள்ள நிலவரத்தைக் கீழே பிரசுரித்திருக்கிறோம். இவையெல்லாம் அவ்வப்போது மாறுதலுக்குட்படக்கூடியவை. எனவே இதில் கொடுக்கப்பட்டிருப்பதைப் போலவே சில பண்டங்கள் கிடைக்கலாம் அல்லது சற்று ஏறத்தாழவும் சில இடங்களில் விற்கப்படலாம். இருப்பினும் பொதுவாக விலைகளின் ஓட்டத்தை உணர்த்துகொள்ள இது பயன்படும். இப்புதிய பகுதி இனி பிரதி இதழிலும் இடம் பெறும்.

		ரு	அ.	பை.
உப்பு	1–படி	0	1	0
துவரம் பருப்பு	1–படி	0	15	0
உளுத்தம் பருப்பு	,,	1	2	0
பைத்தம் பருப்பு	,,	1	3	0
உளுந்து	,,	0	14	0
கடலைப் பருப்பு	,,	0	10	0
கடலை	,,	0	8	7
எள்ளு	,,	1	4	0
கடுகு	1–வீசை	1	14	0
வெந்தியம்	,,	1	14	0
மிளகு	,,	18	0	0
மிளகாய்–ராமநாதபுரம்	,,	3	8	0
தனியா	,,	1	14	0
புளி [புதுசு]	,,	1	3	0
சிரகம்	,,	4	12	0
வெல்லம்	,,	1	2	0
நாட்டு சாக்கரை	,,	1	4	0
அஸ்கா சர்க்கரை	,,	1	4	6
மஞ்சள்	,,	2	2	0
குங்குமம்	,,	1	8	0
பாதாம்	,,	3	8	0
சீயக்காய்	,,	1	2	0
சீயக்காய் பொடி	,,	1	12	0
வாஷிங் சோடா	,,	0	9	0
திராக்ஷை	,,	5	0	0
மிந்திரிபருப்பு	,,	4	0	0
களிப்பாக்கு	,,	5	6	0
நெய்	,,	6	12	0
நல்லெண்ணெய்	,,	3	1	0
ஜவ்வரிசி	,,	1	14	0
தேங்காய் எண்ணெய்	,,	3	8	0
கடலெண்ணெய்	1–வீசை	2	8	0
விளக்கெண்ணெய் பாட்டில்	பெரிசு.	2	0	0
,,	சிறியது	0	10	6
காப்பிக்கொட்டை பீபரி	1 வீசை	5	9	0
,, 'A' ,,	,,	5	3	0
,, "R" பீபரி	,,	4	15	0
பார்லி	,,	2	0	0
மைலோ (பெரியது)		2	5	9
கரி 1 மூட்டை	(56 ப.)	4	0	0
காமதேனுவனஸ்பதி 10 பவுண்டு டின்		11	2	6
,, 5	,,	5	13	3
,, 2	,,	2	6	0
'டால்டா' வனஸ்பதி	10 ப	11	8	0
டிை	5 ப	6	0	0
கற்பூரம்	1–பலம்	0	7	0
சாம்பிராணி	1 பலம்	0	6	6
பெருங்காயம்	,,	0	4	0
எல் ஜி பெருங்காயம்	1 சேர்	2	2	0
டிை	½ சேர்	1	2	0
தீப்பெட்டி. 1 டஜன்		0	8	3
'ரௌண்டிரீஸ் (R T.) கொக்கோ	½ ப	1	7	0
ஸன்லைட் சோப்	பெரியது	0	5	0
,,	சிறியது	0	3	0
ஹமாம் சோப்		0	6	0
லைப்பாய்		0	5	6
டாம்கோ 501 பார்		1	3	0
லக்ஸ்		0	6	0
ரெக்ஸோனா		0	9	0
மார்கோ சோப்பு		0	8	6
மைசூர் "ஸாண்டல்' சோப்		0	10	0
கேரளா 'ஸாண்டல் சோப்பு		0	7	6
மெடிகோ டாயிலட் சோப்		0	8	6
காட்ரீஜ் சோப்	நெ 1	0	11	0
மேட்டூர் சந்தண ஸோப்	1 கட்டி	0	8	6
ரூப் டாய்லெட் ஸோப்—ஸ்டாண்டர்டு	ஸைஸ்	0	6	0
,,	கெஸ்ட் ஸைஸ்	0	2	0
காவேரி ஸூபர் கார்பாலிக்	(பெரிது)	0	4	3
,,	(சிறியது)	0	2	3
காவேரி வாஷிங் கேக்		0	3	9
காவேரி வாஷிங் க்யூப்		0	3	0
காவேரி பார் ஸோப்		1	2	6
'டாம்கோ' ஹேர் ஆயில்	(சிறிய பாட்டில்)	1	1	0
டிை	(பெரிய பாட்டில்)	2	10	0
குங்குமப் பூ	[1 பாட்டில்]	1	4	0
"பினைல்" பாட்டல்		0	13	0
குடிகூரா பவுடர்	1 டின்	2	8	0
கீம் டூத் பேஸ்ட்		0	15	0
மாக்லீன்பேஸ்ட்		1	3	0
பார்ஹான்ஸ் பேஸ்ட்	(பெரியது)	2	12	0
,,	(சிறியது)	1	8	0
7 ஓ "க்ளாக்" க்ஷவர ப்ளேட்	(10 கொண்ட பாக்கட்)	0	15	0
டிை	(5 கொண்ட பாக்கட்)	0	7	6
கோரா டீ (டஸ்ட்)	1–பவுன்	2	5	6
கோரா டீ	½ பவுன்	0	9	6
கோரா டீ	¼ பவுன்	0	4	9

கண்ணழகி

பி.வி

நான் அடிக்கடி லலிதாவைப் பார்க்கச் செல்வதுண்டு அவள் என்னோடு கல்லூரியில் படித்தாள் அப்பொழுது உண்டான நட்பு வளர்ந்துகொண்டே வந்தது ஒரு வாரத்திற்கு குறைந்த பட்சம் இரண்டு தடவையாவது அவள் வீட்டிற்குப்போவேன் நான் போகாவிட்டால் அவளுக்குக் கோபம் வந்துவிடும் வேலைக்காரனிடம் கடிதம் எழுதிக் கொடுத்தனுப்புவாள் இரண்டு பக்கங்கள் ஒரே வசை மாரி! கடைசியில் ஒரு வரி எழுதி இருப்பாள் ''நான் ஏதாவது தவறுகள் செய்திருந்தால் தயவு செய்து மன்னிக்கவும்' என்று அதை படித்ததும் தவறுதலாக ஒருவா காலை நன்றாக மிதித்துவிட்டு 'மன்னிக்கவும்' என்று ஒரே வார்த்தையில் கோரும் மன்னிப்பின் ஞாபகம்வரும்

அன்று வழக்கம்போல் மத்தியானம் 3-மணிக்குப் போனேன் எப்பொழுதும் என்னைக் கண்டதும், 'கல்யாணி! வா, வா உன்னோடு இன்று ரொம்ப நேரம் பேசவேண்டும் என்று அன்போடு அழைப்பவள் என்னை 'வா!' என்று கூடச் சொல்லாமல் ஏதோ ஒரு கடிதத்தைத் தீவிரமாகப் படித்துக்கொண்டிருந்தாள் எனக்கு என்னவோ போலே இருந்தது ஏனெனில் சில சமயங்களில் நாம் மற்றவர்களிடம் குறை காணும்பொழுது அவர்களுடைய நிலையைப்பற்றி சிந்திப்பதே கிடையாது அவர்களுடைய மனோநிலையுடன் நாம் இருந்திருந்தால் என்ன செய்திருப்போம் என்று நாம் ஒரு கணம் யோசித்திருந்தால் அவர்கள் குற்றமே செய்யாதவர்கள் என்று கூறிவிடுவோம்.

அவளுக்கு அருகாமையிலிருந்த நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு 'என்னடீம்மா! அவ்வளவு விசேஷமான காகிதம்! யார் எழுதியிருக்கா? உங்கம்மா ஊருக்கு வரச்சொல்லி எழுதியிருக்காளோ? என்றேன். அவள் என்னைத் திரும்பிப் பார்த்தபொழுது அவளுடைய கண்களில் நீர் நிரம்பியிருந்தது. "ஆண்களெல்லாம் அயோக்கியர்கள்! அவர்களுடைய நெஞ்சத்தின் ஆழத்திலே வஞ்சனை பதுங்கிக்கொண்டிருக்கின்றது இன்று நடப்பதுபோல் நாளை நடக்கமாட்டார்கள்!" என்றாள் கோபமாக.

எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. தெரியாத்தனமாக சந்தர்ப்பம் தவறி வந்துவிட்டேனே என்று சந்தேகம் உண்டாயிற்று இது நாள்வரை அவளை நான் என் சகோதரிபோல் மதித்து வந்திருக்கிறேன் அவளும் அடிக்கடி என்னை 'நீதான் என் அக்கா!' என்று சொல்வதும் உண்டு அதனால் துணிவோடு 'அந்தக் கடிதத்தைக் கொடு இப்படி!' என்றேன். 'என் மனது என்னவெல்லாமோ எண்ணிற்று. ஒரு வேளை அவள் கணவர் 'காம்ப்' போய் ஒரு மாதமாகிற்றே அவர்தான் ஏதேனும் தவறுதலாக நடந்துகொண்டாரோ என்ற சந்தேகம் வளர ஆரம்பித்தது அவள் 'கடிதத்தைப் படித்தால் உனக்கு ஒன்றும் புரியாது!' என்றாள் கண்களைத் துடைத்துக்கொண்டே 'நீ தான் புரியும்படியாக விஷயத்தையாவது சொல்லேன்! தகுந்த பரிகாரம் செய்வோம்' என்று அவளிடம் வேண்டிக்கொண்டேன்

'உனக்கு இன்று ஒரு கதையே சொல்லப்போகிறேன் முழுவதையும் நினைத்துப் பார்த்தால் கதை போலத்தான் இருக்கின்றது!' என்று சொல்ல ஆரம்பித்தாள் லலிதா

'நான் பள்ளிக்கூடத்தில் படிக்கும்பொழுது என்னோடு மீனாக்ஷி என்று ஒரு பெண் படித்து வந்தாள் அவள் எங்கள் தெருவுக்கு அடுத்த தெருவில்தான் வசித்து வந்தாள் அவளுடைய தகப்பனார் அவள் குழந்தையாக இருக்கும்பொழுதே இறந்து போய் விட்டார். அதனால் அவள் தாய்தான் அவளுக்குத் துணையாக பள்ளிக்கு வந்து செல்வாள் அவளுக்கு சகோதரர்களோ சகோதரிகளோ கிடையாது. நான் முதன் முறையாக ஒன்பதாவது வகுப்பில் அவளைச் சந்தித்தேன்

'மீனாக்ஷி முதல் நாளே என் மனதைக் கவர்ந்துவிட்டாள் நாம் வாழ்க்கையில் காண்பதற்கு விரோதமாக அவள் பெயருக்கேற்ற உருவம் பெற்றிருந்தாள் அவளுடைய கண்கள் மிகச் சக்தி வாய்ந்தவை, நான் அவை போன்ற கண்களை இன்று வரை எங்குமே பார்த்ததில்லை மீனைப் போன்ற கண்களிலே சுழன்றுவரும் கரியவிழி கவர்ச்சியின் சிகரத்திலே இருந்தது என் பெண் மனத்தையே கவர்ந்தது என்றால் ஆண்கள் தப்ப முடியுமா? நான் அவளோடு பேச விரும்பினேன் அன்று முதல் அவளருகில் உட்கார்ந்தேன் வகுப்பில். பாடங்களை மிகவும் நன்றாகப் படித்துக்கொண்டு வந்து கேள்வி கேட்டவுடன் பதில் கொடுப்பவள் மீனாக்ஷி ஒருத்திதான்

''அவள் வீட்டிற்கு தினமும் சாயங்கால நேரத்தில் போவேன் பல விஷயங்களைப்பற்றிப் பேசுவோம். ஒரு நாள் அவளைப் பார்க்காவிட்டால் எனக்கு அன்று தூக்கம் வராது அவளுடைய கண்கள்தான் அனைத்துக்கும் காரணம் இத்தனைக்கும் அவள் மாநிறமாகத்தான் இருப்பாள் முகம் நிறைய பவுடர் பூசி கண்களில் மைதீட்டி வரமாட்டாள் அதற்கெல்லாம் பணம் நிறையவேண்டும் என்று அவளுடைய அம்மா அவளுக்கு ஒன்றும் வாங்கித்தரமாட்டாள்

என் பொறுமை எல்லையைக்கடந்துவிட்டது சற்று கடுகடுப்புடன் 'என்னமோ கதை வளர்க்கிறாயே! என்ன நடந்துவிட்டது என்பதை சுருக்கமாகச் சொல்லாமல்!' என்றேன்

'விவரமாகத்தான் சொல்லவேண்டும். இல்லாவிட்டால் உனக்கு சரியாக என் மனது அமைதி இழந்த காரணத்தை அதனால் என் கண்களில் நீர் ஏன் வந்தது என்பதை அறிய முடியாது' என்று பதில் கொடுத்துவிட்டு மேலும் கூறலானாள்

''அவள் கண்களினால்தான் மீனாக்ஷி எல்லோரையும் வசீகரித்தாள் அவள் அழகு இயற்கையாக அமைந்தது. என் சிநேகிதிகள் எத்தனையோ பேர் கண்களில் பலவிதமாக மைதீட்டி அவள் கண்களைக் காப்பி அடித்துப் பார்த்தனர் அதெல்லாம் ஒன்றும் நடக்கவில்லை அந்த வருடம் முதலாவதாகப் பரீக்ஷையில் தேறினாள் மீனாக்ஷி அவள் ஐந்தாம் பாரம் வந்தது முதல்தான் சேதுராமனுக்கு அவளைப்பற்றித் தெரியும் ஏனென்றால் சேதுராமன் எங்கள் வீட்டிற்கு அடுத்த வீட்டில் வசித்த ஏகாம்பர அய்யரின் ஏக புதல்வன். மீனாட்சி ஐந்தாம் பாரம் படிக்க ஆரம்பித்தது முதல் எங்கள் வீட்டிற்கு வந்து போவதுண்டு.

'ஒரு நாள் சேதுராமன் நாங்கள் இருவரும் பேசிக்கொண்டிருக்கும் பொழுது எங்கள் வீட்டிற்கு வந்தான்.

அன்று அறிமுகம் செய்துவைத்தேன் மீனாட்சியை அவனுக்கு மீனாட்சியும் அவனோடு சகஜமாகப் பழகினாள் அவனும் என்னைப்போல அவள் கண்களுக்கு அடிமையாகிவிட்டான் ஆனால் அவனுக்கும் எனக்கும் ஒரே வித்தியாசம் அவன் அவளை மணக்க விரும்பினான் நான் அவளுடைய சிநேகத்தை விரும்பினேன்

நாள் செல்லச் செல்ல சேதுராமன் பழக்கத்தை அதிகப்படுத்திக்கொண்டான் மீனாட்சியும் சாதாரணமாகப் பழகினாள் நான் இரண்டாம் வருடம் என் கல்யாணத்திற்கு முன்பு ஊருக்குப் போயிருந்தபொழுது சேதுராமனும் எங்கள் வீட்டிற்கு வந்திருந்தான் அப்பொழுது மீனாட்சி வந்திருந்தாள்.

அன்று அவன் கூறிய வார்த்தைகள் இன்றும் எனக்குத் தெளிவாக ஞாபகம் இருக்கின்றன அழகான அடுக்குத் தொடர் 'ஆலவாய் நகரில் அமர்ந்திருக்கும் அன்னை அங்கயற் கண்ணியின் அவதாரம் நீ!' என்று கூறி மீனாட்சியை வெகுவாகப் புகழ்ந்தான் போன வருஷம் மீனாட்சியின் தாயாரிடம் அவளை மணந்துகொள்ளத்தான் தயாராக இருப்பதாகவும் தபால் ஆபீஸில் வேலை பார்ப்பதால் தனக்கு மாதச் சம்பளம் ரூ 100க்கு அதிகமாக வருவதாகவும் கூறித் தன் விண்ணப்பத்தை சமர்ப்பித்தான் சேதுராமனின் தகப்பனாரும் ஜாதகங்கள் பொருந்துவதால் தகுந்த வரதக்ஷிணை இருந்தால் முடித்துவிடலாம் என்று சொல்லிவிட்டார்.

பெரியவர்கள் பேச்சு வார்த்தை முடிந்துவிட்டது மீனாட்சியின் தாயார் நிலத்தை விற்று ரொக்கமாக ரூ.5000 வாங்கினாள் கல்யாணத்திற்காக, எல்லா ஏற்பாடுகளும் நடக்க ஆரம்பித்தன ஏற்பாடுகள் எல்லாம் இந்த ஒரு வாரமாகத்தான் நடந்துகொண்டிருந்தன. ஏனெனில் அறுவடை முடிந்த பிறகுதான் இந்த வருடம் நிலம் விற்கப்பட்டது அநேகமாக சித்திரையில் கலியாணம் முடிந்துவிடும் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். என் உயிர்த் தோழி மீனாட்சி அல்லவா! பத்து நாள் முன்னதாகவே ஊருக்குப் போய்விடவேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தேன்

இருபது நாட்களாக மீனாட்சியிடம் இருந்து கடிதமே வரவில்லை அவளைக் கோபித்துக்கொண்டு இரண்டு நாட்களுக்கு முன் ஒரு கடிதம் எழுதியிருந்தேன் அவளுடைய பதில்தான் இது! படி. நீயே படித்துப்பார்! என்றாள் லலிதா கடைசியாகத் தழுதழுத்த குரலில்.

கடிதத்தை வாசித்தேன்.

திரூர்,
20—2—50

பிரிய லலிதாவுக்கு.

இதுவரை கடிதம் எழுதாமல் இருந்ததற்கு மன்னிக்கவும் என் மனநிலை தெரிந்திருந்தால் நீ இது போல என்னைக் கடிந்து எழுதி இருக்கமாட்டாய் பெரிய மழை கொட்டு கொட்டென்று கொட்டப் போகிறது என்பதற்கு அறிகுறியாக கருமேகம் திரண்டிருக்கும் பொழுது ஆனந்தத்துடன் மழையை எதிர்பார்க்கிறோம் பயிர்கள் செழிக்கும் என்று ஆனால் எங்கிருந்தோ ஒரு புயல் காற்று தோன்றி மேகங்கள் இருந்த இடம் கூடத் தெரியாமல் மேகக்கூட்டத்தை சிதற அடித்துவிரட்டி விடுகின்றது. அப்பொழுது நமக்கு எவ்வளவு ஏமாற்றம் உண்டாகிறது? சிறிது குளிர்ந்த காற்று அடித்திருந்தால் மழை பெய்திருக்காதா? இதே போன்றதே இன்று என் வாழ்க்கை நிலை.

நான் உனக்குப் போன கடிதம் எழுதிய தினம் முதல் எனக்கு ஜுரம் உண்டாகி பெரியம்மை போட்டிருந்தது கடைசியாக முத்துக்கள் உடலிலிருந்து மறையும் பொழுது இடது கண்ணில் மாத்திரம் பூ விழுந்துவிட்டது. நான் தலைக்கு ஜலம் விட்டுக்கொண்டு பத்து நாட்கள் ஆகின்றன இடது கண் குருடாகிவிட்டது என்பதை என்னால் நினைக்கக்கூட முடியவில்லை இன்று நான் ஒற்றைக் கண்ணால் தான் பார்க்கிறேன்.

இன்றுதான் உண்மையை உணருகிறேன். இயற்கையில் மிகவும் அழகான கண்கள் படைத்தவர்கள் விழியில் கோளாறு இருந்துதான் தீரும் என்பதை என் கண்கள் எனக்கு கர்வம் அளித்தன இன்று அவைகளே என் கர்வத்தை அழித்துவிட்டன, என் கண்களில் ஒன்றைத்தான் இழந்தேன் ஆனால் என் வாழ்க்கையே இருண்டுவிட்டது அன்று அவர் வந்து பார்த்துவிட்டு, என்னிடம் முகம் கொடுத்துப் பேசாமல் சென்றுவிட்டார் அவருடைய தகப்பனார் ஒரு சிறிய துண்டுக் காகிதத்தில் "என் பிள்ளை குருட்டுப் பெண்ணை மணக்க விரும்பவில்லை!" என்று எழுதிவிட்டார்.

எனக்கு நேராக எழுத அவருக்கு தைரியம் வரவில்லை இல்லாவிட்டால் அவரே எழுதி இருப்பாரே! இருந்த நிலமும் விற்கப்பட்டு பாதிப் பணமும் பாழாகிவிட்டது பரவாயில்லை! உலகத்தில் மக்களின் மனதை உணரக் கடவுள் ஒரு சந்தர்ப்பத்தை என் வாழ்க்கையிலே உண்டாக்கிவிட்டார்!

எனக்காக நீ வருந்தாதே! என் வருத்தத்தை அடக்கிக்கொண்டு விவரமாக எல்லாவற்றையும் எழுதி விட்டேன்.

உன் பிரியமுள்ள,

மீனாட்சி

என் கண்களைத் துடைத்துக்கொண்டேன் கண்ணை மூடிக் குருடியான கதை என் தொண்டையை அடைத்துக்கொண்டது பேச முடியாமல் லலிதாவைப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருந்தேன்.

ஆஸ்
த்மா
அபா
யத்தை

அனுபவ ஸம்மதமான
மருந்தினால்தான்
தடுக்கலாம்

தாற்காலிகமான குணததை சீக்கிரத்தில்க் கொடுக்கும் மருந்துகள் கடைசியில் வியாதியை முற்றவைக்கின்றன. பலவருஷ அனுபவத்தைக் கொண்டு தயாரித்த "புரோஹித் ஸ்வாஸஹரி" தான் சாஸ்திரீக முறையில் கைகண்ட ஔஷதமாக அனுமானிக்கப்பட்டிருக்கிறது.

புரோஹித் ஸ்வாஸஹரி ஒன்றுதான் உட்கொண்ட ஆரம்பத்திலிருந்தே கபத்தை க்கரைத்து அஜீரணத்தை குணப்படுத்தி நுரையீரல்களை பலப்படுத்தி ஆஸ்த்மாவினின்றும் பூரண சௌக்கியத்தை நிச்சயமாக அளிக்கிறது. ரூ 3-8, ரூ 6, ரூ 10. பாக்கிங்களில் எல்லா இடங்களிலும் கிடைக்கும். அல்லது "டாக்டர் புரோஹித் பார்மஸி, கோலாப்பூர்" விலாசத்திற் கெழுதி பெற்றுக் கொள்ளலாம்.

மதருஸ் ஸ்டாகிஸ்டுகள் : (1) அப்பா & கோ, சைனு பஜார் (2) ஜெ. பலாபாய் & கோ, 260, சைனு பஜார் ரோட் (3) தாதா & கோ, நைநியப் பநாயக் கன் தெரு.

மதுரை ஸ்டாகிஸ்டு :
என். ஆர். ஸவாமி கெமிஸ்ட்.

புரோஹித ஸ்வாஸஹரி